175

ஹரிச்சந்திரன்

அல்லது ஸத்திய ஸ்தாபனம்

V. V. தேவநாதன், பி.ஏ., பி.எல்.,

ராம லீலையின் நூலாசிரியர்

பாளையங்கோட்டை:

[illegible]ங்கோட்டை பிரிண்டிங் பிரஸ்

1918

224899

ஸ்ரீ

ஹரிச்சந்திரன்

அல்லது ஸத்யஸ்தாபனம்

அங்கம் 1 — காக்ஷி 1

விச்வாமித்ரன் ஆச்ரமத்திற்கு அடுத்த சோலை
விச்வாமித்ரனும், சுக்ராசாரியாரும் நின்றுகொண்டிருக்கிறார்கள்.

விச். பாருக்கொருவன் பரதார சகோதரன் வெம்
போருக்கொருவன் புகழுக்கு மறைப்பொருட்கும்
நேருக்கும் வீடா மனுநானெறிக்கும் பொறைக்கும்
ஆருக்குமிக்கா னரிச்சந்திர னுமென்றான்.

சுக். நான் அறிந்தவரையிலும் வசிஷ்டனுரைத்தது வாஸ்தவமே. இதன்மீது தர்க்கம் வருவதற்கு யாதொரு காரணமும் காணப்படவில்லையே.

விச். வசிஷ்டன் வாக்கில்வந்தது வாஸ்தவமென்பது அனைவரும் அறிந்த விஷயமே. ஆனால் வசிஷ்டன் சொல்லி முடித்ததும் நாரதன் என்னைநோக்கி 'வசிஷ்டனுடைய சிஷ்யன் பாருக்கொருவன் என்றால் வசிஷ்டனும் பாருக்கொருவன் என்று சொல்வது போலல்லவா' என்றான்.

சுக். நாரதன் இருந்தான் என்றால் கலகம் விளைந்தது என்று சொல்வதுபோல் ஆயிற்று. நாரதன் ஒருவன் இல்லாமலிருந்தால் உலகில் கலகம் என்பதே இருக்காது.

விச். நீ சொல்வது சரியல்ல. நாரதன் கலகக்காரன் என்று பூவுலகோர் சொல்வது புத்தியில்லாமையினால்தான்.

உலகோருடைய நன்மையை நாடித்தான் நாரதன் செய்வ தெல்லாம். நாரதன் கலகம் என்று சொல்லும் ஒவ்வொரு செயலினுலும் யாராவதொருவருக்கு நன்மையே விளையும் என்பதை உறுதியாகக்கொள். நான் இப்பொழுது உன்னி டத்தில் சொல்லிவரும் இந்த விஷயத்திலும் ஹரிச்சந்திரனு டைய நன்மையை நாடியேதான் நாரதன் எனக்கும் வசிஷ்ட னுக்கும் வாக்குவாதத்தை உண்டுசெய்தான்.

சுக். ஆனல் என்னதான் நடந்தது தேவஸபையில்?

விச். நாரதன் என்னிடம் மற்றவர் அறியாதபடி சொன் னதும் தேவஸபையில் பலருமறிய நான் எழுந்திருந்து 'வசிஷ்டன் ஹரிச்சந்திரன் குணதிசயங்களை தான் ஒருவனே அறிந்தவன்போல் மிகவும் பேசுகின்றான். என் சிஷ்யனுகிய த்ரிசங்குவின் மகனுகிய இவன் குணத்தை நான் அறிவேனே யன்றி வசிஷ்டன் சிறிதும் அறியான். வாஸ்தவத்தில் அவன் சொல்லியதுபோல் ஹரிச்சந்திரன் பாருக்கொருவன் என்று புகழத்தக்கவனேதான். யேனெனில் பிறர் மனைவியாவிக்கு மாரன், புத்தியிலாதவன், அவனிடம் போரில் புறமே முன் நிற்கும்', இவ்வாறெல்லாம் வாஸ்தவமாய் வசிஷ்டன் சொல்லி யவைகளையே வற்புறுத்திச் சொல்லி நின்றதும் அகஸ்மாத் தாய் நான் சொல்லிய பதங்களுக்குள்ள விபரீதார்த்தத்தை முன்னிட்டு நாரதன் எழுந்திருந்து 'வசிஷ்டா! விச்வாமித்ரன் என்ன சொன்னுன் பார்த்தாயா? நீ மிகவும் துதித்த ஹரிச்சந் திரனை

'வெய்யன் பதகன் பாதார விருப்பன் வீணன்
பொய்யன்னிறையும் பொறையுஞ் சிறிதுமில் புல்லன்
கையன் கபடன் கயவன்றனை நல்லனெனறிவ்
வையன் திருமுன்னுரைத்தா யிதென்னுகவென்றுன்'

என்று சொல்லி முடித்தான். 'நாரதனுடைய உள்ளெண்

ணத்தை அறிந்தவர்களாய் நாங்களும் ஹரிச்சந்திரனை பரீக்ஷைக்குள்படுத்த ஏற்பாடுகள் செய்துகொண்டோம்.

சுக். வாஸ்தவத்தில் அவன் யோக்யன் என்று தெரிந்திருக்கிறது. எதற்காக அவனை வீணாக தூஷித்துப் பரீக்ஷை செய்யவேண்டும்?

விச். ஸாதாரண மனுஷ்யர்களைப்போல் இவ்வளவு சொல்லியும் நீயும் எங்கள் எண்ணத்தை அறிய அசக்தனாய் இருக்கின்றாயே! வசிஷ்டன் அவன் சிஷ்யனை தேவலோகத்தில் ப்ரசித்தமாக்கினான். என் சிஷ்பனுடைய புத்திரனை ஈரேழுலகத்திலும் நிகரில்லாதவன் என்று ப்ரசித்தமாக்கப் போகின்றேன் பார். ஹரிச்சந்திரன் என்றால் சத்யவான் என்று அர்த்தம் ஏற்படுத்தப்போகின்றேன். அவ்வாறு செய்ய ஒரே மார்க்கம்தான் இருக்கின்றது. மனுஷ்யனால் சகிக்கமுடியாத அம்மாதிரியான கஷ்டங்களையெல்லாம் அடையவைத்து அப்பொழுதும் சத்தியமே ப்ரதானமென்று வாழ்வதைப் பார்த்தால் எல்லோரும் புகழ்வார்கள். ஐஸ்வர்யமுள்ளவன் தானம் கொடுத்தால் 'இருக்கின்றது கொடுக்கின்றான்' என்றுதான் ஜனங்கள் சொல்வார்கள். ஆனால் தன் போஜனத்திற்கே ஒன்றுமில்லாதிருக்க, கிடைத்த சிறிய பொருளை ஒருவன் தானம் கொடுத்துவிடுவானாகில் அவனையே விசேஷமாக எல்லோரும் துதிப்பார்கள்.

சுக். ஹரிச்சந்திரனை கஷ்டதிசைக்குட்படுத்தினால் ஒருவேளை அவன் தன்னையுமறியால் சத்தியத்திலிருந்தும் நழுவிவிட்டால் அவனைப் பரீக்ஷை செய்பவர்களையெல்லாம் பாபம் சூழ்ந்துகொள்ளுமல்லவா?

விச். அதற்கெல்லாம் தக்க ஏற்பாடுகள் செய்துகொள்வேனென்று நம்பிக்கொள். உன்னை நான் இப்பொழுது

அழைத்த காரணம் என்னவென்றால் இந்த விஷயத்தில் நீ எனக்கொரு உதவிபுரிய வேண்டியிருக்கின்றது.

சுக். எப்பொழுது என்னைக் கூப்பிட்டு எந்த வேலையைச் செய்யச் சொன்னபோதிலும் சித்தமாயிருக்கின்றேன்.

விச். சரி, நான் போய்வருகின்றேன். இவ்வனத்திற் கருகாமையில் அவன் வேட்டையாடிக்கொண்டிருக்கின்றான். அங்கு சென்று சில ஏற்பாடுகள் செய்துக்கொள்ளவேண்டியிருக்கின்றது.

சுக். நானும் போய்வருகின்றேன். எப்போது வேண்டுமானாலும் வந்துவிடுகின்றேன். (இருவர்களும் போகின்றார்கள்).

அங்கம் I — காக்ஷி II

விச்வாமித்ரன் ஆச்ரமத்தின் அருகாமையில் காட்டைச்சேர்ந்த ஒரு சோலை. சந்திரமதி உட்கார்ந்திருக்கின்றாள். ஹரிச்சந்திரன் அவள் மடியின்மீது தலையை வைத்துக்கொண்டு தூங்குகின்றான்.

ஹரி. (தூங்கிக்கொண்டே கனவுகண்டு வாய்பிதற்றுகின்றான்). ஸந்தோஷம்......நான்தான் பாக்யசாலி......தங்களுக்கா? சரி எடுத்துக்கொள்ளுங்கள்......நீயும் போய்வருகின்றாயா? சரி உன்னிஷ்டம்......ஐயோ! ஐயோ! உங்களுக்குமா இக்கதி?......ஹா! (விழித்துக்கொள்கின்றான்). கண்ணே! நான் கண்டதெல்லாம் கனவுதான்! என் உடலெல்லாம் நடுங்குகின்றது!.

சந். ப்ராணநாதா! இதென்ன இது? என்ன கனவு கண்டீர்கள்?......தங்களையே இவ்வளவு அதைரியப்படுத்தக் கூடிய கனவு எதுவாக இருக்கக்கூடும்?

OF THE ... 7-JAN 1919 MADRAS.

ஹரி. 'அன்னமே கேளாய் அறைகுவேன்றனும்
என்னருந் தந்தையி னெழிலுறு நிகேதம்
சொர்க்க மடைந்தபின் றோகையரைவரை
மிக்கவேனு மேவியே மணந்தேன்
ஐவரிலொருத்தியை யந்தணர்க் கீந்தேன்
செய்யமற்றொருத்தியும் சோக்கியே சென்றனன்
மற்றொரு நாரியோ மலரொளி யிழந்தே
எற்றவோர்திசைதான் யேகினள் கண்டாய்
ஒருத்தியாகாரத் துணவுடன் மற்றதும்
வேறுர்தமே சென்றனள் மெல்லியற்கரசே
கடைப்படுமாதுமே கைதனை பற்றியே
யிடைவிடா திருந்தன ளென்னமோ தெரியேன்.'

சங். நாதா! இதென்ன கனவு! நமக்கு வரும் எந்த தீங்கை இது தெரிவிக்கிறதோ புலப்படவில்லையே. ஆனால் தாங்கள் இப்படி அதைரியப்படுவது சரியன்று. ஒருவேளை தமது மந்திரி சத்யகீர்த்தியைக் கேட்டால் இதன் பலனை அறியலாம்.

ஹரி. யாரையாவது விட்டு சத்யகீர்த்தியை அழைத்து வரச்சொல்.

சங். யாங்கே வெளியில் இருப்பது? (ஒரு சேவகன் வருகின்றான்).

சேவ. அம்மணி!

சங். சத்யகீர்த்தியை மகாராஜா வரச்சொன்னதாகச் சீக்கிரம் வரச்சொல்.

சேவ. அப்படியே சொல்லுகின்றேன். (போகின்றான்)

ஹரி. சந்திரமதி! என் மனம் ஏதோ ஒருவாறாக இருக்கின்றது. எவ்வளவு தைரியப்படுத்திக்கொண்டபோதிலும் சஞ்சலத்தையே அடைகின்றது. சேனைகளையெல்லாம் ;சந்

நத்தம் செய்யச்சொல்லி நமது நாட்டை சீக்கிரத்தில் அடைய விரும்புகின்றேன்.

சந். அப்படியே செய்யலாம். காட்டு மிருகங்களை யெல்லாம் கொன்று ஜனங்களின் குறைகளையும் தீர்த்துவிட்டோம். இனி நமக்கு இங்கு என்ன வேலையிருக்கின்றது. (சத்யகீர்த்தி வருகின்றான்). வாரும், மகாராஜா ஏதோ கனவுகண்டாராம். அது என்ன தீங்கை தெரிவிக்கின்றதோ என்று மிகவும் சஞ்சலப்பட்டுக்கொண்டிருக்கின்றார்.

சத். மகாப்ரபு! தங்களையே அதைரியப்படுத்தும்படியான அந்தக் கனவு யாதென்று தெரிவித்தால் எனக்குத் தெரிந்தவரையிலும் அதன் பலனை எடுத்துரைக்கின்றேன்.

ஹரி. சத்யகீர்த்தி!

'என்னை யீன்றெடுத்த தாதையாக்கையோடெய்தியும்பார்
தன்னையுறநிமையோர் நீக்கத்தாரகைத் தலத்தமர்ந்த
பின்னையான் பிரசத்கூந்தற் பேதையைாவர் சம்மை
முன்னையூழ் விதியினாலே மயக்கமுற்றினிதிருந்தேன்'.
'அருந்தியிற் புணர்ந்த மாதரைவரில ருந்தவத்தோர்க்
கொருத்தியை யானேயீந்தே னொருத்திபோயவனோடுற்றாள்
ஒருத்திபூணற்றகன்றா ளொருத்திபோய்க் கண்ணிழந்தாள்
ஒருத்திவிட்டென்னை நீங்காதிருமைக்கு முறுதிதந்தாள்'.

இப்படி நான்கண்ட கொடிய கனவினால் என்ன விளையும் என்பதை அறிந்து சொல்வாயாக. (சத்யகீர்த்தி ஆலோசிக்கின்றான்). ஏன் உன் முகம் வாடுகின்றது?

சத். ஈச்வர! (பெருமூச்சுடன் கண்ணீர்விடுகின்றான்).

ஹரி. சத்யகீர்த்தி! இதென்ன அந்யாயம்! நீயா கண்ணீர்விடுவது? சூர்யகுலத்தில் உதித்த த்ரிசங்குவின் புத்திரனென வழங்கிவரும் ஹரிச்சந்திரனுடைய முதல் மந்திரியாக

இருக்கும் நீயா கண்ணீர்விடுவது! மந்திரி கண்ணீர்விட்டால் ராஜாங்கமே கண்ணீர்விடுவதுபோலல்லவா!

சத். அரசே! தங்கள் கனவின் பலனை என்னென்று சொல்லுவேன்.

ஹரி. சுகதுக்கம் என்பவைகள் நமது மனதில் இருக்கின்றனவே யன்றி நம்முடைய ஆதீனத்திற்குள்படாத எந்த வஸ்துவிலும் இல்லையல்லவா? என்மனதும் கொஞ்சம் சஞ்சலத்தை அடைந்ததனாலல்லவா நீங்களெல்லோரும் இப்படி மனோதைரியத்தைக் கைவிட்டுவிட்டீர்கள்? மனிதனுக்குத் துக்கத்தைத் தரக்கூடிய எது எனக்கு நேர்ந்தபோதிலும் நான் மனோதைரியத்தைமட்டும் கைவிடமாட்டேன் என்று உறுதியாகக்கொள். கனவின் உள் அர்த்தத்தை தைரியத்துடன் வெளிப்படையாகச் சொல்.

சத். 'அருவினை விளைத்ததெல்லாங் கௌசிகனவனாலின்னம்
வருவினை மிகவுமுண்டு வளநகர் நாடிழந்து
திருவினையிழந்து சேயுஞ் செல்வியும் வேறுவேறுப்
பெருவினை முடிப்பான் றன்னைப் பின்னையாம் செல்வோம்
மன்னா!'

இம்மாதிரியான கஷ்டம் தங்களுக்கு நேரிடவும் நாங்கள் அதை பார்க்கவுமோ இவ்வுலகில் ஜனித்தோம். ஆனால் எவ்வளவு கஷ்டதசை வந்தபோதிலும் மருபடியும் ஒருகாலத்தில் சுகத்தை அடைவீர் என்பதை எண்ணித்தான் தேறுதல் அடையவேண்டியிருக்கிறது.

சந். ப்ராணேசா! தாங்கள் நாடுநகர் இழந்தபோதிலும், என்னையும் தமது மகனையும் இழந்தபோதிலும், செல்வத்தை இழந்தபோதிலும், துன்பத்தை அடைந்தபோதிலும், சத்தியத்தைக் கைவிடாதிருப்பீர் என்று சத்யகீர்த்தி சொல்லியதொன்றே என்மனதை தேற்றுகின்றது.

ஹரி. வீணில் துக்கப்படவேண்டாம்

ஹரிணாபி ஹரேணாபி ப்ரஹ்மணாபி ஸுரைரபி
லலாடலிகிதாரேகா பரிமார்ஷ்டும் நஸக்யதே!

இவ்வாறு அயன் விதித்த விதியை மாற்ற தேவர்களாலேயே முடியாதென்றால் நம்மால் செய்யக்கூடியது என்ன இருக்கின்றது! ஆனால் நாம் செய்யக்கூடியது ஒன்றுளது.

இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்.

என்ற சொல்லை யனுசரித்து வரும் துன்பத்தை இன்பமாகக் கருதி ஸந்தோஷத்துடன் அதற்கு நல்வரவு கூறுவோமானால் நமக்குத் துன்பமென்பதே கிடையாது. சத்யகீர்த்தி! சேனையை ஸன்னத்தஞ்செய் நாம் புறப்படுவோம (சத்ய கீர்த்தி வெளியேசென்று உடனே திரும்புகின்றான்).

சத். ப்ரபு! சேனையை ஸன்னத்தம்செய்ய உத்திரவு கொடுத்திருக்கின்றேன். இவ்வனத்தின்கண் வசிக்கும் யாரோ இரண்டு பாணப்பெண்கள் தாங்கற்ற ஸங்கீதத்தால் தங்களை ஸந்தோஷப்படுத்தி பரிசுபெற்றுப்போக வந்திருக்கின்றார்கள். உத்திரவு கொடுத்தால் உள்ளவரச் சொல்லுகின்றேன்.

ஹரி. வரச்சொல். (சத்யகீர்த்தி போகின்றான்.) நமது மனது இந்த நிலமையில் இருக்குந்தருணத்தில் அதைத் தேறுதல் செய்யும்பொருட்டு ஸங்கீதப்பெண்கள் வந்திருக்கின்றார்கள் என்பதை ஒரு நற்சகுணமாகவே எண்ணுகின்றேன். (சத்யகீர்த்தியும் பாணப்பெண்களும் வருகின்றார்கள்.)

பாணப்.

அந்தர சுவர்க்கமுற்ற வண்ணலாந் திரிசங்கின்ற
எந்தனையண்டவனே போற்றி யியலுடனயோத்தியாளுஞ்

சந்த்ரசூடனே போற்றி சொல்லொணா மெய்மையுண்ட
கந்தனை மலரைப்போன்ற கழலடிக்கடியாள் போற்றி.

ராஜேஸ்வரா! வந்தனம்.

ஹரி. நங்கையர்காள்! நீங்கள் யார்? என்ன பலனைக் கருதி என்னையடைந்தீர்கள்?

பாணப். மகாப்ரபு! நாங்கள் இருப்பது இமயமலைச் சாரல். எங்கள் தொழில் நடனம் புரிவதும் பாடல் பாடுவதும்தான். தங்களை பலர் புகழக்கேட்டு நடித்து வெகுமதி பெறும்பொருட்டே இங்கு வந்திருக்கிறோம்.

ஹரி. பெண்காள்! என் மனது ஸந்தோஷத்தை அடையும்படிச் செய்வீர்களானால் என் ஆதீனத்திற்குள்ளடங்கிய எதைக் கேட்டாலும் அவஸ்யம் தருகின்றேன். நீங்கள் கற்ற பதத்தையும் நாட்டியத்தையும் பார்ப்போம்.

பாணப். தங்கள் ஆதீனத்திலில்லாத எந்த வஸ்துவை நீசகுலத்திலுதித்த நாங்கள் கேட்கப்போகின்றோம்! (பாடுகின்றார்கள்).

ஹரி. மந்திரீ! ஸங்கீதத்தின் வல்லமையே வல்லமை! அதிலும் இப்பெண்களைப்போல் இவ்வளவு ஸாமர்த்யத்துடன் பாடும் சக்தி ஒருவருக்கிருக்குமானால் அதைக்கொண்டே உலகில் எந்த வேலையை வேண்டுமாகிலும் ஸாதித்துக் கொள்ளலாம். என்ன அழகாய்ப் பாடினார்கள் பார்த்தாயா!

ஈடிலாதரு மின்சொற் கின்னரர்யாரு மேங்கப்
பாடினர் தீய்ந்துலர்ந்த பயிரெலாம் விளைவுமல்கும்
வாடிலுளனேகம் பட்டமரங்களுந் தழைக்குமுன்னான்
வீடினருயிர் வந்துற்று வெள்ளெண்பும் விதிர்விதிர்க்கும்.

சத். மகாப்ரபு! தாங்கள் உரைப்பது வாஸ்தவமே. ஸங்கீதத்தால் உருகாத கன்மனமும் ஸங்கீதத்தால் குணமா

காத மனப்புண்ணும் உலகில் கிடையாது. அதனால் தான் ஸந்தோஷ காலத்திலும் ஒருவர் இறக்குங்காலத்திலும் ஸங்கீதத்துடன் கலந்தவண்ணமே இருக்கின்றது சப்தம். அனுபவிக்கும் சக்திமட்டும் நம்மிடத்தில் இருக்குமாகில் அசைந்து நிற்கும் புல்லிலும் பெருகி ஓடும் ப்ரவாகத்திலும் இன்னும் அல்பமான அநேக வஸ்துக்களிலும் ஸங்கீதம் இருப்பதை நாம் அறியலாம்.

ஹரி. நங்கைகாள்! இன்னும் சில பதங்களைப் பாடுங்கள் கேட்கலாம். (பாணப் பெண்கள் பாடுகின்றார்கள்).

சங். மனுஷ்யனையும் தேவதைகளையும் ஒன்றுசேர்த்து எக்காலத்திலும் அந்யோன்யமாக வைத்திருப்பது ஸங்கீதம் ஒன்றுதானல்லவா! அப்படிப்பட்ட சாஸ்திரத்தில் இவ்வளவு ஸாமர்த்யத்தை அடைந்திருக்கும் இவர்களுக்குத் தக்க வெகுமதியை கொடுத்தனுப்புங்கள்.

ஹரி. சத்யகீர்த்தி! இவர்கள் விரும்பும் வெகுமதியைக் கொடுத்தனுப்பு.

பாணப். தயாளகுணம் பொருந்திய தரணீதரா! பணத்தின் மீதும் ஆடையாபரணங்களின் மீதும் நாங்கள் இச்சைப்பட்டு தங்களிடம் வரவில்லை. தாங்களும் எதைக்கேட்ட போதிலும் கொடுப்பதாய் சொல்லியிருப்பதால் தைரியத்துடன் நாங்களும் கேட்கின்றோம். தங்களுடைய புண்ணியெனும் பதவியை எங்களுக்குக் கொடுக்கவேண்டும்.

ஹரி. நீங்கள் கேட்பதைக்கொடுக்க அசக்தனாயிருக்கின்றேனே யென்பது எனக்கு மிகவும் வ்யசனத்தைத் தருகின்றது. இன்னும் வேறு எதையாவது கேளுங்கள்.

பாணப். ஆசைகொண்டவர்களுக்கு அவர்கள் நினைத்த வஸ்துவினாலல்லது மற்றொரு வஸ்துவினால் ஸுகம் உண்டா

காதல்லவா! ஆயினும் தாங்கள் விரும்பியபடி கேட்கின்ளுேம். நீர் வெற்றிமுடி சூடிக்கொள்கின்ற அத்தருணத்தில் பிடித்துக்கொள்வதான வெண் கொற்றக்குடையைக் கொடுப்பீராகில் நாங்கள் ஸந்தோஷமாகத் திரும்புவோம்.

ஹரி. சூரிய குலத்தரசர்கள் கொடுக்கத் தக்கவைகளைக் கொடுப்பார்களேயன்றி கொடுக்கத் தகாதவைகளைக் கொடுக்கமாட்டார்கள். விடத்தக்கவைகளை விடுவார்களேயன்றி விடத்தகாதவைகளை விடவுமாட்டார்கள். ஆகையால் நீங்கள் ஆலோசிக்கவேண்டியபடி ஆலோசித்து உங்களால் கேட்கத்தக்கவும் என்னுல் கொடுக்கத்தக்கவுமான பொருளை கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.

பாணப். எதைக் கேட்டபோதிலும் தருவதாகச் சொல்லி நாங்கள் ஆசைப்பட்டுக் கேட்ட இரண்டில் எதையும் கொடுக்க முடியாதென்று சொல்லிவிடுவது தங்களுடைய பெயருக்கும் கீர்த்திக்கும் பொருந்தியதல்ல. கொடுப்பதாகச் சொல்லிவிட்டு கொடாமலிருப்பது தங்கள் குலத்திற்கும் அழகல்ல.

ஹரி. (புன்னகையுடன்) என்ன சொன்னீர்கள்! ஹரிச்சந்திரன் கொடுப்பதாகச் சொல்லிவிட்டால் அதனுல் தனக்கு எவ்வளவு கஷ்டங்கள் நேரிடுவதனுலும் அவைகளைக் கருதாமல் கொடுப்பான் என்று நம்புங்கள். ஆனுல் நான் உங்களுக்கு என்னென்று வாக்குக்கொடுத்தேன் என்பதை யோசித்துப் பாருங்கள். 'என் ஆதினத்திற்குள்ளடங்கிய எதைக் கேட்டாலும் அவஸ்யம் 'தருகின்றேன்' என்றுதான் நான் சொல்லியது. அப்படியிருக்க 'என் ஆதீனத்தில் இல்லாதவைகளைக் கொடுக்கும்படிகேட்டால் நான் எப்படிக் கொடுப்பேன்.

பாணப். ப்ரபு! இதென்ன விந்தையாக இருக்கின்றது! வார்த்தைகளினால் இந்திரஜாலவித்தை செய்கின்றீர்போல் காண்கின்றது. வார்த்தைகளைப் புரட்டி தப்பிப்போக முயல்கின்றீரேயன்றி நாங்கள் கேட்டவைகள் எப்படி தங்கள் ஆதீனத்திலில்லாதிருக்கின்றனவென்பது எங்களுக்குப் புலப்படவில்லை.

ஹரி. என்னுடைய பத்னியெனும் பதவியை ஒருத்திக்கு நான் கொடுத்துவிட்ட பிறகு அது அவளுடைய ஆதீனத்திற்குட்பட்டு விட்டதல்லவா! அவளுடைய ஆதீனத்திலிருப்பதை நான் எப்படி உங்களுக்குக் கொடுக்கக்கூடும்? அதுவுமன்றி நீசஸ்த்ரீகளை மணக்க க்ஷத்ரியனுக்கு அதிகாரம் சிறிதுமில்லை. நீங்கள் கேட்ட வெற்றிக்குடையும் என்னுடைய ஆதீனத்தில் இல்லை. நான் உயிருடன் இருக்கும் வரையில் அதன் கீழ் உட்கார்ந்து அரசுபுரியமட்டும் எனக்கு அதிகாரமிருக்கின்றதேயன்றி அதை தானமாகக் கொடுக்க எனக்கு சிறிதும் அதிகாரமில்லை. அந்த அதிகாரத்தைப் பெற்றவர்கள் என் நாட்டின் ஜனங்கள்தாம். நான் ஒரு தர்ம கர்த்தாவைப்போல் குடிகளுடைய சட்டளைமேற்கொண்டு ராஜகாரியங்களை நடத்திவருகின்றேன். ஆகையால் தீர்க்காலோசனை செய்து என்ன வெகுமதி வேண்டுமென்பதைத் தெரிவியுங்கள்.

பாணப். வள்ளலென்று தங்களையடைந்தோம். யாசகம் செய்வோர்க்கு எதுங்கொடாத கள்ளனென்று உன்னை அறிந்திருந்தால் ஒருகாலும் இங்கு வந்திருக்கமாட்டோம். கடைசி முறை கேட்கின்றோம். எங்களை மணப்புரிந்துகொள்ளல் தர்மமல்லவென்று எண்ணுவீராகில் எங்களுக்குப் பத்னியெனும் பதவியை மாத்திரம் கொடுக்காமல் பத்னியடையும் மற்ற எல்லா ஸுகத்தையுமாவது கொடுக்கலாகாதா?

ஹரி. (இரண்டு காதுகளையும் கைகளால் மூடிக் கொண்டும் கண்ணை மூடிக்கொண்டும்) பரமேச்வரா! பரமேச்வரா!

சத். யாரங்கே சேவகா! இவர்களைப் பிடித்து வெளியே தள்ளிவிடு. (சேவகன் வர பாணப் பெண்கள் 'அடா பாவி' என்று சொல்லிக்கொண்டே போய்விடுகின்றார்கள்).

ஹரி: சத்யகீர்த்தி! இதென்ன நீ இவ்வாறு கோபம் கொண்டாய்? நானும் என்னையுமறியாமல் நீ சொல்வதை கவனிக்காமலே இருந்துவிட்டேன். அவர்கள் சொல்லிய வார்த்தைகள் அடாததாக இருந்தபோதிலும் அவர்கள்மீது நாம் கோபம் கொள்ளலாகாது.

'கோபமே குலத்தினையும் நலத்தினையும்
கெடுக்கவந்த களங்கம், அன்றிக்
கோபமே தரித்திரங்க ளனைத்தினையும்
புகட்டிவைக்குங் கடாரம் மற்றுங்
கோபமே பரகதிக்குச் செல்லாமல்
வழியடைக்குங் கபாடம் இன்னுங்
கோபமே யனைவரையும் பகையாக்கிக்
கழுத்தரியுங் கத்தி காண்பாய்'.

இனியாவது கோபம் நம்மிடத்திலில்லாதிருக்க பரமேச்வரன் க்ருபை புரிவாராக. சந்திரமதி! நேரமாகின்றது. நாம் போகலாம் வாருங்கள். (எல்லோரும் போகின்றார்கள்).

அங்கம் I — காக்ஷி III

ஹரிச்சந்திரன் கொலுமண்டபம்

ஹரிச்சந்திரனும் சந்திரமதியும் ஆசனத்தில் வீற்றிருக்கின்றார்கள். தேவதாஸனும் அவன் உபாத்தியாயரும் நிற்கின்றார்கள். சத்யகீர்த்தி முதலியவர்கள் வீற்றிருக்கின்றார்கள்.

ஹரி. தாங்கள் உரைத்தபடியும், இவ்வளவு காலம் தாங்கள் அவனை அழைத்தபடியும், இனி லோஹிதாஸனை தேவதாஸ னென்றே அழைப்போம். தேவதாஸனெனும் பெயரை இனி அவனுக்குக் கொடுக்கவேண்டியதாக அவ்வளவு தெய்வபக்தியை அவனிடத்தில் உண்டாக்கியதற்காக மிகவும் வந்தனம். சத்யகீர்த்தி! இவருக்குத் தக்க வெகுமானத்தை அளித்து ஸந்தோஷப்படுத்திவா. (உபாத்தியாயர் ஹரிச்சந்திரனை நமஸ்கரித்துவிட்டு சத்யகீர்த்தியுடன் போகின்றார். அவர் போவதற்குமுன் தேவதாஸன் அவரை நமஸ்கரிக்கின்றான்). குழந்தாய்! நீ என்னென்ன கற்றுவந்தாய் சொல் கேட்போம்.

தேவ. 'சிறுபெருமயோத்தி செங்கோல் நடாத்தும்
பார்புகழ் தந்தையே! பகருவேன் கேளீர்.
ஓமெனு மெழுத்தி னுறுதியுமோன
நேமெழும் அக்ஷர நிலையையுமுணர்ந்தேன்'—

(சத்யகீர்த்தி வருகின்றார்).

சத். ஸ்வாமின்! விச்வாமித்ரர் மிகவும் கோபத்துடன் வந்துகொண்டிருக்கின்றார்.

சந். அவருக்கு கோபம் வரும்படி நாம் ஒரு காரியமும் செய்யவில்லையே.

சத். அவருடன் கானகத்தில் நம்மிடம் வந்திருந்த இரண்டு பெண்களும் வருகின்றார்கள். (விச்வாமித்ரன் இரண்டு பாணப்பெண்களுடன் வருகின்றார். ஹரிச்சந்திரன் சந்திரமதி தேவதாஸன் எல்லோரும் நமஸ்கரிக்கின்றார்கள். முனி வந்த சிறிதுநேரம் சென்றதும் கொஞ்சம் கொஞ்சமாக நகரவாசிகள் அனைவரும் வந்து சேருகின்றார்கள்).

ஹரி. (முழந்தாளிட்டவண்ணம்).

'தவத்தினி லுயர்ந்தவேன்றன் குருவே யுன்றாள் போற்றி
பவத்தினை யொழித்ததிவ்ய பண்பனே யுன்றாள் போற்றி
இவரிரு மாதரோடு மிணையிலாக் கோபங்கொண்டே
அவதியோ டிங்குவந்த தடியனுக் குரைப்பீர் போற்றி'.

என் தந்தைக்குத் தன் தவப்பலனைத் தந்து தாங்கிய தபோநிதே! தாங்கள் இவ்வளவு கோபங்கொண்டு எதிர்த்துவர நீலகண்டனாகிய சிவனும் நானல்லேன், மேகவர்ணனாகிய விஷ்ணுவும் நானல்லேன், ச்ருஷ்டிகர்த்தாவாகிய ப்ரஹ்மாவும் நானல்லேன். நான் புத்தியில்லாமல் என்ன தவறு இழைத்திருந்தபோதிலும் கிருபைகூர்ந்து தங்கள் மைந்தனாகிய என்னை மன்னிக்கவேண்டும். (இரண்டு கைகளாலும் அவர் கால்களை பிடித்துக்கொள்கின்றான். அவர் காலை விசிறி எடுக்க அதுபட்டு அவன் கிரீடம் கீழேவிழுகின்றது). ஐயோ! மலர்போன்ற தங்கள் பாதத்திற்கு இக்கடினமான வஸ்துவினால் எவ்வளவு கஷ்டங்கள்! இக்கல்கள்பட்டு கால்கள் சிவந்துவிட்டனவோ! கால்களுக்குக் காயப்பட்டுவிட்டனவோ! (கால்களை பிடிக்கின்றான்).

விச். சி விடு என் காலை. (உதைத்து தள்ளிவிடுகின்றார்).

ஹரி. (எழுந்திருந்து). யாதொரு அபராதமும் நான் செய்யவில்லையே! (சத்யகீர்த்தி கிரீடத்தை எடுத்துத் துடைக்கப்போகின்றார்).

தேவ. சத்யகீர்த்தி! அந்த கிரீடத்தைத் துடைக்க வேண்டாம். இன்றுதான் சூர்ய வம்சத்திற்கு ஓர் உயர்ந்த பதவி கிடைத்தது. விச்வாமித்ர மகாமுனியின் பாததூளிகள் அதில் அமர அது என்ன புண்ணியம் செய்ததோ? (தான் வாங்கி கண்ணில் ஒத்திக்கொண்டு கையில் வைத்துக்கொள்கின்றான்).

விச். ஹரிச்சந்திரா! செய்த அக்ருத்யங்கள் போதா தென்று ஒரு அபராதமும் செய்யாததாக பொய்யும் சொல்ல வேண்டுமா? அடா சூர்யகுல காதகா! அரசர்களிடத்திலி ருக்கவேண்டிய தயை நீதி முதலிய குணங்களை உன்னிடத் தில் சிறிதும் நான் காணவில்லை. ஆனால் கொலைபுரி தொழி லும் இரப்போற் கியாத்தன்மையும் உன்னிடத்தில் விசேஷ மாக இருக்கின்றன.

ஹரி. தாங்கள் சொல்வது எனக்கொன்றும் புலப்பட வில்லை.

விச். அவனவன் செய்த அந்யாயங்கள் அவனவனுக் குப் புலப்படாதது ஸகஜம்தான். அப்படி புலப்பட்டாலும் அதை ஒப்புக்கொள்வது மிகவும் கடினம்.

ஹரி. முனிபுங்கவ! நான் என்ன தவறு செய்தே னென்று வெளிப்படையாகச் சொல்லி அவ்வாறு தவறிழைத் ததாக தாங்கள் மனப்பூர்வமாக நம்பும் விஷயத்தில் தவறுக் குத்தக்க தண்டனையை தாமே விதிக்கலாம். ந்யாயாந்யாயத் தை நிலைநிறுத்தவேண்டிய நானே அந்யாயம் புரிந்திருக்கும் விஷயத்தில் இச்சபையோர் முன்னில் தமதிஷ்டப்படி தண் டிக்கலாம்.

விச். பாவி! தவம் செய்பவர்களுக்கு உதவக்கூடிய தன்மையை நீக்கி கானத்தை யழித்தாய். என்னுடைய சோலையில் வாழ்ந்துவந்த என் பன்றியை அடித்து அவதிப் படுத்தினாய்.

சத். மன்னர்கள் வேட்டையாடுவது ஸகஜமன்றி சாஸ் திரோக்தமுமாகும். வேட்டைக்குச் செல்லாதிருந்தால் அதுவே தவறாகும்.

விச். சத்யகீர்த்தி! உன்னிடத்தில் ந்யாயம் கற்றுக் கொள்ள நான் இங்கு வரவில்லை. ராஜாங்க தர்மத்தை உன்

னைவிட நான் நன்றுபறிவேன் என்பது எல்லார்க்கும் தெரிந்த விஷயம். அடா ஹரிச்சந்திரனென்னும் அதமா! என்னுடைய மிருகங்களை நான் ஆகாரார்த்தம் அனுப்பிய யிடத்தில் என்னுடன் சண்டைக்கு வருபவன்போலல்லவோ அவைகளைக் கொன்றாய். அவ்வாறு என்னுடன் யுத்தம்செய்ய விருப்பமிருப்பின் ஸன்னத்தமாக யிருக்கிறேன், எடு உன் வில்லை.

ஹரி. தவச்ரேஷ்ட! தங்களுடைய மிருகங்களென்று நான் அறியேன். அப்படி அறிந்திருப்பேனாகில் நாடழித்திடினும், நன்னகரழித்திடினும், என்னருமலர்ப் பூங்காடழித்திடினும், காடழித்திடினும், என்னுடைய நெடிதான வம்சம் அற்றுப்போக என் உறவினர்களை யெல்லாம் அழித்திடினும், என் பெருமைகளையெல்லாம் கெடுத்திடினும்; அவைகளுக்குப்பாடிழைத்திருக்கமாட்டேன். இதெல்லாமிருக்க தீமையான காரியங்களைச் செய்வது சிறியோருக்குத் தகுதியானவையேதான். நல்ல சாஸ்திர ஞானிகளான தம்மைப்போன்றவர்களுக்கு மன்னிக்கத்தக்க அவ்வகைத் தீமைகளைப் பொறுத்துக்கொள்வதியல்பாகும். ஆகலால் நீதிநெறிபறியாத பாவியான, ஒரு புல்லனாகிய என்னை ஒரு பொருளாகக்கொண்டு தாங்கள் கோபிப்பீர்களானால் உம்மிடத்திலுள்ள பொறுமையும் இரக்கமும் தங்களால் நற்கதியை அடைந்த த்ரிசங்குவின் புத்திரனாகிய என்னிடத்திலோ இல்லைவரகப்போவது?

விச். நீ கற்ற வார்த்தை ஸாமர்த்தியத்தையெல்லாம் என்னிடத்திலா காட்டுகின்றாய்? நீ வேட்டையாடியது ஒரு பக்கமிருக்க தெளிந்துணர்ந்த எழிசைகளும் உன் முன்னே பாடுவதற்காக வந்த என் பெண்மக்களிருவரையும் அடித்துத் துரத்தியது உன் குலத்திற்கழகா?

ஹரி. இப்பெண்கள் தங்களுடையவர்கள் என்று எனக்குச் சிறிதும் தெரியாது. அவர்கள் சொல்லக்கூடாத வார்த்தை

களையெல்லாம் சொல்லியதால் சத்தியகீர்த்தி கொஞ்சம் கோபங்கொண்டு துரத்திவிடச் சொன்னான். அவர்கள் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டபிறகு கோபம் வராமல் இருப்பது மனுஷ்ய ஸ்வபாவத்திற்கு விரோதமானதாக இருக்கும். இந்தக் குற்றத்தையும் தேவரீர் பொருத்தருளவேண்டும்.

விச். கழுத்தை அறுத்துவிட்டு கைதவறுதலாகச் செய்துவிட்டதாக மன்னிப்புக் கேட்கின்றாய். கோபம் கொள்வது அரசனுக்கழகோ? அமைச்சனிழைத்த பாவம் அரசனையேயல்லவா சேரவேண்டியது. என் பெண்களை அடித்துத் துரத்திய தவறு மன்னிக்கத்தக்கதல்ல. அவர்கள் வேண்டியபடி அவர்களுக்கு இன்பத்தைத் தந்தாலன்றி உன்னை நான் மன்னிப்பதாக இல்லை.

ஹரி. பரமேச்வர! பரமேச்வர! விச்வாமித்ர மகாமுனியோ எனக்கு இம்மாதிரியான புத்தியைச் சொல்வது. தர்ம சாஸ்திரத்தை நன்கறிந்த தாங்களா இப்படிச் சொல்வது. க்ஷத்ரிய வம்சத்திற் பிறந்தவன் நீசஜாதியாருடன் கூடுவது நீதியாமோ?

விச். தர்ம சாஸ்திரம் கேட்பதானால் நீதியைச் சொல்கின்றேன் கேள். வசிஷ்டன் சாபத்தால் நீசகுலத்திற் புகுந்த த்ரிசங்குவின் மகனாகிய நீ நீசர்களுடன் கூடுவது தவறல்ல.

ஹரி. லிங்கோத்பவ! இதைக் கேட்டும் நான் உயிருடன் இருக்கின்றேனல்லவா! சாபத்தால் உருமாறினாரேயன்றி பிறப்பில் நீசரல்லவே என் பிதா.

விச். ஹரிச்சந்திரா! இப்பெண்களும் பிறப்பில் நீசர்களல்ல. இவர்கள் பிறப்புக்குக் காரணம் விச்வாமித்திரன் என்பதை அறிந்துகொள். கோபத்தால் மானிடர் நீச ஜாதியை அடைவார் என்ற சாஸ்திரத்தை அனுசரித்து நான்

கோபாக்ராந்தனுய் இருந்த ஸந்தர்ப்பத்தில் இவர்கள் என் ச்வாஸத்தினின்றும் ஜனித்த காரணத்தால நீசர்களாகிவிட்டார்கள். ஆகையால் நீ இவர்களைப் புணர்வதில் தவறு சிறிதும் கிடையாது.

ஹரி. தாங்கள் மனமொப்பி இவ்வார்த்தைகளைச் சொல்கின்றீர்களென்று நான் சிறிதும் நம்பவில்லை. என் பிதா புலையனான பிறகு அவருடைய நீசத்வத்தைப் போக்கி அவர் பொருட்டு ஒரு தனி உலகை ச்ருஷ்டித்ததாமோ இப்படிச் சொல்வது?

விச். வசிஷ்டனால் உண்டான பெரும்புலையை நான் தீர்த்தது உன் ஞாபகத்தில் இருக்கின்றதல்லவா?

முன்ன முந்தை முழுப்புலை நீக்கினம்
இன்ன நீக்கவெமக்கரி தன்றியாம்
சொன்ன வாசகங்கேட்டுச் சுடர் முடி
மன்னர் மன்ன வென்மக்களைச்சேர் இன்றே.

ஹரி. இதென்ன ந்யாயம்! நரகத்திற் புகுந்து செய்த பாவக்ருத்யங்களை போக்கிக்கொள்ளலாம் ஆகையால் பாவக்ருத்யங்களைச் செய்வது தவறல்ல என்ற தர்மத்தை அரசியல் துறவொழுக்கம் இரண்டையும் [நன்கறிந்த கௌசிகமாமுனியோ எடுத்துரைப்பது!

விச். அடா துராத்மா! நீயா இப்படியெல்லாம் என்னுடன் தர்க்கம்செய்வது! நீசஜாதியென்பதாலல்லவா இவ்வாறு பிதற்றுகின்றாய்! சீக்கிரத்திலேயே நீ ஓர் புலையனுக்கடிமை பூண்டு புலையனுடைய தொழிலை புரியக்கடவாய்! இப்பொழுதாவது என் சொல்லுக்கிணங்கி அவர்களுடன் கூடுகின்றாயா?

ஹரி. உமது கோபம் தீர்வதற்காக நீர் கொடுத்த சாபத்தை ஸந்தோஷமாக ஏற்றுக்கொள்கின்றேன்.

விச். வேண்டாம் மனந்துக்கொள். வீணாய் அழியாதே.

ஹரி. கடல்நீர் கொதிப்புடையதானால் குளிர்ந்த நீர் எங்கிருந்து யார் கொண்டுவருவார்கள்! தாயும் தகப்பனும் தஞ்சமும் தெய்வமும் எங்களுக்கு நீரேயாகையால் எங்களை என்னவேண்டுமென்றாலும் செய்யலாம். அவர்களை அடித்த கைகள் செய்த பாவம் என் கையைச் சேருமாதலால் என் கையை வெட்டிவிடுங்கள். அக்கைகளுக்கு புத்திகொடுத்த தலைக்காக தன் தலையை வெட்டிவிடுங்கள். ஆனால் பரதாரசகோதரன் என்ற பெயரைமட்டும் சூர்யவம்சத்தரசர்களிடத்திலிருந்தும் வெளிப்படுத்த கொண்ட எண்ணத்தை விட்டுவிடும்.

விச். ஆனால் நான் வேறொன்று சொல்லுகின்றேன் அதன்படியாவது செய்கின்றாயா?

ஹரி. தர்ம சாஸ்திரத்துக்கு விரோதமில்லாத எந்த காரியத்தை வேண்டுமானாலும் செய்கின்றேன்.

விச். இப்பொழுது சொல்லிய சொல்லை மறந்து வார்த்தையைப் புரட்டமாட்டாயல்லவா.

தேவ. ஹரிச்சந்திரமகாராஜனா பொய் சொல்வார்!

'அலைகடல் பொங்கினாலு மவனியு மழிந்திட்டாலும்
நிலைதப்பி ரவியுந்திங்கள் நீளசிரசும் பிசகிட்டாலுங்
கலை நான்கு பொய்த்திட்டாலுங் கயிலை யன்வருந்தினாலும்
புலையிலா வரிச்சந்திரன்றான் பொய்சொல்லா புனிதன்தானே'

தருமதேவதையின் மனமொப்பக்கூடிய காரியம் எதைச் சொன்னாலும் சரி, என் தந்தை மாத்திரமல்ல நானும் அவருடன் செய்யக் காத்திருக்கின்றேன். என்ன மதிமயங்கி நிற்கின்றீர்?

விச். ஹரிச்சந்திரா! இப்பெண்கள் கேட்டபடி அவர்களுக்கு இந்த ராஜ்யத்தைக் கொடுத்துவிடு.

ஹரி. முனீச்வரா! நான் சொல்லியதை மறந்துவிட்டீர்களே! நான் ராஜாங்க விஷயத்தில் ஒரு தர்மகர்த்தாவின் நிலைமையில்தானே இருக்கின்றேன். ஆனால் இதில் எனக்குள்ள பாத்யதையை ஏன் கொடுத்துவிடலாகாதென்று தாம் கேட்கலாம். என் காலத்திற்குப்பிறகு தர்மம் நடக்கவேண்டுமல்லவா; அதை நடத்த சக்தியற்ற இந்த நீசஸ்திரீகளிடம் அதை ஒப்புவிப்பேனாகில் குடிகளுக்கு அதனால் நேரிடும் கஷ்டங்களுக்கெல்லாம் நானல்லவா மூலகாரணமாகிவிடுவேன்? பாத்திரமறிந்தல்லவா பிச்சையிடவேண்டியிருக்கின்றது தர்மசாஸ்திரப்படி! இந்த பாரத்தை வஹிக்க எனக்கு ஆசையிருப்பதாக எண்ணவேண்டாம். அரசியல் அறிந்த தாங்கள் இப்பாரத்தை வஹிக்க ஸம்மதித்தால் இதோ கொடுத்துவிடுகின்றேன்.

விச். வாஸ்தவமாகவா?

ஹரி. என்மீது தாங்கள் ஸந்தேகம் கொள்ளும்படி அவ்வளவு பாவியா நான்? இதோ பெற்றுக்கொள்ளும். தேவதாசா! எனக்குப் பின் நீயே இதற்கு வாரிசாகையால் உன் கையாலேயே கொடுத்துவிடு. (தேவதாசன் கொடுக்க விச்வாமித்ரன் கிரீடத்தை வாங்கிக்கொள்கின்றார்). மைந்தன் சிறுவன், அவன் கையிலிருந்துதானே வாங்கினோம் என்று எண்ணவேண்டாம். இதோ அவனுக்காகவும் எனக்காகவும் எங்கள் ஸ்வதந்திரத்தை தாரைவார்த்துக் கொடுக்கின்றேன். (கொடுக்கிறான்).

தேவ. மகாப்ரபு! எங்களுக்குப் பிச்சையாக மூன்று காவி வஸ்திரங்கள் கொடுத்துவிட்டு நாங்கள் அணிந்திருக்

கும் அரசருக்குரிய ஆடையாபரணங்களைப் பெற்றுக்கொள் ளுங்கள்.

விச். அப்படியே உள்ளே சென்று இந்த ஆடையாபர ணங்களை வைத்து காவிவஸ்திரங்களைத் தரித்துவாருங்கள். (ஹரிச்சந்திரன், சந்திரமதி, தேவதாஸன் மூவரும் உள்ளே போகின்றார்கள்).

சத். மனித ஜன்மமெடுத்தால் பச்சாத்தாபமென்பது சிறிதாவது இருக்குமென்று சொல்லுவார்கள். நரஜன்மமெ டுத்து ப்ரஹ்மரிஷியென்று பெயர்வாங்கிய

கண்ணி—புன்னாகவராளி—ரூபகம்

மாமுனியே யுந்தனிட மனமுங் கருங்கல்லோ—இந்த
வஞ்சம்வைத்தே தானம்வாங்க வந்தது நீயல்லோ—மா.

வசனம்

என் ஐயன் கனவுகண்டு அதை என்னிடம் சொன்னவுடன் உன்னால் மன்னனுக்குத் தீங்குவருமென்று அறிந்திருந்தும்

கண்ணி

பாவியுந்தன் மோசவெண்ணம் பாராமல் போனேனிந்த
பஞ்சவேடம் மன்னனைச்செய்ய பார்க்கவுமானேன்—மா.

வசனம்

வஞ்சக எண்ணம் நிறைந்த எந்த மானிடனாலாவது தீங்குவரு மென்று எண்ணியிருந்தால் தக்க ஏற்பாடுகள் செய்திருப் போம். ஆனால் வஞ்சக எண்ணம் என்பதை ஒழித்திருக்க வேண்டிய

கண்ணி

தவமுனியென்று தாள்பணிய நீ தாக்கிய விவ்வெண்ணம்-நான்
தானறிந்தால் தக்கபடி தானடப்போ முன்னம்—மா.

வசனம்

முகத்திலொன்று அகத்திலொன்று வைத்திருக்கக்கூடிய பாத கனென்று உன்னை நான் சிறிதும் எண்ணவில்லையே. உனக்கு நாங்கள் யாதொருதீங்கும் செய்யாதிருக்கக் காரணமில்லாமல்

கண்ணி

என்னமோச மெண்ணங்கொண்டா யிக்கதியாக்க பாவி
இதுவோ நீதான் றவளுசெய்தகனம் இயம்புவாய்க் கேட்க—மா.

வசனம்

இவ்வளவு காலமாய் பட்டாடை கட்டிவந்த

கண்ணி

மன்னவனுங்காவிகட்ட மகிழ்ந்தாயோ பாவி சந்திர
மதியென்றுபித்துயிலுடுத்த வைத்தாயோ தாவி—மா.

வசனம்

அரசனையும் அரசியையும் இங்கிருக்கும் இவ்வளவு ஜனங்களையும் இப்படி வருத்துவதால் உன் மனம் பதைக்கவில்லையென்றாலும்

கண்ணி

பாலன் துயாம் கண்டுமுன்மனம் பதைக்கவில்லையோ யிந்த
பாதகங்களுன்னைவிட்டப்பால் பற்றுமோ சொல்லையே—மா.

வசனம்

இவ்வளவு பாதகங்களை நீ புரிந்தும்

கண்ணி

தெய்வமுனக்கு துணையாய் நின்ற தென்னமோ மாயமிந்த
வையகத்திலுனைப்போல் வஞ்சகம் வகுப்பாரோ ஞாயம்—மா.
பாழுந்தெய்வ மிக்கோலஞ்செய்ய பார்த்துதே மிசையே நீ
ஏழு ஜென்மமெடுத்தாலும் பழி யேகுமோ மிசையே—மா.
செங்கோனீதி செயவுனக்குக் சேதோ முனியே பாவி
எங்கள் தாயை யிப்படிச்செய்தா லேற்குமோவினியே—மா.

விச். நீ இவ்வாறு பிதற்றுவதால் பயந்துவிடுவேனென்று எண்ணவேண்டாம். உன் அரசன் முன்போல் இருக்கவேண்டுமென்ற ஆசை உன் உள்ளத்திலிருக்குமாகில் அவனுக்கு புத்திசொல்லி இப்பெண்களுடன் கூடும்படியாகச் சொல்.

சந். அந்த எண்ணத்தை விட்டுவிடும்.

நாடு துயிழக்திட்டாலும் நற்பணி தோற்றிட்டாலும்
காடே தயுரைந்திட்டாலும் கட்டமே தினிவந்தாலும்

வேடமே குன்றினாலும் வேந்தனு மிராமாதின்
கோடதை விரும்பார் நீருங் கொள்ளுவீர் மனதிற்றனே.

(ஹரிச்சந்திரன் முதலியவர்கள் காவியுடையுடன் வருகிறார்கள்).

விச். ஹரிச்சந்தரா! உன்னைப் பார்த்தால் எனக்கு மிகவும் வ்யசனமாயிருக்கின்றது.

ஹரி. ஸ்வாமின்! எனக்கு சிறிதும் வ்யசனமில்லை. என் தோள்களிலிருந்து ஒரு பெரும்பாரம் இறங்கியதே என்று ஸந்தோஷப்படுகின்றேன்.

தேவ. அப்பா! மற்றொருவனுக்குக் கொடுத்துவிட்ட நாட்டில் நாம் எவ்வளவு காலம் இருப்பது! போகலாம் புறப்படுங்கள்.

ஹரி. ஐயனே எங்களுக்கு விடையளிக்கவேண்டும். (மூவரும் விச்வாமித்ரரை நமஸ்கரிக்கின்றார்கள்).

விச். அடா! இவ்வளவு காலம் உன்னை யோக்யனென்றல்லவா எண்ணியிருந்தேன். இப்பொழுதுதான் உன் வஞ்சக எண்ணங்களை அறிந்தேன்.

ஹரி. ஸ்வாமின்! எனக்கொன்றும் விளங்கவில்லையே.

விச். என் யாகத்திற்காகக் கொடுத்த பொன் எங்கே? அதைக் கொடுக்காமல் ஏமாற்றிவிடவல்லா எண்ணுகின்றாய்?

ஹரி. அது முன்னிட்ட முத்திரையுடன் அந்த அறையிலேயே இருக்கின்றது.

விச். என்னுடைய பொன்னையே எடுத்து எனக்குத் தானம் கொடுக்கத் துணிந்தாயா? இவ்வாண்மனை அறிவாள் ளவைகளுடன் எனக்குக் கொடுக்கப்பட்டதல்லவா?

ஹரி. ஆம்.

விச். அப்படியிருக்க அந்த அறையிலிருக்கும் பொன்னை எனக்குக் கொடுக்க உனக்கென்ன அதிகாரம் இருக்கின்றது?

ஹரி. முன் கொடுத்த தானத்தை மறுபடியும் கொடுப்பது எப்பொழுதாவது உண்டா?

விச். அதெல்லாம் எனக்குத் தெரியாது அதை நீக்கி இப்பொழுது தானம் செய்தாயா? கொடுக்கமாட்டேனென்று சொல்லிவிடு. இல்லாவிட்டால் கொடுத்துவிட்டு வெளியே போ.

ஹரி. (ஆத்மகதமாய்) இதென்ன தர்மஸங்கடமாகயிருக்கின்றது. ந்யாயத்தையும் ஒப்புக்கொள்ளமாட்டேனென்கின்றார். நீர் சொல்வது தவறு என்று கட்டாயமாகச் சொல்லவும் எனக்கு நாவெழவில்லை. (விச்வாமித்ரனிடம்) ஐயனே! எனக்கொரு தவணை கொடுப்பீராகில் அவச்யம் அதற்குள் தருவேன்

விச். சரி உன்னிஷ்டப்படி இருபது நாள் தவணை கொடுக்கின்றேன். அதற்குள் பணத்தைச் சேகரித்துக் கொடுக்கவேண்டும்.

ஹரி. இந்நாட்டைவிட்டு காசிநாட்டை அடைவதற்கே நாற்பது நாள்களுக்கு மேல் வேண்டும். அப்படியிருக்க இருபது நாளில் நான் எப்படிக் கொடுக்க முடியும்! தயை புரிந்து தவணையை சரியாகக் கொடுத்தால் அவச்யம் கொடுக்கின்றேன்.

விச். காலத்தைப் போக்குவதற்காக தவணை கேட்கிறாயா அல்லது வாஸ்தவமாக முயற்சிசெய்து பொன்னைக் கொடுக்க தவணை கேட்கின்றாயா?

ஹரி. அன்னவனறியச் சொல்லுகின்றேன். ஹரிச்சந்திரன் ஒரு வார்த்தை சொன்னால் அதன்படி நடந்தே தீருவான் என்று நம்பும்.

விச். அதையும் உலகோர் அறியட்டும். இன்றையத் தினம் முதல் நாற்பத்தியெட்டாவது நாள் சூர்யாஸ்தமனத் திற்குள் பொன்னைக் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால்—

ஹரி. இல்லாவிட்டால் என்பது ஹரிச்சந்திரன் விஷ யத்தில் வேண்டியதில்லை. யாராவது ஒரு ஆளை என்னுடன் அனுப்புவீர்களாகில் அவரிடம் கொடுத்துவிடுகின்றேன்.

விச். மிகவும் நன்றாயிருக்கின்றது. ஆளையுமா அனுப்ப வேண்டும்?

ஹரி. ப்ரபு! பொன்னை சேகரித்து இவ்விடம் வந்து கொடுப்பதானால் இந்த தவணைக்குள் திரும்பிவர முடியுமா!

விச். ஆனால் உனக்காக ஒருவனை அனுப்புகின்றேன்.

ஹரி. எங்களுக்கு விடையளியுங்கள் போய்வருகின் றோம் (மூவரும் நமஸ்கரிக்கின்றார்கள்).

விச். போய் வாருங்கள். கானகத்தை அடைந்ததும் நீ வேண்டிய தரகன் உன்னை அடைவான்.

ஹரி. மந்திரிகாள்! ப்ரபுக்காள்! நகரவாசிகாள்! (மூவ ரும் முழந்தாளிட்டு).

காம்போதி. தாளம்—ஆதி.

சரியை கிரியை யோகச் சார்பு ஞானங்கொண்ட
தவசிகளே நாங்கள் போய்வாரோம்.
வரிசை யலகையாளும் உலகமபுளோரே சேனு
வதிபதியே நாங்கள் போய்வாரோம்.
என்னை விட்டகலாம லிருந்த மந்திரிகளே
யிதோ காசிபட்டணம் போய்வாரோம்.
பொன்னை விளைவுசெய்யும் புனிதமாங் குடிகளே
புகழ்பெறக் காசிக்கே போய்வாரோம்.

சத்திய வணிகஞ்செய் சற்ஜனக் குணத்தோரே
சாற்றுங் காசிக்கிதோ போய்வாரோம்.
நத்தியின் ஞட்டில் வாழ் நண்பரே மைந்தரே
நாங்கள் காசிக்கிதோ போய்வாரோம்.
நீதிவழுவுறமல் நின்றிவர் மொழிப்படி
நெறியுடன் வாழ்குவீர் போய்வாரோம்.
பாதிமதி புனைந்த பரமன் வளருமந்த
பதிகாசி நகர் நாங்கள் போய்வாரோம்.

(பதுமைக் காக்ஷி)

அங்கம் II — காக்ஷி I

அயோத்திககடுத்த வனம், விச்வாமித்ரன் நக்ஷத்ரேசன்

நக்ஷ. அரசனென்றல் இப்படியல்லவோ ஸன்மானிக்கப்பட்டு இருக்கவேண்டும். அவர்களுக்கு விபத்து நேரிட்டாலும் ஜனங்கள் இவ்வளவு துக்கப்படமாட்டார்கள். அவர்கள் அழுவதைப் பார்த்தபொழுது எனக்கு எவ்வளவோ கஷ்டமாகயிருந்தது.

'தொடைதுறந்து முடிதுறந்து பணிதுறந்து திடிமுரசந்துறந்துதாமக்
குடைதுறந்து வெண்கவரிக்குழாந்துறந்து கரிபரி தர்க் குலந்துறந்து
கடைதுறந்து மறுகனைந்த காவலன்றன்றிருமுகத்தைக் கண்டோரெல்லாம்
அடைய மனமழிந்துருகியவரவரே முகத்திலறைந்தழுவாரானர்.'
சடைபிடித்துங் காம்பிடிசதுங் தாள்பிடித்தமரவுரியாற்றரைக்கதுடுத்த
உடைபிடித்து மீர்த்தவனே யுயர்வனத்கவிப்பொழுதே யோட்டுகின்
மடைபிடித்த வயல்சூழும் வளநாடு நீ புரக்க வருவாயென்று ரேம்
படைபிடித்த மலர்க்கரத்தாற் பதம்பிடித்து விறல்வேந்தர்பணிந்து வீழ்ந்தார்.

இதுமட்டுமா! அந்த ஜனங்கள் என்னென்ன சொல்லியழுதார்கள் என்பதை நீர் கேட்டிருப்பீராகில் பரீக்ஷை செய்யும் எண்ணத்தை இ. னுடன் விட்டுவிட்டிருப்பீர்.

'முன்செய்த தீவினையோ முனிசெய்தவுபகார முன்னுண்டாசப்,
பின்செய்த கைம்மாறோ பேரரசுகொடுத்த கன்றுபெறுங்காடெய்தல்
மின்செய்த நெடுவேலாய் மெய்த்தவனையாக விரந்துவிட்டோமாகில்,
என்செய்வானென வுரைப்பா யாம்போதுமவன் போருக்கெதிர்க்க
வென்பார்'.

'வல்லார்க்கு மாட்டார்க்கு மறமேநன்றென்றுரைப்பார் மறநன்றாமோ
அல்லார்க்குங்குழன் மடவீரறமே நன்றென்றுரைப்பாரது நன்றாகில
நல்லார்க்குந் தீயார்க்குமெல்லார்க்குமொருமைபிறனடவாதென்னே
எல்லார்க்குமுளதாகி லேவமோனுக்கிலயான தென்னேயென்பார்.

வீச். அவர்கள் அழுவதைப் பார்த்தால் நான் மேற்கொண்ட கருமத்தைவிட்டுவிடுவேனென்றா எண்ணுகின்றாய்! அதோ பார் அரசனும் நகரவாசிகளும் வருகின்றார்கள். நாம் மறைந்து நிற்போம் வா. (இருவரும் போகிறார்கள். அரசன் சந்திரமதி தேவதாசன் இவர்கள் நகரவாசிகளுடன் வருகிறார்கள். நகரவாசிகளில் சிறுவர்களெல்லாம் பாடிக்கொண்டே வருகின்றார்கள்).

சிறுவர்கள்:—கண்ணிகள். நாதநாமக்கிரியை.—ஆதி.

எப்படிப் பிரிவோமுன்னை எப்படிப் பிரிவோம் நாங்கள்
துரைவனைப் பிரியலாசசே தோழனே.
ஆண்டு மெங்களுடனே யழகாய் வாத்தாடிவிட்டே
அன்பாய்ப் பரிசீவாயே தோழனே.
வேண்டும் பணிதிகளும் விதந்தோருணவுகளும்
வினவியங்கள் செய்வாயே தோழனே.
பள்ளியிலெங்களுடன் படித்தநின் முகற்கொண்டு
பாவித்தாயெமகளையே தோழனே.
தள்ளி பாபாசஞ்சென்டு துண்டு கோலாட்டமெல்லாம்
தாயா மறந்திட்டாயே தோழனே.
உன் நேசமொன்றெங்களை யூரார் கனப்படுத்தும்
உரிமையின்றுடன் போச்சே தோழனே.

தெய்வம் பிரிக்கப் பாவந் தீமை செய்தோமோ வேறு
நிலைகாணோம் மதி தோணோம் தோழனே.
கைதவப் பலனிதோ கண்டோம் வேறுகதி
காணோ மனமும் தோழனே.

தேவ. நண்பர்காள்! வீணாய்த் துக்கப்படுவதில் என்ன பலன்! பிரஹமன் விதித்தபடி எல்லாம் நடக்கவேண்டியது தானே. விச்வாமித்ரமுனிவர் காரணபூதமாகச் செய்யப்பட்டாரேயன்றி இவைகளையெல்லாம் அவருக்கும் மேலான மற்றொருவன் நடத்திவைக்கின்றான், தெரிந்துகொள்ளுங்கள்.

ஹரி. நகரவாசிகாள்! நீங்களெல்லாம் இப்படி துக்கப்பட்டால் எங்கள் மனதும் கரைந்துவிடும். ஹரிச்சந்திரன் கண்ணீர்விடுவானாகில் அதைவிட துஷ்கிருத்யம் அவனால் என்ன செய்யக்கூடும்? அப்படியிருக்க நீங்கள் நகருக்குத் திரும்பி கௌசிக முனிவருக்கு எது இனியதோ அதுவே எனக்கும் இனியதென்பதை அறிந்துகொண்டு நடந்துவாருங்கள். விதியை தூஷித்து கண்ணீர் விட்டால் கடவுளை தூஷித்ததுபோலாகும். ஆனால் பரமேச்வரன் செய்வதெல்லாம் நமது நன்மையின்பொருட்டே என்று எண்ணி ஸந்தோஷமாய்ப் போய்வாருங்கள்.

சந். வழிவிடுவதற்காக வரும் ஜனங்கள் நதியைத் தாண்டிவருதல் ஆகாதென்று மூத்தோர்கள் சொல்வதுண்டு. ஆகையால் இவ்விடத்திலிருந்தே திரும்பிவிடுங்கள்.

நகரவாசிகள். எங்களை இதுவரையில் பாதுகாத்து வந்த ப்ரபுவே! நீங்கள் எவ்வளவுதான் சொல்லியபோதிலும் எங்கள் மனம் தேறுதல் அடையாது. ஆனால் தங்களுடைய மனதைப் புண்ணாகச் செய்ய இஷ்டம் சிறிது மில்லாததால் நாங்கள் நகருக்குத் திரும்புகின்றோம். தங்களுடைய சத்யமே தங்களைக் காக்குமென்று உறுதியாய் நம்புகின்றோம்.

(நகரவாசிகள் சேவித்துவிட்டுத் திரும்புகின்றார்கள். ஹரிச்சந்திரன் சந்திரமதி தேவதாசன் சத்யகீர்த்தி இவர்கள் சிறிது காலம் அவர்களைப் பார்த்தவண்ணம் நிற்கின்றார்கள்).

ஹரி. சத்யகீர்த்தி! எதற்காக நிற்கின்றாய் போய் வா.

சத். ஐயோ! தங்கள் வாயால் இவ்வார்த்தைகளைக் கேட்க படுபாவி நான்போன ஜன்மத்தில் என் பாதங்கள் புரிந்தேனோ!

ஹரி. சத்யகீர்த்தி! இதென்ன இப்படியெல்லாம் சொல்லுகின்றாயே! தவச்ரேஷ்டர் நமது நகரவாசிகளின் குணத்தை அறியமாட்டார். ஆகையால் நீ அவருடன் இருந்து ராஜ்ய கார்யங்களை நடத்திவரவேண்டாமா?

சத். ஐயனே! தங்களுக்கு சிச்ருஷை செய்த இக் கரங்களால் இன்னொருவனுக்கு நான் சிச்ருஷை செய்வவோ! தங்களை வணங்கிய இத்தலையால் இன்னொருவனை வணங்கவோ! தங்களுடன் வருவதற்கு எனக்கு உத்திரவு கொடுக்காவிட்டால் என் உயிர் போய்விடும். ஆகையால் முனிவனுக்கு முழுஉலகையும் அளித்த உதார குணமுடையவனே உன்னை தனியாகவிட்டு நான் போகாதிருக்கும்படி இந்த ஒரு வரம் எனக் களிக்கவேண்டும்.

சந். ஆர்ய! அவரைப் பிரிந்துஉயிர் வாழ்வது நமக்கும் அஸாத்யமான கார்யம்தான்.

ஹரி. நாட்டையளித்து ராஜ்யகார்யத்தை நடத்தும் திறமையுள்ள அமைச்சனை அழைத்துச் சென்று விட்டேனென்று கௌசிக முனிவன் கோபம்கொண்டால் என்ன செய்வது!

தேவ. ஒருவருடைய கோபம் நம்மை என்ன செய்யக் கூடும். நடக்கவேண்டியவைகளை யெல்லாம் அயன் எழுதி

விட்டிருக்கின்றான். நாமாக அவருடன் இருக்கவேண்டியதில்லையென்று அழைத்துச் சென்றால் குற்றம் ஏற்படுவது ந்யாயம். அவராக வந்துவிட்டால் குற்றம் நம்முடையதல்ல.

ஹரி. தேவதாசா! நீ சிறியகுழந்தை உனக்கொன்றும் தெரியாது. நாம் கொடுத்த ஒரு வரம் நிறைவேறுவதற்காக நம்மால் என்னென்னவேலைகள் செய்யமுடியுமோ அவைகளெல்லாம் செய்யவேண்டுமேயன்றி யதற்கு விரோதமான காரியத்தை நாம் செய்யவில்லை என்ற த்ருப்தியுடன் மாத்திரம் இருந்தால் போதாது.

சத். நீங்கள் சொல்வது வாஸ்தவம்தான். ஆனால் த்ரிமூர்த்திகள் வந்து சொல்லியபோதிலும் நான் கௌசிகனிடம் திரும்பமாட்டேன். இவ்விடத்திலேயே ஆகாரமின்றி இறக்கவேண்டியிருந்தால் அதைத் தடுத்து தங்களுடன் என்னையும் அழைத்துச் செல்லவேண்டியது தர்மமல்லவா?

ஹரி. சரி. நீ அவ்வளவு உறுதியாகச் சொல்லும் விஷயத்தில் நான் உன்னை என்னுடன் வர வேண்டாமென்று சொல்லவில்லை. (நக்ஷத்திரேசன் வெளியே வருகின்றான்).

நக்ஷ. கௌசிகர் கூறிய குறிகளால் நீயே ஹரிச்சந்திரனென்று நம்புகின்றேன். முனிவனுக்குக் கொடுக்கவேண்டிய பொன்னை எப்பொழுது எவ்விடத்தில் அளிக்கப்போகின்றாய்? அதுவரையில் என்னை ஸரியாக ரக்ஷீத்துவருவாயாக?

ஹரி. இந்த எளியோனைத்தான் ஹரிச்சந்திரன் என்று சொல்வார். தவசிரேஷ்டர் அனுப்பிய தூதர் தாங்கள்தாம் என்று எண்ணுகின்றேன். க்ருபை கூர்ந்து காசிக்கேகினால் கடனைதீர்த்துவிடுகிறேன். காசிநகரை அடையும் வரையில் எங்கள் தேகத்தை எவ்வாறு ஸம்ரக்ஷிப்போமோ அம்மாதிரி தங்களையும் பாதுகாத்து வருகின்றோம்.

நக்ஷ. மிகவும் ஸந்தோஷம். நீ உத்தமன் என்பது உன் முகத்தைப் பார்க்கும்பொழுதே தெரிகின்றது. இச்சிறுவனை யும் லக்ஷ்மிபோன்ற இம்மங்கையையுமா காசி நகருக்கு நடத்தி அழைத்துப்போவதாக எண்ணியிருக்கின்றாய்?

ஹரி. இவள்தான் இப்பாவியை மணந்த சந்திரமதி யென்பவள். இச்சிறுவன்தான் எங்கள் குமாரன் லோகி தாஸனென்று முதலில் வழங்கிவந்து உபாத்தியாயரால் தேவ பக்தி நிறைந்தமையால் தேவதாஸனென்று பெயர் கொடுக் கப்பட்டு அவ்வாறே இப்பொழுதும் வழங்கிவரப்படுகின்ற வன். இவர்களும் என்னுடன்தான் வருகின்றார்கள்.

நக்ஷ. அடா பாவி! இவ்வளவு கடூர மனதை உடைய காதகனா நீ?

ஹரி. ப்ராஹ்மணோத்தமா! நான் என்ன தவறிழைத் தேன்?

நக்ஷ. இவர்களை இவ்வனங்களின் வழியாக நடத்தி அழைத்துச்செல்ல எப்படியடா உன் மனம் துணிந்தது?

ஹரி. அவர்கள் நடக்கவேண்டுமென்று அவர்கள் தலை யில் எழுதியிருந்தால் யார்தான் என்னசெய்ய முடியும்!

நக்ஷ. தலையாம் விதியாம்! நீ வார்த்தைசொல்வது மிக வும் அழகாயிருக்கின்றது! இவ்வளவு பாவமும் உன் தலையில் தான் என்று தெரிந்துகொள். மற்றவர்களுக்கு நன்மையைச் செய்யும்பொருட்டு நாம் ஒரு தவறான காரியத்தைச் செய் தால் அதனால் நமக்குப் புண்ணியமேயன்றி பாபம் கிடையா தென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. ஆகைபால் நீ இப்பெண்ணரசிக்கும் இச்சிறுவனுக்கும் உண்டாகும் நன்மை யைக் கருதியாவது தாசிப்பெண்களை மணந்தாவது அல்லது உன் குடிகளைவிட்டு விச்வாமித்ரனைத் துறத்திவிடச் சொல்லி யாவது நாட்டைக் கைப்பற்றிக்கொள்ளலாகாதா!

ஹரி. தன்விஜோத்தம! தாங்கள் இப்படியெல்லாம் சொல்வது சரியல்ல. எங்களுடன் வந்து பணத்தை வாங்கித் திரும்புவதொன்றே தாங்கள் செய்யவேண்டியதென்பதை மனதில் கொள்ளுங்கள்.

நக்ஷ. உன் ஸுகத்தைக் கருதி உனக்கு நான் புத்தி சொன்னால் கேட்கமாட்டேனென்கிறாய். ப்ராஹ்மணன் வார்த்தையை எவன் கேட்கின்றான் இக்காலத்தில்! உன் மனம்தான் கல்லென்றால் அப்படுபாவி விச்வாமித்ரன் மனமும்—

ஹரி. இதென்ன வார்த்தைகள்? என் பிதாவுக்கு தன் தவப்பலனையெல்லாம் தந்து நற்கதியைக் கொடுத்த உத்தமனை என்முன் தூஷிப்பது தகுதியல்ல. என்னுடைய நலத்தைக் கருதியே சதுர்முகன் இவ்வாறு என் தலையில் எழுதியிருக்கின்றான். உலகில் நடக்கும் ஒவ்வொன்றும் உலகோர் நன்மைக்கே என்று நம்பும். காலதாமதமின்றி

சங்காபரணம்—ரூபகம்

போவோம் வாரீர் போவோம் வாரீர் புகழும்காசி
மகிழ்வதாக போவோம் வாரீர்

நாடுவிட்டே வந்தோமிங்கு காடுதாண்டிச் செல்வோமங்கு
கொடுமேனும் பொன்னைத்தேடி கொப்பனவளிக்கவேண்டி—போ.

நக்ஷ. நீ அழிவதற்காக கங்கணம் கட்டிக்கொண்டிருந்தால் நான் என்னசொல்லியும் பலன் கிடையாது. எனக்கு அகோரமான பசியெடுக்கின்றது. புசிப்பதற்கு ஏதேனும் கொடுத்தால்தான் நான் இதைவிட்டு வரமுடியும்.

ஹரி. ஆனால் இவ்விடத்திலேயே வீற்றிருங்கள். நான் சென்று எதையாவது கொண்டுவருகின்றேன்.

சந். அரசே! இவ்வளவு காலமாய் தங்களுக்குப் பணிவிடை புரிந்துவந்த நான் உயிருடனிருக்க தாங்கள் எதற்

காகச் செல்லவேண்டும்! இங்கேயே இருங்கள். நான் போய் அகப்படக்கூடியவைகளைக் கொண்டுவருகின்றேன்.

ஹரி. உன்னிஷ்டம் (சத்தியகீர்த்தி போகின்ருன்).

நக்ஷ. குழந்தாய் தேவதாஸா! இப்படி வா. உனக்கு இப்படியெல்லாம் நடந்துபோவது ச்ரமமாக இல்லையா?

தேவ. கஷ்டமென்ன! ஸுகதுக்கங்களெல்லாம் நம்முடைய மனதின் நிலைமையையல்லவா ஒத்திருக்கின்றது. என்னுடைய மனதுக்கு துக்கமென்பதே கிடையாது. நீர் சொல்வதைப் பார்த்தால் உம்முடைய மனதுக்கு ஸுகமென்பதே கிடையாதுபோல் தோன்றுகின்றது.

நக்ஷ. நீ சிறியவன் உனக்கு உலகமே தெரியவில்லை. ஐயோ ஐயோ! ஹரிச்சந்திரா அங்கே பார் பயங்கரமான பூதங்கள் வருகின்றன. அடா பாவி! உனக்கு ஹிதத்தைச் செய்ய வந்ததற்கு என் மனைவி மக்களை யினி பார்ப்பதற்கில்லாமல் போய்விட்டதேடா! (பூதங்கள் வருகின்றன).

ஹரி. ஸ்வாமின்! நம்மிடத்தில் ஏதேனும் கல்மஷம் இருந்தால்தான் நாம் பயப்படவேண்டும். சுத்தமான ஆத்மாக்களிடத்தில் இவைகளால் ஒன்றும் செய்யமுடியாது.

நக்ஷ. மனுஷ்ய ஜன்மம் எடுத்தவர்களில் சுத்தமான ஆத்மாக்களும் இருக்கின்ருர்களோ! ஐயோ! அவை என்னை நோக்கியே வருகின்றனவே!

தேவ. கெட்ட எண்ணத்தை உடையவர்களுக்கு எல்லோரும் கெட்ட எண்ணத்தை உடையவர்களாகவே தோன்றுவார்கள். பச்சைநிறமுள்ள ஒரு கண்ணுடியின் மூலமாகப் பார்த்தால் உலகெல்லாம் பச்சையாகவே தோன்றும். அது போல் பாவச் செய்கைகளைத் தாங்கள் செய்திருந்தால் உல

கில் உள்ளவர்களெல்லாம் பாவிகளாகவே இருக்கவேண்டு மென்று தாங்கள் நினைப்பது ஸகஜம்தான். ஆனல்—

நக்ஷ. என்னை இப்பூதங்கள் கையைப்பிடித்து இழுக்கின்றனவே! இப்பொழுது தத்வம் சொல்லிக்கொண்டு இருக்கின்றீர்களே. ஐயோ! ஐயோ! (கையைப்பிடித்து இழுக்கின்றன).

ஹரி. பூதங்காள்! விடுங்கள் அந்த ப்ராஹ்மணோத்தமனை.

பூதத்தலைவன். (விட்டுவிட்டு) அடா க்ஷத்ரியப்பதரே! எங்களைத் தடைசெய்யும் நீ யார். இதோ உன்னை என்ன செய்கின்றேன் பார்!

ஹரி. (புனனகையுடன்) பூதங்காள்! இந்த ஆர்பாடத்திற்கெல்லாம் பயப்படுகின்றவனல்ல. அவரை எதற்காக வற்புறுத்துகின்றாய்?

பூ.த. நீ யார் கேட்பதற்கு? ப்ராஹ்மண போஜனத்திற்காக எவ்வளவு காலமாக காத்திருந்தேனென்பது உனக்குத் தெரியுமாகில் நீ இப்பொழுது தடைசெய்யமாட்டாய்.

ஹரி. நான் சொல்வதைக்கேள். உனக்குப் பசியாயிருந்தால் நான் இருக்கிறேன். என்னைப் பக்ஷித்துக்கொள்.

பூ.த. அடே ஹரிச்சந்திரா! ப்ரஹக்ஷத்ரிய வைச்ய சூத்ரர் எனப்படும் நான்கு வருணத்தாரையும் புசித்திருக்கும் எனக்குத் தெரியும் ப்ராஹ்மண போஜனத்தின் ருசி! ஆகையால் வீணாய் என்னைத் தடைசெய்து அழியாதே! அவனைப் புசிக்காமல் நான் திரும்பேன். சேவகர்காள்! பிடியுங்கள் அவனை. (நக்ஷத்திரேசனை பூதங்கள் பிடிக்கப்போகின்றன.)

ஹரி. (குறுக்கே நின்றுகொண்டு) விலகி நில். நீயாக போகின்றாயா? அல்லது—

பூ. த. என்ன செய்துவிடுவாய்? இவனையும் பிடித்து வாருங்கள். (பூதங்கள் ஹரிச்சந்திரனைப் பிடிக்கப்போகின்றன).

ஹரி. பரபாசாரம் நிறைந்த ப்ரேதங்காள்! ஹரிச்சந்திரன் சத்யவான் என்பது உண்மையாகில் தர்மம் தலைகாக்கும் என்பது உண்மையாகில் உங்கள் கைகள் நீங்கள் இவ்விடத்தைவிட்டுச் செல்லும்வரை உங்கள் ஸ்வாதீனத்தில் இல்லாத வண்ணம் முக்கண்ணன் செய்தருள்வார். (பூதங்கள் கைகளைத் தூக்கமுடியாமல் ஒன்றையொன்று பார்த்துநிற்கின்றன).

பூ. த. மற்றொரு ஸமயம் பார்த்துக்கொள்ளலாம் வாருங்கள். அடே! தப்பிவிட்டதாக எண்ணவேண்டாம். நீங்கள் நித்திரைக்குப் போகும்பொழுது வருகின்றோம் பார். (போகின்றன).

நக்ஷ. முன்னால் போங்கள், அப்புறம் வாருங்கள். ஹரிச்சந்திரா! சத்யவானென்றால் நீதான் சத்யவான். நீதிநெறி தவறாவண்ணம் உன்னை உமாநேசன் காப்பாற்றுவானாக. (சத்யகீர்த்தி பழங்களைக் கொண்டுவந்து ஹரிச்சந்திரனிடம் கொடுக்கின்றான். அவன் அவைகளை நக்ஷத்ரேசன் முன்னில் வைக்கின்றான்). அடா! இதையா நான் சாப்பிடவேண்டும்?

ஹரி. அடவியில் அகப்படக்கூடியவைகள் இவைதாம்.

நக்ஷ. நீயு முனியு நிகழ்த்தி நெறி முறை னுணர்ந்து
தோயுந் தயிர் நெய் பால் சோற்றோடருந்தாமல்
காயுங் கிழங்குங் கனியு மிலையுந் தின்று
வாயும் வயிறும் வளர்க்கிலேன் மன்னவனே.

நான் கேட்கும்பொழுது சரியாக என்னைப் பாதுகாத்து அழைத்துச் செல்வதாகச் சொன்னாயே, இதற்குள்ளாகவா மறந்துவிட்டாய்?

ஹரி. கோவித்துக்கொள்ளலாகாது. தங்களுக்கில்லா மல் நாங்கள் புசித்தால் தவறாகும். ஆனால் என்ன அகப்படு கின்றதோ அதை தங்களிடம் ஸமர்ப்பித்து தாங்கள் புசித்து வேண்டாம் என்று தள்ளிவிட்டதையே நாங்கள் எடுத்துக் கொள்வோம். காலகெதிக்கு யார்தான் என்ன செய்யமுடி யும்! மற்றவர்கள் நலத்தை எண்ணி சிவபெருமானும் நஞ் சைப் புசிக்கவில்லையா? அதுபோல் இப்பாவியின்பொருட்டுத் தாங்களும் இவைகளைப் புசிக்கவேண்டும்.

நக்ஷ. நாய்வேடந் தரித்துவிட்டு குலைக்க முடியாதென் றால் விடமாட்டார்கள். (சாப்பிடுகின்றார்).

சந். அம்மணி! தங்கள் கால்களில் என்ன பட்டது?

ஹரி. எங்கே அடிபட்டது இப்படி ரத்தம் பெருகும் படியாய்?

சந். அடி யெங்கும் படவில்லை. நடக்கும்பொழுது வழியிலிருந்த கல்களாலும் முள்களாலும் இப்படியாயிற்று.

ஹரி. பஞ்சணை மெத்தை காலில்பட்டால் உன் பாதங் கள் நோகும். அப்படியிருக்க இப்பாவியை மணந்ததால் நாடு நகரைவிட்டு காட்டையடைந்து நடக்க நேரிட்டதல்லவா! என் தோளின் மீதாவது ஏறிக்கொள்ளுகின்றாயா?

சந். அது நியாயமல்ல. என்னுடைய பதிவ்ருதை யென்ற பெயரும் அவ்வாறு செய்தால் என்னைவிட்டகலு மல்லவா!

நக்ஷ. சரி நான் சாப்பிட்டாகிவிட்டது புறப்படலாம்.

தேவ. அம்மா! அதோ பார் திடீரென்று விருக்ஷங்க ளெல்லாம் தீ பிடித்தெரிகின்றன.

சந். இதென்ன இடையூறின் மீது இடையூறாக வரு கின்றது.

நக்ஷ. இதென்ன விபரீதம். அதோபார்! அதோபார்! நாலு பக்கங்களிலும் அக்கினி சூழ்ந்துகொண்டது: நாம் இங்கிருந்தால் இறக்கவேண்டியதுதான். இதைவிட்டு எந்த திக்கில் சென்றாலும் இறக்கவேண்டியதுதான். இந்த ஸங்கடத்திற்கு என்ன செய்வது. அடா துராத்மா! உன்னுடன் சேர்ந்ததுமுதல ஏதாவது தீங்கு விளைந்துகொண்டேயிருக்கின்றது. அடா பாவி! அணைப்பதற்கு ஏதாவது முயற்சி செய்யாமல் நின்றுகொண்டிருக்கின்றாயே!

ஹரி. சத்யகீர்த்தி! நீ எனக்கொரு வரமளிக்கவேண்டும்.

சத். உத்தமனே! தாங்களிட்ட வேலையைச் செய்ய எப்பொழுதும் காத்திருக்கின்றேன்.

ஹரி. அக்கினி பகவானை த்ருப்திசெய்து உங்களுக்கு வழிவிட வரம்வேண்டி நான் என்னையே ஆகுதியாகக் கொடுத்துவிடுகின்றேன். நீ இவர்களைக் காசிக்கழைத்துச் சென்று இவ்விருவர்களையும் அடிமைகளாக விற்று முனிவன் கடனை தீர்த்துவிடுகினறாயா?

நக்ஷ. அடா சண்டாளா! என்னை இக்கதியில்விட்டு முனிவனை ஏமாற்றி உயிரைவிட்டுவிடவா ஆலோசிக்கின்றாய்? உன் குருவின் மீது ஆணை! நீ என் பொன்னைக் கொடுக்காமல் இதோ இந்தக் கீற்றைத் தாண்டலாகாது.

சத். ஐயனே! தங்களுக்கு அந்த எண்ணம் வேண்டாம். நான் இருக்கின்றேன். என்னை பலியாகக் கொடுத்துவிடுங்கள்.

ஹரி. த்விஜோத்தமா! ஆணையை மீட்டுக்கொள்ளுங்கள். நான் அக்கினியில் வீழ்வதில்லை, என் வார்த்தையை நம்பி ஆணையை மீட்டுக்கொள்ளுங்கள்.

நக்ஷ. சரி மீட்டுக்கொண்டேன். வெளியே போக மார்க்கத்தைச் சொல்.

தேவ. பரமேச்வரா! இப்படும்பாவி சூர்ய வம்சத்தில் ஜனிக்கும் வரையில் அக்குலத்திலுதித்த மன்னர்கள் இந்த தசையை அடைந்ததில்லையென்பது உலகோர் அறிந்த விஷயம். இப்பாவியே அதற்குக் காரணமாக இருப்பதால் இப்பாவியைப் பலியாக அங்கீகரித்து—

சந். ஐயோ தேவதாஸா! கண்மணி! வேண்டாமடா. உன்னைப் பெற்றெடுத்த அன்னையின் மனதைப் புண்படுத்துவது உனக்கழகல்ல. கணவனுக்காக உயிரைவிடும் பாக்யதை உலகில் பெண்கள் எதை உயர்ந்ததாக மதிக்கின்றார்களோ அதை அவரிடமிருந்து பெற்ற அவர் மனைவிக்குதான் உண்டு. அவ்வாறு செய்வதால் எங்களுக்கு இகத்திலும் பரத்திலும் ஸுகம் உண்டு. ப்ராணநாதா! தங்கள் அனுமதியின்றி நான் எதையும் செய்யலாகாது. ஆகையால் எனக்கு அனுமதியளிக்கவேண்டும். நான் அதில் வீழ்ந்து தங்களைக் காப்பாற்றுகிறேன்.

ஹரி. கண்ணே!

தேவ.

தந்தை தாயொருகாலத்தில் தாம் மனந் தளர்வாராகில்
மைந்தனுதித்தோன் சத்ய மறிந்தவனென்றாரே
முந்தாய்ச் சென்றுவந்த மொய்த்ததோர் துயரைத் தீர்ப்பான்
எந்தையே நான்போய் வீழ்வே னினிய சத்தியங்காப்பீரே.

சந். பால்வாய் மாறாத பாலகனுக்கு இவ்வளவு தைரியமும் புத்தியும் எங்கிருந்தடா வந்தது! நீ சிறு குழந்தை. அப்படியெல்லாம் நீ செய்யலாகாது.

தேவ. அம்மா! நீ எதற்கு பயப்படவேண்டும்? சூர்ய குலத்தில் த்ரிசங்குவின் பௌத்திரனும் சத்ய ஹரிச்சந்திரன்

மகனும் பதிவிருதாசிரோமணி சந்திரமதியின் மகனும் சத்யந் தவறாத தேவதாஸனும் நான், என்பது வாஸ்தவமாகில் என்னை ஒருகாலும் அக்னி பகவான் சுடமாட்டார். ஆகையால் எனக்கு விடையளித்தருள்வீர்.

சந். நீ சொல்லிய வார்த்தைகள் என் விஷயத்திலும் பலிக்குமாதலால் கண்ணே! நான் போய் விழுகின்றேன்.

தேவ. என்னருமைத் தந்தையே! தாங்கள் தாம் இச் சண்டையைத் தீர்க்கவேண்டும். நானிருக்க என அன்னை உயிரைவிட்டால் உலகோர் என்ன சொல்லுவார்கள்?

ஹரி. மாங்கரால் இறத்தல் வாழ்தல் மாதரார்க்கென்று சாஸ்திரங்களை ஆராய்ந்துணர்ந்தவர்கள் சொல்லியிருப்பதால் அந்த பாத்யதை உன் அன்னைக்குத்தான்.

சந். ப்ராணநாதா! நான் போய் வருகின்றேன் ஸந்தோஷமாக விடையளியும்.

ஹரி. கண்ணே! சீக்கிரத்திலேயே முனிவன் கடனைத் தீர்த்துவிட்டு நானும் மேலுலகில் உன்னைச் சேருகின்றேன்.

தேவ. (நமஸ்கரித்துவிட்டு) தெய்வமிருப்பது வாஸ்தவமாகில் நீ உடனே திரும்பி வந்துவிடுவாய். (சந்திரமதி போகின்றாள். ஹரிச்சந்திரனும் தேவதாஸனும் பின் செல்கின்றார். உடனே அக்னி அணைந்துவிடுகின்றது. மூவரும் திரும்புகின்றார்கள்.)

நக்ஷ. ஹரிச்சந்திரா! இதென்ன ஆச்சரியம். அக்னி எப்படி திடீரென்று அணைந்தது?

ஹரி. அடிகாள்! எல்லாம் தங்களைப்போன்ற உத்தமர்களின் ஆசிர்வாதத்தினால்தான்.

மறைவழி நடந்தேமாகில் வரும்விருந் திகழ்ந்தேமாகில்
முறைவழி செய்யேமாகின் மூப்பரை யிகழ்ந்தேமாகில்

பிறர்மனை நயந்தோமாகிற் பிறர் மனம் வைத்தேமாகில்
குறைசில செய்தேமாகிற் கொல்லெனக் கனலிற் பாய்ந்தாள்.

மதுரமென் மொழியாள் கற்புவளர் நெகிவடவைத்தீயின்
முதிர் தழலது தானென்னைச் சுடுமெனு முழக்கு செந்தீ
அதிர் குரலார்ப்ப மாறி படங்கி நாவொடுங்கிக் காலைக்
கதிரவன் வரவுகண்ட விருளெனக் கழிந்ததன்றே.

நக்ஷ. என்ன ஆச்சர்யம்! என்ன ஆச்சர்யம்! பாதிவ்ருத்யாக்னியை அக்னி பகவானாலும் தாங்கமுடியாதென்பது வாஸ்தவமென்பதை இன்றுதானறிந்தேன். சந்திரமதீ! உன்னைப்போன்ற உத்தமிகள் யாரும் மூவுலகிலும் கிடையாது. நீ பாயவும் அக்கினியே அணைபவும் எவ்வளவு ஆச்சரியமாக இருக்கின்றது! உங்கள் சத்தியத்திற்கு ஒரு பங்கமும் வாராது பயப்படவேண்டாம்.

சந். எல்லாம் தங்கள் ஆசீர்வாதம்! புறப்பட்டு

சங்கராபரணம்—ரூபகம்.

போவோம் வாரீர் போவோம் வாரீர் புகழும் காசி
மகிழ்வதாக போவோம் வாரீர்.

நாணமென்பதையும் போக்கி காமிருத்த ஸ்திதியும் நோக்கி
வானவர்களேத்துங் காசி வாசனைப் பணிவோம் நாமே — போ.

அங்கம் II—காக்ஷி II

காசிக்கடுத்த வனம்

ஹரிச்சந்திரன், சந்திரமதி, தேவதாஸன், சத்தியகீர்த்தி, நக்ஷத்ரேசன். ப்ரவேசம். ஹரிச்சந்திரன் பாடியவண்ணம்.

தோடி—ஆதி.

பல்லவி

காங்குவிப்பாய் மயிலே யதோ காசி காணுதுபார் குயிலே.

அநுபல்லவி

பிரமனன்றெழுதிய	பெருவிதிக் கருமங்கள்	
பிந்தித் தொடரா நாளும்	பெருமான் வாழ்நகர்	—காங்.

சரணங்கள்

நால்வகை யோனிகளில்	நாட்டிலெழு — தோற்றமாய்	
நமன் வாதைக்காளாக	நாடிப் பிறந்த துன்பம்	
காலுமேற் றலைகீழாய்	கருதி நின்றுழலுமந்தக்	
கயவர் தமக்கே துயர்	கடக்க வருமோ வின்பம்	
கண்டவர் மகிழ்வுற	அண்டவர் பதவிபெற	
கொண்ட வறுமையற	எண்டிசை புகழ்தர	
கொற்றவன் பிரணவ	முற்றவனரிதவம்	
பெற்றவன் றெரிசவ	சுற்றன வாழ்நகரதோ	—காங்.
அரனடி நினையாம	லங்கத்தை யொடுக்கியே	
அண்டிய மாதினையே	யகற்றி நிலை விடுத்தே	
சாகினையே புசிக்கச்	சார்ந்து மடவிபுக்கு	
சாற்றுங் குருமொழியைச்	சாரா நெறிவகுத்தே	
தன்னுள்ள யாணவம்	என்னதெனும் பவம்	
முன்னமதின் கனம்	வன்னதாகுந் தவம்	
வேறுபடாமலே	நேர்விடாமலே	
பேரு கெடாமலே	சாரும் பிரமன்னகர்	—காங்.
தீராத் துயர்கள் போக்கித்	திவ்ய பதவி வாய்க்கும்	
தேஜோன்மயசதைக் காண	தெரியுமருளைத் தாக்கும்	
ஆரானபவமது	வகற்றியே யடிமானே	
அன்பர்கள் வாழுமந்த	வருஞ்சபை தன்னில் சேர்க்கும்	
அடவியிற் சென்றதும்	திடமுடனின்றதும்	
புடமிசை விண்டதும்	பிடாது கொண்டதும்	
அற்றிடப் பலதுயர்	பெற்றிடச சற்கதி	
உற்றிட நற்பெயர்	நற்றிதோ சிவநகர்	—காங்.

அதோ பார் தெரிகின்றது காசி நகர். இப்பொழுதே எனக்குள் ஓர் ஆனந்தம் உண்டாகின்றது. காசி, கண்ணில் பட்ட

தும் நாம் நமஸ்கரித்துவிட்டு எழுந்திருந்தபொழுது என் மனம் இருந்த ஸ்திதியை நான் என்னென்று சொல்வேன்!

நக்ஷ. காசி காண்கின்றது வாஸ்தவமே ஆனால் பொன்னைத்தான் காணோம்.

ஹரி. காசிக்குச் சென்றால் எல்லாவிதக் கவலைகளும் தீர்ந்துவிடும். ஆகையால் அங்குச் சென்றதும் என் கடனும் தீர்ந்துவிடும் பயப்படவேண்டாம்.

நக்ஷ. ஹரிச்சந்திரா! ஹரிச்சந்திரா! உன்னுடைய அதிர்ஷ்டத்தை நான் என்னென்று சொல்வேன்! உன் சத்யம் உன்னைக் காப்பாற்றிவிட்டது.

ஹரி. தாங்கள் சொல்வது எனக்கொன்றும் புலப்படவில்லை.

நக்ஷ. சிவபெருமானே உன்னைக் காப்பாற்றவேண்டுமென்று அதோ பார் பொன்னைக் கொட்டி வைத்திருக்கின்றார். அந்த இடத்தில் பூமியினடியில் இன்னும் எவ்வளவு பொன் இருக்கின்றதோ! நீ ஸுகமாக வாழ்வாயாக! அதை எடுத்து முனிவன் கடனுக்காகக் கொடுத்துவிடு.

ஹரி. அதோ கொட்டியிருக்கின்றதே அதையா சொல்லுகின்றீர்?

நக்ஷ. ஆம்.

ஹரி. என்னை ஏளனம் செய்கின்றீரா என்ன? மற்றொருவனுக்குப் பாத்யப்பட்ட பொன்னை நான் எப்படி எடுத்துக்கொடுப்பது?

நக்ஷ. மற்றொருவனுக்கு பாத்தியப்பட்டதா? காட்டில் புதையல் கிடைத்தால் அதை எடுத்துக் கொள்வதால் ஒருவனுடைய சொத்தை எடுத்தவனாக உன்னை எப்படிச் சொல்

லக்கூடும். அது தவிர இதை யார் பார்க்கப்போகின்றார்கள்? நான் சொல்வதைக் கேள், உனக்கும் ஸுகம் எனக்கும் ஸுகம்.

ஹரி. எல்லோர்க்கும் தர்ம சாஸ்திரத்தை எடுத்துச் சொல்லவேண்டிய தாங்கள் இப்படிச் சொல்வது சரியல்ல. அப்பொன் முழுவதும் மற்றவர்களுக்கு பாத்யப்படாவிட்டால் இந்நாட்டின் அரசனைச் சேர்ந்ததல்லவா? அப்படியிருக்க நான் அதைத் தொடுவதும் சரியல்ல. யார் பார்க்கப்போகின்றாரென்றல்லவா சொல்லுகின்றீர்? ஒருவனுக்காக நாம் சத்யத்தை மேல்கொண்டிருந்தாலல்லவா அப்படிச் சொல்லவேண்டும். நானறிய என் கரங்களால் அப்படிச் செய்யலாகாது.

நக்ஷ. உன் கையினால் தொடலாகாதென்றுதானே சொல்லுகின்றாய். சரிதான். நான் அதை எடுத்து உன் பொன்னாக முனிவனிடம் கொடுத்துவிடுகின்றேன். முனிவன் கேட்டால் உனனுடைய பொன்தானென்று ஒப்புக்கொண்டுவிடு.

ஹரி. இறவிமதி மாறினாலு மெழுகடற் பொங்கினாலும்
வாமத பொய்த்திட்டாலும் வாயிற்பொய்யுரையேன்
[சுவாமி.

நக்ஷ. என்னால் உன்னுடன் நடந்துவர முடியாது. நான் இதை எடுத்துச் சென்று கொடுத்துவிடுகின்றேன். உன்னால் முடிந்ததை நீ செய்துகொள்.

ஹரி. (அவன் காலில் விழுந்து) தாங்கள் தாம் என்னைக் காக்கவேண்டும். அவ்விதம் சென்றுவிடுவீராகில் காசி நகர் சென்றதும் நான் பொன்னைச் சேகரித்தால் அதை எவ்விதம் முனிவனுக்கனுப்புவேன்? தயை புரிந்து என்னுடன் காசிக்கு வரவேண்டும்.

ரிஷி. எவ்வளவு காலம் நான் உன்பொருட்டு கஷ்டப் படுவதென்று எண்ணினாய்? அதெல்லாம் உதவாது என் பணத்தைக் கொடுக்காமல் நீ இதைவிட்டுச் செல்லலாகாது. சீ விடு என் காலை (எழுந்திருக்கின்றான்). இதோ பார் உன் கையில் கிட்டியைக் கட்டிவிடுகின்றேன். நீ பணத்தைக் கொடுத்தாலன்றி அதை எடுக்கமாட்டேன். (அரசன் கையில் கிட்டியைக் கட்டுகின்றான்).

ஹரி. ஐயோ! பரமேச்வரா! இவ்விதம் அவதிப்பட என்ன பாதகம் செய்தேன்!

எதுகுலகாம்போதி—ஆதி.

பல்லவி

ஐயையோ காசிவாழ் விஸ்வேசா
அவதிப்பட விட்டாயோ சர்வேசா.

அநுபல்லவி

கையினிற் கிட்டியிடக் கடுக்குதே யுடலது
கையையா யோடிவந்த காத்தருள் ததியிது — ஐயை.

சரணங்கள்

கணையாழி யிட்டிருந்த கையிற் கிட்டி மாட்டினாய்
கர்ம விதியோ யிந்தக் காலத்தெனை வாட்டினாய் — ஐயை
துணைவேறு காணேனையா தோணவுதிரம் விம்மி
துடிக்குதே காம்பெலவாந் துயவாடுதே கம்மி — ஐயை.
நகக்கண்ணு மெரியுதே நற்கணுக்காணேவுதே
நாவுமுலர்ந்தே மேனி நடுநடுங்கியெனைக் கூவுதே — ஐயை
மகனிழந் தாவிசோர மந்திரி முகம்வாடி
மறையவன் செய்கோரத்தை மாற்ற வருவாயோடி — ஐயை.
அளைமுழக்கயிறறிஞ லன்னணுக்தாள் குட்டினார்
அங்கம் பதறிமெத்த வலைந்திட வாட்டினார் — ஐயை.
துணை நீயென்றுமே யிதோ துதிசெய் தழைத்திட்டேன்
தங்கா வுமையோர் பங்கா தணைவனைத் துதித்திட்டேன் — ஐ.

நக்ஷ. நான் சொன்னபடி அப்பொன்னை நான் எடுத்துக் கொடுக்க அது உன்னுடையதுதானென்று முனிவனிடம் சொல்வதானால் அதை எடுத்துவிடுகின்றேன்.

ஹரி.

இதுவன்றி யின்னந்தன்ப மேதுநீர் புரிந்திட்டாலும்
சதுர்மறை பொய்த்திட்டாலும் சாமி நான் பொய்சொல்லேனே.

கஜேந்திர பகவான் கூக்கிரலிட்டழைக்க ஓடிவந்த கடவுள் எனக்கில்லையோ! ப்ரஹலாதனைக் காக்கவந்த பரமன் எனக்கில்லையோ! மார்க்கண்டனை ஸம்ரக்ஷித்த சர்வேச்வரன் எனக்கில்லையோ! (கையிலிருந்த கிட்டி தானாகவே அவிழ்ந்து விழுந்தது).

நக்ஷ. அடா துராத்மா! இவ்வளவுதானா உன் சத்யம்? நான் கட்டியதை எப்படியடா அவிழ்த்தாய்?

ஹரி. மன்னிக்கவேண்டும். நான் அவிழ்க்கவில்லை. அது தானாகவே அவிழ்ந்துவிட்டது. மறுபடியும் கட்டிவிடுங்கள். (மறுபடியும் கட்ட மறுபடியும் வீழ்கின்றது).

நக்ஷ. உன் சத்தியம்தான் உன்னைக் காப்பாற்றுகின்றதென்று நம்புகின்றேன்.

சத். வீணாகக் காலத்தை கழிக்காமல்

சங்கராபரணம்—ரூபகம்

போவோம் வாரீர் போவோம் வாரீர் புகழும் காசி
மகிழ்வதாக போவோம் வாரீர்.
கௌசிகன்செய்த பாதைக்கண்டோம் மனமதில் வறுமையுண்டோம்
பவுசுளக் காசி சேர்ந்தே பாதகன் கடனைத் தீர்க்க-போ.

ஹரி. சத்தியகீர்த்தி! முனிபுங்கவனை அப்படியெல்லாம் சொல்லலாகாது. அதோ பார் வருகின்றார்! (விச்வாமித்ரன் வருகின்றான். மூவரும் நமஸ்கரிக்கின்றார்கள்).

விச். ஹரிச்சந்திரா! உன்னால் எனக்கு நேரிட்ட விபரீதங்கள் போதும். என்னுடைய வ்ருதங்களெல்லாம் கெடுகின்றன. அனுஷ்டானங்களுக்கு அவகாசம் இல்லாமல் இருக்கின்றது. ஜனங்களும் என்னை நிந்திக்கிறார்கள். எனக்கு உன் ராஜ்யத்தை பெற்றதால் உண்டாகும் கஷ்டங்களை என்னால் சொல்லவும் முடியாது. இதோ தாரைவார்த்து கொடுத்துவிடுகின்றேன் பெற்றுக்கொள்.

ஹரி. தவசிரேஷ்ட! நல்ல வார்த்தை சொன்னீர்கள். தங்களுக்கு வேண்டாமென்றால் இன்னும் யாருக்காவது கொடுத்துவிடுங்கள். எனக்கேதற்காக அந்த ராஜ்யம்.

விச். நான் சொல்ல என்னையா எதிர்த்து வார்த்தையாடுகின்றாய்

ஹரி. கொடுத்த பொருளை மறுபடியும் வாங்கக்கொள்வதுபோன்ற மாபாபம் மற்றொன்று கிடையாது. ஆகையால் தயை புரிந்து என்னை மன்னிக்கவேண்டும்.

விச். நான் சொல்வதைக் கேள்.

இடுதலுந் தவிர்தலும் மிடமறிந் தியல்பறிந் தொருகாம
விடுதலுந் தொடுதலும் வினையறிந் துவிளையு மவிளைவறிந்
தடுதலும் படுதலும் வளவறிந் தளவறிந்து செயலால்
கெடுதலுண் டறுதலுண் டவையறிந் துணர்தரிற் கெடுவரோ!

ஹரி.

இந்த வுத்தர முமக்கினி யெனக்குரை செயத் தகுவதோ
வெந்தழற்கு னென்னை விட்டிடினும் வெட்டி வகிரிட்டுவிடினும்
முந்து வண்பினு டெனன்வயின் முனிந்த முனிவிற் கடியனேன்
தந்துவிட்ட பொருள்கொள்வதில் விருப்பமொரு சற்றுமிலையே.

விச். விச்வாமித்ரனையுமல்லவா எதிர்த்துப் பேசுகின்றாய்! உனக்கு புத்திபுகட்டும் வழியை நானறிவேனென்று தெரிந்துகொள். நக்ஷத்ரேசா! நான் சொல்லியதெல்லாம் ஞாபகமிருக்கட்டும். (போகின்றார்).

சங். எதையாவது ஒன்றை நினைத்து இப்படியெல்லாம் கோபம் கொள்கின்றீர்! நம்முடைய கஷ்டம் எப்பொழுது தான் நம்மை விடுமோ!

ஹரி. சந்திரமதி! நாம் ஆசைப்பட்ட பொருள் எவ்வளவுக்கெவ்வளவு சமீபத்தில் வருகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு நமது சாமும் ஆத்திரமும் அதிகரிக்கிறது உலக வழக்கம். இன்னும் கொஞ்சம் பொறுத்துக்கொள். சீக்கிரத்திலேயே காசி நகரை அடைந்துவிடுவோம். அவ்விடத்திற்குச் செல்வோமாகில்,

கண்ணிகள்—உசேனி—ரூபகம்

காசிலிங்கமங் கிருக்குதாம் கேளாய் பெண்ணே
கண்டவர் பணக்கவலை போக்குதாம் போவோம் வாராய் —கா.

வாசி நுனியோகந் தாசகுதாம் தெரிசிப்போர்க்கு
வறுமை யெல்லாமகல போக்குதாம் போவோம் வாராய் —கா.

அண்டமெல்லாமொன்றாய் நின்றதாங் கேளாய் பெண்ணே
அடியார்க ளிடரைக் கொன்றதாம் போவோம் வாராய் —கா.

ஒன்றிரண்டு மூன்றைக் செய்வதாங் கேளாய்ப் பெண்ணே
உறுதிகொண்டோ றளவு களிப்பதாம் போவோம் வாராய் —கா.

மார்க்கண்ட[illegible]ன்று சாத்ததாங் கேளாய் பெண்ணே
யடிபணிந்தோரின் மாய்[illegible] தீர்த்ததாம் போவோம் வாராய் —கா.

காலனைக் காலாலுதைத்த தேவனைக் கேளாய் பெண்ணே
கண்டவர் கருத்தருளும [illegible]வனும் போவோம் வாராய் —கா.

அமார்க்காய் நஞ்சையுண்ட கண்டதாங் கேளாய்ப் பெண்ணே
அபயமென்போர்க் க[illegible] [illegible]றதாம் போவோம் வாராய் —கா.

ஆதியில் ஜோதிகண்ட [illegible]தாங் கேளாய் பெண்ணே
அடுத்தவரினிடுக்கம் போனதாம் போவோம் வாராய் —கா.

திக்கில்லார்க்குத் தெய்வ மாகுதாங் கேளாய் பெண்ணே
தெரிசித்தோர் மனக்குறைகள் போகுதாம் போவோம் வாராய் —கா.

கௌசிகன சடந்தீர வேண்டியே கேளாய் பெண்ணே
கழலடிகளைப் பணிவோம் தாணடியே போவோம் வாராய் —கா.

அங்கம் III—காக்ஷி I

காசியில் ஒரு வீதி

ஜனங்கள் போய்க்கொண்டிருக்கின்றார்கள். ஹரிச்சந்திரன், சந்திரமதி, தேவதாசன், சத்யகீர்த்தி, நக்ஷத்திரேசன் ப்ரவேசம். சந்திரமதி பாடியவண்ணம்.

கண்ணிகள்—பைரவி—ஆதி.

சந்.

1. பூலோகத்தினிலெங்கும் புகழ்கொண்டோங்கிடும் திவ்ய
புண்யம் விளைக்கும் காசி பாராய் கண்ணே
சாலோக சாரூப சாயுச்யஞ்
சாரவிடக்கும் காசி பாராய் கண்ணே.

2. அயனரியறியாத வண்ணல் விச்வநாதனு
மாச்சியினுடன் வாழ்காசி பாராய் கண்ணே
ஜெயம் பெற முனிவர்கள் சின்மயானந்தங்கோரி
சிவயோகஞ்செய்யுங் காசி பாராய் கண்ணே.

3. சொலையுடன் பூஜையதைக் கோரிச் செய்தவர் வந்தே
கும்பிடத்துலக்கும் காசி பாராய் கண்ணே
கலையுணர்ந்தவர்களைக் கருதா நிர்மூடர்களின்
கண்மனம் விலக்கும் காசி பாராய் கண்ணே.

4 பஞ்சமா பாதகங்கள் பறந்தேகப் புரிந்தவர்கள்
பணிந்தே துதிக்குங்காசி பாராய் கண்ணே
நெஞ்சில் நினைத்த பாவம் நீங்கியோடிடச் செய்யும்
நேர்மை தங்கிய காசி பாராய் கண்ணே.

5. தீனதயாளவென்றே தினமுந் தொழுவே கிருபை
திகட்டாதளிக்கும் காசி பாராய் கண்ணே
மோன நிலையறிந்தோர் மூலக்கனலெழுப்பி
முத்தியடையுங் காசி பாராய் கண்ணே.

தேவதாஸா! இதுதான் காசிமாநகர். ப்ரபு! இது என்ன வீதி?

ஹரி. நாம் இப்பொழுது தாண்டி வந்தோமே ஒரு வீதி அது.

கண்ணிகள். செண்டா—சாப்பு.

வெற்றியாயறம் நடத்தும் வேளாளர் வீதியது பெண்ணே
வேண்டச் சூரனை வதைத்த வேலவன் வீதியது பெண்ணே
எத்திசையும் புகழ்கொண்ட விறையவர் வீதியது பெண்ணே
எழிலுறம் வைசியர் வாழுமின்புள வீதியது பெண்ணே

வசனம்

இது என்ன வீதியென்று கேட்டாயே இதுதான்

கண்ணிகள்

வித்தை புத்திதரும் சித்திவிநாயகன் வீதியிது பெண்ணே
வேண்டி நம்மையாளுங் காசிவிஸ்வேசன்வாழ் வீதியிது பெண்ணே
அத்தசிவகாமி காளியம்மையின் வீதியிது பெண்ணே
அருமையுள வேதமோது மந்தணர் வீதியிது பெண்ணே

வசனம்

அதோ தெரிகின்றது பார் கோபுரம், (முழந்தாளிட்டு)

ஆதியாயருளுமாகி யடிமுடி நடுவுமாகிச்
சோதியா யங்கிங்கென்றே சோராமலெங்குமாகி
வேதியர் விரும்புவோரின் வினைதனைக் களைவோனுன
கோதிலா விஸ்வநாதா குறைதீர வருள்செய்வாயே!

நக்ஷ. நீங்கள் இப்படியெல்லாம் காலத்தைப் போக்கிக் கொண்டிருந்தால் என் வேலை எப்படி முடிவது? சீக்கிரத்தில் பொன்னைத் தருவதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்யுங்கள்.

ஹரி. இதோ இன்றைய சாயந்திரத்திற்குள் கொடுத்து விடுகின்றேன். முனிவன் கொடுத்த நாற்பத்தியெட்டு நாளும் இன்றுடன்தான் முடிகிறது.

நக்ஷ. என்னால் சாயங்காலம் வரையில் காத்திருக்க முடியாது. நீ ஆயிரம் வருஷம் பிச்சையெடுத்தாலும் உன்னால் பொன்னை சேகரித்துக் கொடுக்கமுடியாது. நான் சொல்வதைக் கேள். உன்னிடத்தில் வைத்துக்கொண்டு இல்லையென்றால்தான் பாவம். இல்லாதிருந்தால் உன்மீது

ஒரு குற்றமுமில்லை. ஆகையால் என்னிடத்திலில்லாததால் கொடுக்க முடியாதென்று சொல்லிவிட்டால் நான் போய்விடுகின்றேன்.

ஹரி. அது ந்யாயமல்ல. காரணம் ஏதுவாயிருந்தபோதிலும் கொடுக்கிறேன் என்று சொல்லிய வாக்கு பொய்யாகக்கூடுமா?

நக்ஷ. ஆனால் உன் கடனை எப்படித் தீர்ப்பதாக ஆலோசித்திருக்கின்றாய்? சூர்யனைப் பார்த்து எவ்வளவு நாழிகை கழிந்தது பார்த்துச் சொல்.

சந். வேதியனே! உன் எண்ணத்தை அறிந்துகொண்டேன். நெற்றியில் கல்லைவைக்க எண்ணுகின்றீர். ப்ரபு! என்னை அடிமையாகவிற்று கடனைத் தீர்த்துக்கொள்ளுங்கள்.

ஹரி. அப்பா! அது உதவாது.

அவரவரிழைத்த கர்ம மவரைவிட்டயலிற போமோ
பவமது தொலைக்கவல்லோ பாரினிற் பிறந்தோ மத்திரி
தவமதிலுயர்ந்த வந்த தன்யாகிலும் விடாதே
இவர் கடன் தீரவென்னை யிக்ஷணம் விற்பாயப்பா.

சந். ஆர்ய புத்ரா! நான் உயிருடனிருக்க தாங்கள் அடிமையாவது சரியல்ல. அவ்வாறு நடக்குமாகில் கணவன் அடிமைப்படப் பார்த்திருந்த பாதகி என்பார்களேயன்றி பதிவ்ருதை என்று என்னை யாராகிலும் சொல்வார்களா? ஆகையால் என்னைவிற்று கடனைத் தீருங்கள். மறுபடியும் பொன் கிடைத்ததும் என்னை மீட்டுக்கொள்ளலாம்.

ஹரி. உன்னை விற்க என் மனம் எப்படித் துணியும்? மனைவியை விற்ற மாபாதகன் என்று என்னை யேசார்களா?

சந். ஒருநாளும் யேசார்கள். அதுவுமன்றி அவ்வாறு செய்தால்தான் என் கற்பு என்னிடத்தில் நிலைநிற்கும்.

ஹரி. பரமேச்வர!

சந். ப்பு! இந்த எண்ணங்களையெல்லாம் விட்டுவிடும். என்னை விற்று கடனைத் தீர்த்துக்கொள்ளும்.

தேவ. தகப்பன் கடனைத்தீர்க்க மகனல்லவா சாஸ்திரப் படி பாத்யப்பட்டவன்! எந்தையே! என்னை விற்றுக் கடனைத் தீரும்.

நக்ஷ. அடா ஹரிச்சந்திரா! அதோ பார் சூர்யாஸ்த மனத்திற்கு இன்னும் இரண்டு மூன்று நாழிகைகள்தாம் இருக்கின்றன. அதற்குள் எப்படியடா கொடுக்கப்போ கின்றாய்?

சந். ப்ராணேசா! இனி ஆலோசித்து வீணாய்க் காலத் தைக் கழிக்கவேண்டாம். என்னை விலைகூறுங்கள்.

ஹரி ஈச்வர! வேறு கெதியில்லாத இப்பாவியை இப் படித் தவிக்கவிடலாமா?

நக்ஷ. ஹரிச்சந்திரா! நேரமாகின்றது கொடுக்கின்றாயா, மறுபடியும் அண்ணாந்தாளை போட்டுவிடட்டுமா?

தேவ. தந்தாய்! வீணாய் துக்கப்படுவதில் என்ன லாபம்! சீக்கிரத்தில் யாராவது ஒருவனை விற்க தீர்மானம் செய்யுங்கள். தங்களைக் காக்கவேண்டியவன் நான்தான் என் பதை நீங்கள் அறிவீர்கள்.

ஹரி. கண்ணே சந்திரமதி! இப்படி வா. (ஒரு புல்லை எடுக்கின்றான்).

சந். அப்புல்லை என் தலைமீது வைத்துவிட்டால் அதை வாங்குபவற்கு நான் அடிமைப்பட்டு விடுவேனாகையால் கடை சிமுறை தங்கள் அடிமையாக தங்களை நமஸ்கரித்துவிடுகின் றேன். அப்புறம் அதை என் தலைமீது வைத்துவிடுங்கள். (நமஸ்கரிக்கின்றாள்.)

ஹரி. (புல்லே அவள் தலையில்வைத்து துக்காக்ராந்தனுய் சற்று மயங்கி நின்றுவிட்டு).

கற்பினிலுயர்ந்தாள் தெய்வங் கணவனேயென்றிருந்தாள்
அற்பு டைகுணுளி யாந்தர்ய சத்தி பூண்டாள்
விற்பனன் விவேகசாலி வேண்டியென் கடனைத் தீர்க்க
தற்பானருளா லிங்குதான் விற்கவந்தேன் கொள்வீர்.

காசியா நகர வாசிகாள்! எவ்வளவோ புண்ணியத்தைச்செய்து சூர்ய வம்சத்தில் த்ரிசங்கு புத்திரனுய் பிறந்திருந்தும் முன் ஜென்மத்தில் செய்த பாவத்தைத் தீர்ப்பதற்காக

கண்ணிகள்—நீலாம்புரி—ஆதி.

விலையால் மனைவியையும் விஸ்வா மித்திரன் கடன்தீர
விற்கின்றேனுன் கனவான்களே வேண்டில் வருவீரே.

வசனம்

எத்தனையோ மன்னர்கள் இவளை மனைவியாக அடையவிரும்பி யிருந்தார்கள். அவர்களையெல்லாம் திரஸ்கரித்துவிட்டு

கண்ணி

தணையானவளெனக்குப் பொய்யைச் சொல்லாதவள் பாரீர்
இணையாய் வந்தேயிவளைத் கொள்ளவிங்கே யோடி வாரீர்.

வசனம்

இவளை விலைகொடுத்து வாங்கினல் நாம் சொல்லும் வேலைகளைச் செய்வளோ இல்லையோ வென்ற ஸந்தேகம் சிறிதும் வேண்டியதில்லை. ஏனென்றுல் சத்யமெனப்படும்

கண்ணி

எஜமான் மொழிகடவாதவு ளிங்கமுள்ள மனத்தாள்
நிஜம்போன்றவள் சொல்லைவிட்டவள் நோய்க்கொள்ள வாரீர்.

வசனம்

ஆனல் அரசன் குலத்திலுதித்தவளாயிற்றே, ஏழை ஜீனங்களுக்கு அடிமைபூண்டால் அடங்கியிருப்பாளோ

வென்ற ஸந்தேகத்தை விட்டுவிடுங்கள். குணமில்லாவிடினும் குலமிருந்தால் போதுமென்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இவளும்

கண்ணி

நலமன்னவர் குலம் வந்தவள் நல்ல நெறியுடையாள்
தலம்விட்டாலேகான் விதி தாண்டாளிவள் வாரீர்.

வசனம்

ஈச்வர என் அதிர்ஷ்டம் மங்கையை விலைகூறியும் பணம் கொடுக்கும் ப்ரபுவைக் காணேனே.

சந். இன்னொருமுறை விலைகூறிப் பாரும்.

ஹரி. காசிவாழ் நேசர்காள்! பாவி நான் கடனைக் கொடுக்க வழியில்லாமல் பத்னியை விற்கின்றேன். ராஜஸ்த்ரீகளுக்குப் பணிவிடைசெய்து அவர்களுக்கு வேண்டிய

கண்ணிகள்—சவாய்—ரூபகம்

பூசுஞ் சலபஞ்சேர்க்கப் புஷ்பந்தொடுக்க மெத்தப்
புனித விசேஷமறிவாள் பாரீர்—இந்தப்
புவியாளும் ராஜர்களானாலுந் தடையில்லைப்
பொருளீந்திவளைக் கொள்ள வாரீர்.

வசனம்

வேதவிதியை நன்றாயறிந்து அதன்படி நடக்கக் கூடியவள். இவ்வளவு காலமாக வேலைகள் செய்யாமல் இதர ராஜஸ்த்ரீகள் தனக்குப் பணிவிடைசெய்ய ஸுகித்திருந்தபோதிலும் (காலகண்டன் வருகின்றான்).

கண்ணி

வீணிற் காலங்கழிக்காள் வேண்டுந் தொழில் புரிவாள்
நீதிநெறி தவறிடாள் பாரீர்—குல
வேதியரானாலும் வேண்டும் பொருளீந்தே
விலைக்கேயிவளைக் கொள்ள வாரீர்.

வசனம்

இவ்வளவு காலமாய் ஒருவருக்குக் கீழ்ப்பட்டிருந்தவளல்லவா, இவளை நாம் விலைக்கு வாங்கலாமோ என்று தியங்குதல் ந்யாயமல்ல. சத்யம் தெரிந்தவளாதலால்

கண்ணிகள்

வாய்மொழியெதிரிடாள் வணங்கி பாதம் பணிவாள்
வருக்கா நிஜமுடையாள் பாரீர்—குல
வைசியரானாலும் வருந்தும் பொருளளித்தே
வாகாயிவளைக் கொள்ள வாரீர்.

கவிவாணருக்குதவி காலமுஞ் செய்தவன்
கல்வியிற் சிறந்தவன் பாரீர்—இந்த
காசியின் வேளாளரானாலும் பொருளீந்து
கனமுடனே கொள்ள வாரீர்.

சாத்திர முறைகளில் சற்றும் பிசகாத
சன்மார்க்க முணர்ந்தவள் பாரீர்
சூத்திர ரானாலுஞ் சருக்கெனவே பொருளைச்
சொரிந்தே யிவளை வாங்க வாரீர்.

கால. அப்பா! உன்னைப் பார்த்தால் யாரோ ராஜகுலத்திலுதித்தவனைப்போல் காண்கின்றாய். நீ யார்? இம் மங்கை யார்? எதற்காக இவளை விற்கின்றாய்?

ஹரி. அயோத்தியில் ஒரு காலத்தில் அரசுபுரிந்த ஹரிச்சந்திரனென்று இப்பாவியை உலகோர் சொல்வார்கள். போன ஜன்மத்தில் செய்த பாவத்தைக் கழிக்கும்பொருட்டு என்னை மணந்த மதிதயமகாராஜன் மகளிவள். சந்திரமதியென்னும் பெயரைப் பூண்டவள். கௌசிகமா முனிவனுக்குக் கொடுக்கவேண்டிய கடனைத் தீர்ப்பதற்காக இவளை விற்கின்றேன்.

கால. நீதானே இச்சண்டாள முனியின் வலையிற் சிக்கின மன்னன்? உனக்குமுன் உன் விஷயங்கள் இங்கே வந்துவிட்டன.

ஹரி. ஸ்வாமின்? என் முன்னில் முனிவனைக் கடிந்து சொல்லவேண்டாம். அவர் ஒன்றும் செய்யவில்லை. நம்மைப் பிடித்தாட்டும் பரமன் செயல் எல்லாம்.

கால. ஹரிச்சந்திரா! உன் விஷயத்தில் எனக்கு மிகவும் பரிதாபமாகயிருக்கின்றது. ந்யாயமாக அவர் பொன் அவருடனிருக்கிற ராஜ்யத்துடன்போய் சேர்ந்துவிட்டது. அவர் அந்யாயமாக மறுபடியும் கேட்டால் நீ கொடுக்கக் கடமைப்பட்டவனல்ல. வீணாக உன் மனைவியை விற்காதே.

ஹரி. சூர்யாஸ்தமன வேளை நெருங்கிவிட்டது. அதற்குள் நான் பொன்னைக் கொடுத்தாகவேண்டும். அதோ தாகரும் காத்திருக்கின்றார். வாங்கிக்கொள்வதானால் சொல்லுங்கள். இல்லாவிட்டால் இன்னொரு வீதிக்காவது சென்று விலை கூறுகின்றேன்.

கால. எனக்கும் ஒரு அடிமைப்பெண் வேண்டியிருப்பதால்தான் நான் உன்னுடன் வார்த்தை சொல்லுகின்றேன். ஆனால் உன்னைப் பார்த்தால் என் மனதில் வருத்தந் தோன்றுகின்றது. தாகனிருந்தால் என்ன! நான் முனிவனுக்கு ந்யாயப்படி ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லையென்று சொல்லிவிட்டால் போய்விடுகின்றான்.

ஹரி. ஸ்வாமின்! தாங்கள் சொல்வது சரியல்ல. என் உயிரும் மனைவி மக்கள் மித்திரர் எல்லோரும் என்னைக் க்கைவிட்டுவிட்டாலும் இல்லையென்றதை நான் கனவிலும் நினைக்கமாட்டேன்.

கால. சரி உன்னிஷ்டம். அதிருக்கட்டுமப்பா இவளைப் பார்த்தால் நானிடும் வேலையைச் செய்வாளென்று எனக்குத் தோன்றவில்லையே.

சந். என்ன வேலை சொன்னாலும் செய்யக் காத்திருக்கின்றேன்.

கால.

வேலைகள் செய்வேனென்றாய் விளம்புவேன் பெண்ணே கேளாய்
காலையிலெழுந்தே சாணங் கரைத்தமே தெளித்துப் பின்னும்
பாலை நான் கறக்குமுன்னே பசுத்தொட்டி பெருக்கிச் சாணம்
சாலவேநட்டி நெல்லைச் சலியாமற் குத்துவாயோ.

சந். அப்படியே செய்கின்றேன் ஸ்வாமி.

கால. சரி முனியின் கடனைத் தீர்க்கத்தானே பொன் வேண்டும்? பொன்னை அவரிடம் கொடுத்துவிடவா?

ஹரி. எவ்வளவு பொன் என்று தங்களுக்குத் தெரியுமோ?

கால. முன்பே சொன்னேனே உன் சமாசாரமெல்லாம் எனக்குத் தெரியுமென்று. நாகனிடம் பொன்னைக் கொடுத்துவிடட்டுமா?

ஹரி. அப்படியே செய்யுங்கள்.

கால. ஓய் தாகரே?

நக்ஷ. யாரது? தாங்கள் யார்?

கால. நான் யாரா? இவ்வளவு நேராக விலைபேசிச் சேர்ந்திருந்தேன், என்னை யாரென்று கேட்கின்றீர்? ஓய் பொட்டைக் கண்ணரே! நான்தான் இவளை விலைக்கு வாங்கியிருப்பவன்.

நக்ஷ. அக்னியிலிருந்து வெளியே இழுத்ததுபோல் முகத்தைப் பார். எங்கே பொன்?

கால. என்னுடன் வாரும் தருகின்றேன். (இருவரும் வெளியே போகின்றார்கள்).

ஹரி. கண்ணே! நாம் பிரியவும் காலம் வந்துவிட்டதல்லவா! ஜகதீசா!

கண்ணிகள்

என்னவிதி யென்றன்விதி மன்னனுய்ப் பிறந்த பலன்
இட்டதே யெனைத் தொட்டதே
பன்னக பூஷண காசி யண்ணலே யென்னுடலது
பற்றுதே துயர் முற்றுதே.

வேண பணிதாதிமார்கள் தோணச் செய் வீற்றிருந்த
வேந்தியை குண சாந்தியை
காணமுற்றே வேதியற்கு காணடிமையாகச் செய்தேன்
நத்தியே விதிபுத்தியே.

வேதியர்க் கடிமையெனவோதிட வென்றேவியை
விட்டையா துய ரிட்டையா
பாதிமதிதரித்தவா சோதனையகற்றி யென்கை
பற்றையா வேளை நற்றையா.

தேவ. தாங்களே இப்படி மனோதைரியத்தைக் கைவிட்டுவிட்டால் நாங்கள் என்ன செய்வது. விலை கொடுத்தவனுக்குச் சந்தோஷத்துடன் அவ்விலைப்பட்ட பொருளைக் கொடுத்தாலல்லவா நாம் நன்றியுடையவர்களாவோம்?

ஹரி. இவ்வளவு சிறுவயதிலேயே இவ்வளவு புத்திசாலியாயிருக்கும் நீயோ இப்படிக் கஷ்டப்படுவது.

சந். (ஹரிச்சந்திரன் காலில் வீழ்ந்து).

ஆகிரி—சாப்பு

பல்லவி

எப்படிப் பிரிவேன் என் சுவாமியை எப்படி நான் பிரிவேன்

அநுபல்லவி

இப்படியும் பாவி யெழுதியிருந்தானோ தான்
கைப்பிடிக் கணவரின் கழலடிவிட்டு நான், —எப்.

சரணங்கள்

வேந்தர் மனைவிகளும்	வேண்டித் தொழில் செய்வாரே
விந்தையென்றென் வாழ்வை	விரும்பித் தவஞ்செய்வாரே
சாந்தமோருருவான	சத்தியரே வேறுனீரோ
தையலாலெனை விட்டுத்	தானொண்டியாய்ப் போனீரோ—எப்.
உம்மைப் பிரிந்தமண்ணி	லுயிருடனிருந்திட
ஓகோகோ வென்ன கால	முற்றது பிரிந்திட
நன்மை செய்தார்க்குத் துன்பம்	நாடுமோ தெரிந்திட
நாயகரே கிலேசம்	நாட்டுதே வருந்திட —எப்.
என் பிராணநாதாவும்மை	யென்றைக்கினி காண்பேன்
எங்குதென் னுடலாவி	யெவ்விதம் நான் சகிப்பேன்
நன்னடிகள் பாராமல்	நானெப்படித் தரிப்பேன்
நாதாவுமக் குதவி	நாட்டிலாரென் றிருப்பேன் —எப்.
அரைக் கணமும்மை விட்	டகன்றிருந்த நாளுண்டோ
ஆனன்றியே மாது	அவனியில் வாழ்வதுண்டோ
மறையவனுக்குத் தொண்டு	மானனே நானின்றே
மனதித் துயரம் வேண்டாம்	மாறனுக்கீதன்றே —எப்.

ப்ராணேசா! காலையிலெழுந்திருந்து இனியார் திருவடிகளை நமஸ்கரிப்பேன்! பிரதிதினம் இப்படியிப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று என் தாய் தந்தையர்கள் சொல்லி யனுப்பியபடி இனி நான் யாரை உபசரிப்பேன்! எனக்கு தெய்வமாகத் தங்களை இதுவரையில் ஆராதனம் செய்துவந்ததுபோல் இனி எத்தெய்வத்தை ஆராதிப்பேன்.

சத். அம்மணி! தாங்கள் துக்கப்படவும் அதை இப் பாவி பார்க்கவும் பிரஹ்மன் என் தலையில் எழுதியிருந்தானு? தெய்வமென்று ஒன்றிருந்தால் இப்படியெல்லாம் நடக்குமா? தெய்வமாம்! வேதமாம்! தர்மமாம்! சத்யமாம்! சீ இவ்வுலகில் தெய்வத்தை நம்பியவனே படுபாவி.

தேவ. சத்யகீர்த்தி! மற்றவர்களுக்கு நீதி யெடுத்து உறைக்கவேண்டிய தாங்களா இப்படியெல்லாம் சொல்வது! அம்மா! அதோ அவர்கள் வருகின்றாகள் எழுந்திரும். நம்பினவனை எப்பொழுதும் கைவிடமாட்டான் பரமசிவன்.

சந். (எழுந்திருந்து) கண்ணே! எந்நாளும் நீ இப்படியே தைரியமாக இருப்பாயாக! (இருவர்களும் வருகிறார்கள்).

நக்ஷ. ஹரிச்சந்திரா! தர்மம் தலைகாக்கும் என்பது உன் விஷயத்தில் சரியாக முடிந்தது. சூர்யன் மறைந்ததும் மறையாததுமாக இருக்கும் ஸமயத்தில் என் கையில் பொன் வந்துவிட்டது.

ஹரி. மிகவும் ஸந்தோஷம்! இப்பாவிக்காக தாங்கள் மிகவும் கஷ்டப்பட்டீர்கள். அதற்காக என்னை மன்னிப்பீராக.

நக்ஷ. அதெல்லாம் ஒன்றுமில்லை. எனக்கு விடையளிப்பாயாக.

ஹரி. முனிபுங்கவனை தாஸன் நமஸ்கரித்ததாகச் சொல்லுங்கள்.

நக்ஷ. பார்த்தாயா ஒன்றை மறந்துவிட்டேன்.

கால. உங்கள் வார்த்தைகளிருக்கட்டும் என் வேலையை முடித்துக்கொள்கின்றேன். ஹரிச்சந்திரா! இதோ ஓலையும் எழுத்தாணியும் முறிச்சீட்டை எழுதிக்கொடு. (ஹரிச்சந்திரன் வாங்கி எழுதுகின்றான்).

ஹரி. ஸ்வாமின்! தாங்களும் சத்யகீர்த்தியும் இதற்கு சாக்ஷியாகக் கையெழுத்துப் போடுங்கள். (போடுகிறார்கள் காலகண்டன் அதை வாங்கிக்கொள்கின்றான்).

கால. சந்திரமதி! பையா! புறப்படுங்கள்.

ஹரி. ப்ராஹ்மணோத்தமா! நான் மனைவியை விற்றேனேயன்றி என் மைந்தனை விற்கவில்லையே.

கால. அடா ஹரிச்சந்திரா! நீ சத்யவான் என்று நம்பியல்லவா அதை எழுதி வாங்காமல் விட்டுவிட்டேன். இப்படியெல்லாம் மோசம் செய்ய ப்ரயத்னம் செய்வாயென்று தெரிந்திருந்தால் நான் மிகவும் ஜாக்ரதையாக இருந்திருப்பேன். அடா

கண்ணிகள். தனுசரி—சாப்பு.

சத்தியம் பிசகாமல் சாந்தலகாண்ட மன்னு
தருமோ கீர்த்தியது வருமோ
மத்திப் பசுவைக்கொண்டா நற்கன்றுக்கும் வேறு
நல்விலை யீவதுண்டோ மன்னவா
வீணைப் சொன்னவா.

ஹரி. ஸகல சாஸ்திரத்தையும் நன்கறிந்த ப்ராஹ்மணோத்தமரே! தாங்கள் இப்படிச் சொல்வது தர்மமல்ல.

பால் மறந்திட்ட கன்றைப் பசுவுடன் சேர்த்துவிடல்
பாரிலுண்டோ முறைதான் சொல்வீர்.

கால. நீ சொல்வது சிறிதும் உலகரீதியை அனுசரித்ததாக இல்லை. ஒருவன்

மரத்தை விலையாய்க்கொண்டால் மன்னுவதின் பிஞ்சுக்கு
மாறு விலையுமுண்டோ மன்னவா
வீணைய்ச் சொன்னவா.

ஹரி. தாங்கள் சொல்லும் ந்யாயத்தை ஒப்புக்கொள்கின்றேன். அப்படி மரத்தினுடன் பிஞ்சும் போவதென்றால்

மரமென்பறி யானல்லாமல் மாதவளோ நீர்தான்
மார்க்கத்தனை யுணர்ந்தே சொல்லுவீர்
மெய்யை வெல்லுவீர்.

கால.

வாழ் மனையை விலையிந்தே வாங்கினால் உட்கேணி
வசமாகத் தடையுண்டோ மன்னவா
வேறு சொன்னவா.

ஹரி.

மனையடியேனல்லாமல் மங்கைக்கு வந்த மொழி
மாற நீதியுமுண்டோ சொல்லுவீர்
மெய்யை வெல்லுவீர்.

கால. நீ கற்ற வித்தையையெல்லாம் என்னிடத்தில் காட்டப் பார்க்கின்றாய். நீ என்ன சொன்னபோதிலும்

அரசை யொருவன்கொண்டா வதிலுற்ற பொருளெல்லா
மவனுக்கே சேர்ந்ததன்றோ மன்னவா
வேறு சொன்னவா.

ஹரி. ஆம் வாஸ்தவமே ஆனால்

அரசென்பதானல்லாம வடாதமாதாரைக்கல்
அதின் கருத்தையுணர்ந்தே சொல்லுவீர்
மெய்யை வெல்லுவீர்.

கால. நீ இப்படி வீணாகத் தர்க்கம் செய்வதில் சிறிதும் பலனில்லை. ஏனென்றால்

மகனைக்கண்டே யிவளை மன்று வாங்கினேனன்றி
மாதுயெனக்குவேண்டா மன்னவா
வேறு சொன்னவா.

ஹரி. நாக பூஷணனே! யோகநாயகனே! உமையாள் மேவும் போகநாயகனே! காசிநாதா! என் அருமை மைந்தனை யும்பிரியும்படி எனக்கு விதித்தனையா!

தேவ. பார்புகழ் தந்தையே! தாங்கள் இப்படியெல்லாம துக்கித்து என் அன்னையின் மனோதைரியத்தை கலைக்குதல் சரியன்று. ஒன்றையுமறியாத பெண்பாலாகிய என் அன்னையைப் பாதுகாக்க நான் போய்வருகின்றேன். தாங்கள் மறுபடியும் எங்களை மீட்டும் வரையில் நான் போகாவிட்டால் என் தாயை பாதுகாப்பது யார்? ஆகையால் சந்தோஷமாக விடையளியும்.

ஹரி. கண்ணே! நீயல்லவோ மகன்! வேதியனே!

இதுவுமயனன்று	எழுதிய விதியாகும்
இருவரையுங் கைகொள்வீர்	ஐயரே
வெகு	மெய்யரே.

கால. ஸந்தோஷம்! ஹரிச்சந்திரா நான் போய்வருகின்றேன். புறப்படுங்கள்.

சந். என்னை இதுவரையில் காத்த என் தெய்வமே! மண்ணுலகில் கிடைக்கக்கூடாத இன்பத்தை எனக்கு இதுகாறும் கொடுத்தீர். அந்த காலத்திலெல்லாம்

கண்ணிகள். கெண்டா—சாப்பு.

என்று நாம் பிரியோமென்றே	எண்ணியிருந்தோமையோ
யிந்த விதிவந்துதோதான்	மன்னவரே
இன்று யிந்த காசிதனில்	ஏந்தலே நாம் வேறாக
விதவுமென் பாக்கியந்தான்	மன்னவரே.

நாம் வாழ்ந்த காலத்தில் ராஜவம்சத்திலுதித்த பெண்கள் பணிவிடைபுரிய இருந்துவிட்டு இப்பொழுது

வேதியருக்கடிமையாய்	வேந்தரே யும்மைப்பிரிய
விட்டகதியை யுரைப்பீர்	மன்னவரே
பாதிமதிதானணிந்த	பரமனருளிதானோ
பக்ஷமறவாதிருப்பீர்	மன்னவரே.

இவ்வாறு என்னை பரமன் கஷ்டப்படுத்த நான் ஒரு பாதகத்தையும் என் மனதறிந்து புரிந்ததில்லை. இவ்வுடலினலாவது என் மனதினலாவது என் இந்திரியங்களினலாவது ஒரு பாவத்தையும் இழைத்ததில்லை. புத்தியில்லாமலாவது பாதக எண்ணலாத்தாவது.

கன்றைப் பிரித்துப் பசு	கறப்பால் கறந்தேனே
காரணமெதுவாமோ	மன்னவரே
கொன்றை தும்பையுமணி	கோல மனமகிழ்ந்து
கொடுத்தபதியிதுவானோர்	மன்னவரே.

கவிவாணவர் தமைக்கண்டு கருதி மதித்திடாமற்
கடுத்தனை செய்தேனோ நான் மன்னவரே.
புவியேற்றம் விசுவேசன் பொறுமையரவளித்த
புதலமைத் தொழிலிதோ நான் மன்னவரே.

தேவ.

தர்பார்—ரூபகம்

பல்லவி

போய்வருவேன் ஐயா நான் போய்வருவேன்

அநுபல்லவி

பொன்னே பெற்ற அன்னே நற்
பொருளே வாழ்க் கருளே நான்—போ.

சரணங்கள்

அண்டமெல்லாந் துதிகொண்டே யிருக்கவென்
னுண்டவனே கனிவாயா என்
அன்னையுமென்னையும் விட்டுனை யொண்டியா
யாக்கினதே சனி மாயா
கண்டம புகழ் சேவகனே காசிநாதர் நேசனே
தென் நல் மலர்வாசனே திசமுநிஜபாஷனே—போ.

ஸந்தோஷமாக விடையளியும் நாங்கள் போய் வருகின்றோம். (இருவரும் நமஸ்கரிக்கின்றார்கள்).

சந். ப்ரபோ போய்வருகின்றோம்.

ஹரி. போய்வாருங்கள். (இருவரும் கொஞ்சப்போய் சந்திரமதி திரும்பி).

சந்.

கன்னிகல்—சாமா—ரூபகம்

இன்னமொருதரம் மன்னவன் முகத்தைக்
கண்ணாரப் பார்த்துப் போறேன்
இனிவாரேன் களிசேறேன்
ஏந்தலே மறவா வேந்தலே வேந்தலே வேந்தலே.

ஹரி.

வாக்கு நிலைக்கவும் யோக்யெனுக்கவும்
பாக்கியம் நியளித்தாய்
வாக்தரித்தாய் காக்குவித்தாய்
வாழிநீ பிராண தோழிநீ பிராணதோழிநீ தோழி தோழி.

(மறுபடியும் இருவரும் சேவித்துப் போகின்றார்கள். ஹரிச்சந்திரன் ப்ரமித்து அவர்களைப் பார்த்தவண்ணம் நிற்கின்றான்.)

சத். என்னிறைவனே!

ஹரி. ஹா மந்திரி! இனி யென்கெதி யென்னவாகும்! ஜெகதீசா! என்னைத் தனியாகவிட்டுவிட்டு

கண்ணிகள்

நீலவிழி மாதுபோனாள் காலகண்டன் வாழ் மனைக்கே
நீருமேயருள் பாருமே
ஞாலமீதிலென்றன் சத்யஞ் சாலவோங்க வந்தேபெனை
வாடுமே வினையோடுமே.
சிறியபாலன் கூடப்போறான் மறியாய் தொழிற்றான்புரிய
சித்தனே யருள் முத்தனே
அறிய உந்தன் கூத்தைப்பக்கு தெரியலாகுமோ ஓ நாதா
அத்தனே வாரும் நித்தனே.

நக்ஷ. ஹரிச்சந்திரா!

ஹரி. வேதபாரங்கதனே! தங்களுக்குச் சேரவேண்டியதெல்லாம் சேர்ந்துவிட்டதல்லவா?

நக்ஷ. டன்று!

தலமுனி கடனைத் தீர்த்தாய் தருமவானீயேயாகும்
பவமில்ல பத்திக்கொண்டேன் பழுதின்றி யுன்பின்னாக
அவதிநாளுந்றே வந்த யருக்கூலி தருகுவாயே
சவலமாயிலையென்றே சாற்றிடில் போரேனப்பா.

ஹரி. அடிகாள்! கூலியா? தங்கள் சிரமத்துக்குத்தக்க வெகுமதியைக் கொடுக்கவேண்டியவர் முனிவரல்லவா?

நக்ஷ. மிகவும் சரியாகச் சொன்னாய்! நீ வந்து, கடனைக் கொடுக்க முடியாததாகையாலல்லவா முனிவன் என்னை உன் ஆளாக அனுப்பினார். உனக்காக நான் இவ்வளவு கஷ்டப்பட்ட பிறகு முனிவனிடமா என்னைக் கேட்கச் சொல்லுகின்றாய்? எவ்வளவு தர்மிஷ்டனாகயிருக்கின்றாய்!

ஹரி. ஸ்வாமின்! கர்ணகடூர வார்த்தைகள் வேண்டியதில்லை. தங்களுக்கு எவ்வளவு வேண்டுமென்று சொல்லுங்கள். நான் யாருக்காவது அடிமைபுகுந்து வாங்கிக் கொடுக்கின்றேன்.

நக்ஷ. நான் அப்படி அதிகமாக ஒன்றும் கேட்கப்போகின்றதில்லை. நான் பட்ட கஷ்டத்திற்கு பதினாயிரம் பொன் அதிகமல்லவென்பது உனக்குத் தெரிந்ததே.

ஹரி. தங்களிஷ்டப்படியே கொடுக்கின்றேன்.

நக்ஷ. உனக்கிஷ்டமில்லாத விஷயத்தில் எனக்கொன்றும் வேண்டியதில்லை. இந்த கையிலிருந்து அந்த கைக்கு கடன் வாங்கிக் கொடுத்தால் நூற்றுக்கு இருபது முப்பது எடுத்துக்கொள்கின்றார்கள்.

ஹரி. இதெல்லாம் எதற்காக! மனப்பூர்த்தியாக கொடுக்கின்றேன். சத்யகீர்த்தி! நீ எனக்குச் செய்யவேண்டிய கடைசி உபகாரம் இதுதான். என்னை விலைகூறி இவருக்குச் சேரவேண்டிய பொன்னைக் கொடுத்துவிடு.

சத். ஹா! எந்தாய் எந்தாய்! இப்படிபாவியை விற்று தாங்கள் பணத்தைக் கொடுத்துவிடுங்கள்.

ஹரி. வீணாய் துக்கப்படாதே. நான் கொடுக்கவேண்டியதற்கு உன்னை விற்றுக்கொடுத்தால் உனக்கு நான் கடன்

பட்டுவிடுகின்றேன். ஆகையால் உனக்கு என்மீதிருக்கும் விச்வாசத்தை நான் சொல்லியபடிதான் நீ காட்டவேண்டும். என்னுடைய கர்மங்களின் பலனை நானேதான் அனுபவிக்கவேண்டும்.

சத். கைலைவாசா! இப்படியும் செய்ய உனக்கு மனம் துணிந்ததா! ஐயோ!

ஹரி. சத்யகீர்த்தி! வீணாய் காலத்தைப் போக்குவதில் பலன் ஒன்றுமில்லை. இந்த வீதியில் ஒருவரையும் காணோம். வேறு எந்த வீதிக்காவது போகலாம் வா.

அங்கம் III—காக்ஷி II

சாசியில் ஒரு வீதி

ஜனங்கள் போய் வந்துகொண்டிருக்கின்றார்கள். சத்யகீர்த்தி, ஹரிச்சந்திரன், நக்ஷத்திரேசன் வருகிறார்கள். சத்யகீர்த்தி பாடிக் கொண்டே வருகின்றான்.

சத்.

கண்ணிகள்—ஆகிரி—ரூபகம்

முன்செய்த தீவினை முனிவனலுற்றதின்
முனையைக்களைந் தெறியததானே யிதோ
நன்மையிலாத் தாசன் நாடும் கூலிக்காக
நாயகனை விற்கலானேன்.

சத்யமெனுங் குடையைச் சற்றும் வழுவுறாமற்
சார்ந்தே செங்கோல் புரிந்த தீரர்—ஐயா
நித்யமும் மாதவ நெறியுஞ் ஜபதபம்
நீடித்தோங்கச் செய்த சீரர்.

மன்னுயிர் தன்னுயிர்போல மாநிலத்திலெண்ணி
மதித்தே நீதியளித்த ராஜர்—இவர்
பன்னுஞ்சராசரத்திற் பலவுடன்களிலாடும்
பரமன்பத மறவா நேசர்.

ஆப்த்துவேளையி லாதரித் தோரை குரு
அன்னை தந்தையெனுங் கருத்தார்—தாசன்
கோபத்தி லூட்டியே கோரம்புரிக்கு மோர்பொய்
கூறேனென விவர் மறுத்தார்.

எதிரிட்ட பகைஞர்கள் ஏங்கிப் புறமிட்டோட
எருக்கணை தொடுக்குஞ்சூரர்—கொள்ளும்
பதியிடும் வேலைகள் பலவண்ணமாயினும்
பண்பாய் வணங்கிச் செய்யும் வீரர்.

தர்மப்பிரபுக்காள்! இவ்வளவு உத்தம குணங்களுடன்கூடிய அடிமை அகப்படுவது மிகவும் அரிது. ஏனென்றால்

ஆதிமூலப் பொருளாய் ஜோதி யொளிவான
ஆனடி மறவாதோர் பாரீர்—குல
வேதியராகிலுஞ் சாதிபேதங்களில்லை
யேர்தலைக் கொள்ள வாரீர்.

எத்திசை தன்னிலே சுற்றினு மிவரைப்போல்
இன்புளர் சிக்கிலர் பாரீர்—குல
க்ஷத்திரியராகிலும் விற்றிடத் தடையில்லை
சாங்கமாய்க் கொள்ளவே வாரீர்.

தனக்குக் கீழ்ப்பட்ட குலத்தினராயினும் இவர் அவர்களிடம் அடிமைபுகச் சித்தமாயிருக்கின்றார். க்ஷத்ரியராயினும் ராஜ நீதிகளுடன்

கணிதமுறையில் வெகு நுணிதமறிந்தவர்
கருதார் மோசகங்களென்றும் பாரீர்—குல
வணிகராகிலுமிவர் பணிவார் பொருளளித்தே
வாங்கிக்கொள்ளவே யோடி வாரீர்.

வாரந்திதியோக கரண நக்ஷத்திர
வாரத்தெரிந்தவர் பாரீர்—தானத்
திரச்செல்வமுடைய காராளராகிலுந்
திவ்யரைக் கொள்ளவே வாரீர்.

(வீரபாகு பாடிக்கொண்டே வருகின்றான்.)

வீரபாகு.

சுந்தரக்கண்ணி

புதுமையுள்ள ஆத்தங்கரை புன்னமரச் சோலே
புளியம்பூ நிறத்தையொத்த பூவைவரக் காணேன்
வாசமலர்த் தோட்டத்திலே வந்திருக்கச்சொன்னேன் நான்
வாரேனென்று வார்த்தைசொன்ன வஞ்சிவரக் காணேன்
அந்திபட சந்திபட அலேந்து தவிப்பேனே
அன்னமும் வீராவிட்டால் ஆவி விடுவேனே.

ஒய்யாரக் கண்ணி

கருங் குயிலொலியே பெருங் கிளிமொழியே
வருகையேது தடைவந்ததோ அடி செல்வியே —வருக.
சண்டு வெகு சோமாச்சே வண்டுதெளுங் கவலாச்சே
கொண்டு மையலெங்கு நின்றுளோ அடிசெல்வியே —வருக.

எம்மவ சாலே அவ எங்கெதா ஒயிஞ்சாலோ தெர்லேனு! அங்கே இங்கே எங்கேடி இல்லாதெ எங்கேதா—டாயப்பா அதோ வாராடா (சாமலா வருகிறுள்). டயெம்மவளே! எங்கடீ போயிருந்தே?

சாமலா. டாயெம்மவனெ! என்ன ரொம்பல்லா டீ போட்டு பேச ஆரம்பிச்சுகுனே?

வீர. அதுக் கடக்கட்டு என்னே பித்தன்னேர காக்க வெச்சுட்டு எங்கெ போயிருந்தேன்றெ?

சாம. சும்மா சொல்லமாட்டேயா நீ. செத்த மாட்டெ உரிக்கபோனுனே முத்த. அவனுக்கு கூயு பெடுத்துபோனே. அங்கேந்து பேச்ச மாட்டெல்லா தேச்சுட்டு வாரே.

வீர.

உல்லாசக்கண்ணி

மாடு மேய்க்கவாணும் தேய்க்கவாணும் செல்வாத்தா கண்ணே
என்மின்னிருந்தா போதுமடி பெஞ்சாரி கண்ணே.

கூய் காச்சவாளும் கரைக்கவாளும் செல்லாத்தா கண்ணே
என் கால்பிடித்தால் போதுமடி பெஞ்சாரி கண்ணே.
நெல் அறுக்கவாளும் அடிக்கவாளும் செல்லாத்தா கண்ணே
நீ பெருத்திருந்தா போதுமடி பெஞ்சாரி கண்ணே.

சும்மா சும்மா வேலெயெ செஞ்சுகுனு எளெச்சுகுனே போரே நீ. முன்னெல்லா என்ஞடிக்காயிருந்தே யிப்பியிப்போ பணத்துமேலெ யேகிரே.

சாம. வாயாலெ சொல்லிகினேக்க சொன்ன நாமெல்லா சொல்லுவே! எத்தின்னுலா நா கேக்கறே

ஆனந்தக் கண்ணி

காசிருந்தா கொண்டுவாடா கறுத்தவுடையா
காசிருந்தா கொண்டுவாடா

சல்லா வாங்கி கட்டவேணும் சாந்துபொட்டு தீட்டவேணும்
மல்லிகை பூ வாங்கவேணும் மூஞ்சுமேலே வைக்கவேணும்
கள்ளுவாங்கி குடிக்கவேணும் கைகலர்து ஆடவேணும் —ஓ காசி.
சேரிவிட்டு ஓடவேணும் சீமை சுத்தி பார்க்கவேணும்
வாரி வாரி குடிக்கவேணும் வந்தவனே யேய்க்கவேணும்
காரிமேலே ஏறவேணும் கண் சிமிட்டி பாயடா நீ —ஓ காசி.

எத்தின்னுலா பண கேக்றே. யேச்சுகினே தானேகிறே. வேலெக்கி ஆளு வெக்கறேன்னெயே வெச்செயாடா யெம் மவனேன்னெ?

நக்ஷ. அட்டாடடா பஞ்சயாள்! தூரமாக விலகி நில்லுங்கள்.

சத்.

கோனர் சொண்டவர்வாக்குப் பூனர் பிறர் வார்த்தை
குணமல்லா வுரைசெய்யார் பாரீர்—ஐயா
நானுவித வருண ராஜனும் விர்திட
மான நடைபுரிகிலேன் வாரீர்.

சாம. கும்பிடப்போன தெய்வ குறுக்கிட்டுச்சுன்னு வரங்களே அந்த மாதிரி ஆரோ ஆளெ விக்கிறுண்டா. போய் பார்ரான்னு—ஆளு வரட்ட—சாட்டமாகிரு வேலெக்கி வெச்சு குனு நல்லா ஒயப்பாபோலெ கிதுடா.

வீர. சோப்பாகிறுனு சொல்றெயா?

சாம டாயெம்மாமா! சொன்னுகா (அடிக்கிறுள்).

வீர. (அடித்த இடத்தை கையால் தடவி கையை முத்தமிட்டுக்கொண்டு) ஏ ஆண்டே! நீ யாரு? நீ விக்ற ஆளு ஆரு? என்னு வெலே? அல்லாத்தெயு சொல்லுய்யா?

சாம. ஆண்டே! பறையருங்களுக்கு விக்றெயா ஆண்டே.

சத். எவராயிருந்தாலும் சரி. பணம் கொடுத்து வாங்க சக்தியையுடைய எந்த மசானுக்கும் விற்க சித்தமாயிருக்கின்றேன்.

நக்ஷ. அடா அதிகப்ரசங்கி! என்ன கொஞ்சமும் மரியாதையில்லாமல் ப்ராஹ்மணன் சமீபத்தில் வருகின்றுயே. என் ஜாதி யென்ன! உன் ஜாதி யென்ன.

வீர.

அசாவேரி—ஆதி

பல்லவி

எங்கள் ஜாதி ஆண்டே
ஜாதிக்கெல்லாம ஜாதி ஆண்டே.

அநுபல்லவி

திங்களிளம்பிறை கங்கையுடனே புனே
மங்கள வுமைபாகன் தங்கும் காசி நாட்டினில் —எங்.

சரணங்கள்

செத்துகிடக்கும் மாட்டை எடுக்காமலே யிருக்கமாட்டோம்,
ஆணடே அதை சிறுய் அறுத்துக் குடலெலும்பு சேர்ந்திடும்படி
[யதைக் கட்டோம்,

ஆண்டே பத்துபேருமாய்ச் சேர்ந்து பொங்கலிடா முன்னம் ஊட்
[டோம்
ஆண்டே பத்திரகாளி பூசை செய்யாமலே நாங்கள் கள்ளைத் தீட்
[டோம்.

நித்தமுஞ் சிவனடி நினைவிலேற்றியே
நெறி பிசகாமலே சேமமாய்ப் போற்றியே
நெட்டுவோம் கொடி நட்டுவோம் பறை
கொட்டுவோம் வசை திட்டுவோம் ஆண்டே —எங்.

ஏ ஐயே! எங்களைபோலெ நீங்க பூசெ போட்றேங்களா ஜாதி யின்னையா ஜாதி. மேலேகிறவனுக்கு அல்லாறு ஒன்னு தாயா.

சாம. ப்ரயெம்மவனே! வேலெயெபாற்றுறு! ஏ, ஆண்டே! என்னு வேலெ குடுத்தா அவனெ குடுக்கறே? அல்லா வேலெயு செய்வானு?

ஹரி. தாங்கள் என்ன வேலை யிட்டபோதிலும் செய்யச் சித்தமாகயிருக்கின்றேன். இப்பிராம்மணோத்தமருக்கு நான் பதினாயிரம் பொன் கொடுக்கவேண்டியதிருக்கின்றது.

வீர. டாயப்பா! பொன்னுவேணு? எம்மாத்தபொன்னு?

சத். பதினாயிரம் பொன்.

வீர. அதுன்னு ஆண்டே பதுனா? அப்படின்னு?

சத். பத்தாயிரம்.

வீர. ஓ பத்தாரமா? அப்பிடி சோல்லு ஆண்டே. எவெ அவ்வளோகொடுக்கறுனோ அவனுக்கு வித்துகோ. வாடி யெம்மளே போலா.

சாம. டாய்! கொட்டிவெச்சிக்கிறெயே குட்று. ஆசாமி வாட்டமாகிறு சுடுகாட்லெபோடா ருத்ரி மத்யான தூங்காதெ பாத்துகுவாண்டா.

வீர. சுடுகாட்டிலெ பொணா விழுறு போலெ பண வருதா. வாம. வா!

சாம. அதெல்லா முடியாது நீ போடா. எபயனே போட்டுகாதெபோனு நாவல்லிலெ போடா.

வீர. ஆண்டே அஞ்சார வெச்சுக்கோ!

சத். கடனைத் தீர்ப்பதற்காக நான் விற்பதால் பதினாயிரம் பொன்னுக்குக் குறைக்கமுடியாது.

சாம. நீ அவனெ இட்டுகுனு சேரிக்கு வா ஆண்டே. நானு தட்டி போட்டுகறே.

நக்ஷ. பறையனுடைய பணத்தையா என்னை வாங்கிக் கொள்ளும்படிச் சொல்லுகின்றாய்?

வீர. ஏ ஆண்டே! பறைய பணம்னு அதுமேலே எய் திக்குதா? நாய் வித்த காசு கொலெக்குதா ஆண்டா? நீ அப்டி சொன்னவரெக்கினு நானே இந்த ஆசாமியெ மாட்டிகறே நீ எம்பணத்தெதா வாங்கிகணு.

ஹரி. பதினாயிரம் பொன் கொடுத்து என்னை வாங்கும்படியான ஸம்பத்தை லக்ஷ்மி ஒரு புலையனுக்கு ஈன்றாள் என்றால் அதன் அர்த்தம் என்ன என்பதை ஆலோசித்துப் பாருங்கள்.

நக்ஷ. என்ன அர்த்தம்?

ஹரி. கருணாநிவாஸனாகிய கடவுள் ஜாதிபேதத்தைத் தான் பார்ப்பதில்லையென்பதை நமக்கு அறிவிப்பதற்காகவே லக்ஷ்மீ கடாக்ஷத்தை இங்களித்தார்.

சாம. டாபெம்மாம! மெத்த நெல்லவனுருகாண்டா.

வீர. அமாண்டன்னு! புடிச்சு போட்டுக்கவேண்டித்தா. ஆண்டே சேரிக்கு இட்டுகுனு வா முடிச்சுகலா.

சத். அப்படியே வருகின்றோம். (வீரபாகுவும் ச்யாமளாவும் போகின்றார்கள்.) ஐயோ அரசே! தங்களையோர் புலையனுக்கா அடிமையாக விற்பது?

ஹரி. துக்கப்படுவதால் முடியும் காரியம் என்ன இருக்கின்றது! சீக்கிரம் போய் இவளை அனுப்பிவிட்டலாம் வா. (போகின்றார்கள்.)

அங்கம் III—காக்ஷி III

காலகண்டன் வீடு

சந்திரமதி உட்கார்ந்திருக்கின்றாள்

சந். நித்ய நிராமய நிர்மலரூபா! சத்ய வேதஞ்சாற்றிடும் சீலா! அரியயன் காணாத அருமையாம் பாதா! சுடலையிலாடிய சுந்தரமூர்த்தியே! ஐந்தெழுத்தாகிய ஆதிபராபரமே!

கண்ணிகள்—ஆநந்தபைரவி—ரூபகம்.

காசி விச்வநாதா நின் கருணைசெயத் தீதா
மாசிலா பொற்பாதா உன் மலரடி யிப்போதே தா.
மன்னன் கைதொட்டாரென்னை வெகு மகிழ்ச்சிகொண்டேன் முன்னே
அன்னப்பேடென்றேவென்னை ஐயோ யழைத்தவரும் பின்னே
சந்தனம் பூசிடுங் கையாலென்னை சாணமிட விட்டாய் மெய்யா
உந்தனருளிதோ தய்யா நா னுலக்கை தாங்கவுமெய்யா
பஞ்சணைமீதுற்ற மேனி யிதோ பதைக்கவே கையைக்கோணி
நெஞ்சங் கலங்கிட காணிபிந்த நெல்லைக்குத்தவைத்தாய் பூணி.

ஐயோ பரமேச்வரா! என் கஷ்டங்களை நினைத்து நான் துக்கப்படவில்லை. மன்னவன் முடிக்கு புஷ்பந்தொடுத்த கையால் சாணத்தைக் கரைத்ததற்கு நான் துக்கப்படவில்லை. பஞ்சணை மீதுற்ற மேனியை பாறையின்மீது தள்ளினையேயென்றும் துக்கப்படவில்லை. கல்களிழைத்த வளைகள் சப்திக்க அரசனுடன் சண்டாடிய கைகளால் நெல்லைக் குத்த வைத்தாயே

யென்றும் நான் துக்கப்படவில்லே. என்னருமைப் பாலன் அன்னகாரமில்லாமல் அலறிப்படுவதும் எனக்குத் துக்கத்தைத் தரவில்லே. ஆனல்

கண்ணி—சாமா—ரூபகம்

அன்னே தக்ஷையாசை தன்னேமறந்திட
என்னே வைத்த லோலனே
ஆனுகூலனே தனுசீலனே
அன்பனே மன இன்பனே மன இன்பனே யின்பனே யின்பனே

வசனம்

தனியாக விட்டுவிட்டு அவர் சிஷ்ருஷைக்கு உபயோகப்படாத இபபாழும் கைகளே இன்னும் சுமக்கிறேனேயென்றுதான் துக்கப்படுகின்றேன்.

சேஷி. ஏண்டி சந்தி! ரொம்ப நன்ன நெல்லு குத்தியிருக்கே, அடிச்சுக்க ரெண்டு கை போரலே. இந்த அழுக்கு உண்டான பொன்னே குத்தி ஒரு மாட்டையுங் கன்னேயும் பிடிச்சுண்டுவந்துதே அந்த கெழப்பொணத்தெ பின்ன சொல்லண!

சங். அம்பணி! தெரியாத்தனத்தால் ஏதாவது பிசகுயிருந்தால் மன்னிக்கவேண்டும். இன்னொருமுறை வேண்டுமாகில் குத்துகின்றேன்.

சேஷி. ஆமா. இப்பொவே அரிசியில்லாக் நொய்யா போச்சு—தாசனெங்கெ ஒழிஞ்சா?

சங். தங்கள் உத்திரவுபடி குடத்தையெடுத்துப் போயிருக்கின்றான்.

சேஷி. சரி, இந்தா. வாசலுக்கெல்லாங் கோலம்போடு. குட்டிச் சொவுருட்ட ஒக்காண்டிருக்கெயே, சாணி தெளிச்சதே கோலம் போடணும்னு தெரியவாண்டா? இதுகூடவா செரல்லி குடுக்கண கடாமாடு மாதிரி வயசாய்கூட? (கோல

மாவைக் கொடுத்துவிட்டு உள்ளே போகின்றாள். சந்திரமதி கோலமிடுகின்றாள்).

தர்பார்—ரூபகம்

பல்லவி

கோலமிடுகிறேன் விதியே கோலமிடுகிறேன்

அநுபல்லவி

நீலவிழி தாசி கோமளையைக்கொண்டு
காலகண்டன் தேவி கருதியவாற் கண்டு —கோல.

சரணங்கள்

நின்று குனிந்துமே கால்கோ கசர்ந்துமே
கெண்டைச்சதை கோவ கிளரிடை மேவ
தண்டு கோணமற் றுன் நீட்டிடிய பாவ —கோல.

முத்தந் தன்னிலும் மலர் மொக்கைப் பார்க்கிலும்
சித்தம் வருந்திட சேரக்கொடி யோட்டி
உத்தமியம்மனு மொப்பனம் நாட்டி —கோல.

தெருவில் வந்தேனேதோழி தீர்த்தலானேனே
விரல்களொரிய வேர்வை சொரிய
பிரமனெழுதிய பெரும் விதிக்குரிய —கோல.

(காலகண்டன் வருகின்றான்).

கால. ஏண்டி சந்தி! என்ன முகத்தெ ஒரு மாதிரியா வெச்சுண்டிருக்கயே? ஸந்தோஷமா வேலெ செஞ்சான்னு பணத்தெ அழுது வாங்கினவனுக்கு திருப்தியாயிருக்கு? எங்கே அவன் தாஸன். எனக்கு கால் நோந்து, அழுக்கு ணம்னு பாத்தா வேலெயிருக்கச்சே கண்லெ ஆப்டபாட்டாம் போலெயின்னுயிருக்குது?

சந். அப்படியில்லை ஸ்வாமி. அவன் தண்ணீர் எடுத்து வா நதிதீரத்திற்குப் போயிருக்கின்றான்.

கால. ஸரி. அவன் வந்ததும் என்னைக் கூப்பிடு. (உள்ளே போகின்றான். சேஷி எதிராக வந்து அவனை இழுத்து வருகிறாள்).

சேஷி. என்ன வேலை சேசுட்டு வந்தே? ஊர்லெ யாரோ செத்துபூட்டானு சொல்லிக்கிறாளே. ஒனக்கு ஒரு எழவுகூட வரமாட்டேன்றது பாரு

கால. அடிடீ! என்ன வார்த்தெ சொன்னெ! நாம் பூட்டா ஒனக்கு ரொம்ப ஸ—கம்னு நெனச்சுண்டு இருக்கெயோ?

சேஷி. அந்த எழவெ நானு செ பட்டு வாயாலெசொன்ன அது கூடதா யெனக்கு கிட்டாது. சாகாலத்துலே மூணாங் கல்யாண பண்ணிண்டது போராதுனு உண்டான பொன்னெ குடுத்து ஒரு தடிச்சியெ வாங்கினேயே! நீ செத்தா சீப் பாட்டுகு ஒணுமேனு நானு பாலுலெயு மோர்லெயு தண் ணியெ கொட்டியாவது வித்து பண ஸம்பாதிச்சுகலாம்னு பாத்தா இந்த தடிபொணந்தா ஒன்னு இருக்குதே சத்ய சத் யம்னு ஒரு பாடம் படிச்சுண்டு தண்ணி கொட்டியிருக்கு தானு யாரானு கேட்டா ஆமானு அழுதுட்ரதே, அது போரா தூனு பல்லு தேச்சதுந் தேக்காததுமா பால் கொட்டிகாதெ போன செத்துபூடுவெயா நீ?

கால. என்டீ! என்டீ! கொஞ்சமானபட்டு மரியாதெ இல்லாதெ ஒரு பொம்மினாட்டி இருக்காளேனுகூட பார்க் காதெ இப்படியெல்லாமா நீ சொல்றது?

சேஷி. ஒம்முஞ்சிக்கிமட்டும் மரியதெயுந்தா! தொடப்ப கட்டெ பிஞ்சுபூடு எதா எதா வார்த்தெசொன்ன தெரியுமா?

சங். அம்மணி! எளியவள் சொல்லுகிறேனென்று கோபித்துக்கொள்ளலாகாது.

சேஷி. என்ன?

சந். மங்கையர்களுக்குக் கொண்ட கணவனே தெய்வ மென்று வேதங்கள் முறையிடுகின்றன.

சேஷி. ரொம்ப புத்திசாலிதா நீ!. ஆம்டியானே தெய்வ மா வெச்சுண்டிருந்தூட்டு என்ன ஸௌக்யமாயிருக்கே பார்? ஒம் பொருஷிக்கு நீயும் புத்தி சொல்லவரெ. ஒனக்காக பொன்னெ அழுதுதோயில்லெயோ நீயும் அதுக்காக அழ வேண்டியத்தா!

கால. அடீ சந்தீ! நன்னு சொல்லுடீ. பொண்டாட்டி கள்ளா ஆம்டியானுண்டே எப்டி யிருக்கணம்னு நன்னு சொல்லு.

சேஷி. ஒனக்கு தெரிஞ்சத்தெல்லா சொல்டி. கேக்க லாம் சோல்லே. (உட்கார்ந்துகொள்கின்றாள்).

சந். குலஸ்த்ரீகளுக்கு கணவனன்றி வேறு தெய்வம் கிடையாதென்று வேதங்கள் முறையிடுகின்றன. நான் மணம் புரிந்து என் தந்தை க்ரஹத்திலிருந்து பர்த்தாவினுடன் வந்தபொழுது என் தந்தை என்னை நோக்கி,

கொழுநனைக் கண்டா லெழுந்துநின் றவருட்
குளிர்ப்புற வின்சொலே யுரைத்து
விழுமிய பாதார்ப் பிதவிழி யினையாய்
விதிப்படி யாசன மிகளாம
வழுவிலா வுபசாரங்களை நீயே
மகிழ்வுடன் செய்தபின் றூங்கித்
தொழுதெழுந் தவரை மகிழ்விப்ப தொன்றே
தொழிலெனக் கொள்கநீ தோகாய்.

என்று சொல்லி யனுப்பினர்.

சேஷி. போடி அசடி! அப்படியிருந்தூட்டுதா இப்படி யிருக்கே. (எழுந்திருந்து) நானும் அவளெப்போலெ ஏமாள மாயிருப்பேனு எண்ணிக்காதே. இன்னமே பாலெ தொட்டா

தெரியு. (காலகண்டனை கன்னத்தில் கிள்ளிவிட்டுப் போகிறாள். அவன் அவள் கிள்ளிய இடத்தைத் தொட்டு முத்தமிட்டுக்கொள்கிறான்).

கால. அடி சந்தி! என் சேகி எப்பொவு என்னை கிள்ளிண்டேயிருந்தாகூட எனக்கு ஸந்தோஷந்தாண்டி. (தேவதாஸன் தண்ணீர் குடத்தை தாங்கிக்கொண்டு பாடிக்கொண்டே வருகிறான்).

தேவ.

கன்னடிகள்—சுருட்டி—அட தாளம்

தண்ணீர் குடமென்	றலைமேலிடவும்	
ததியோ வயனிட்ட	விதியோ காணறிகிலேன்	—தண்.
மண்ணின்மீது மெய்	மன்னவன் மகனாய்	
மகிழ்ந்தது மென்றன் கீ	ரிகழ்ந்தது மறிகிலேன்	—தண்.
உச்சி யெறிந்திட	உடலும் வருந்திட	
உற்றது மிவ்விதி	பெற்றது மறிகிலேன்	—தண்.
நெற்றி நரம்புட	னேர்விழி நோவிட	
நிமைக்குள்ளே யித்துய	ரமைத்தவாறிகிலேன்	—தண்.

அம்மா! இதை வாங்கிக்கொள் என்னால் குனிந்து வைக்கமுடியவில்லை. (அதை வாங்கிக்கொண்டு உள்ளே போகின்றாள்).

கால. அடே தாஸா! இங்கே வா. (வருகின்றான்.) கொஞ்சம் என் கால்களை அமுக்கடா. (கால்களைப் பிடிக்கின்றான்.) தடியன்பாதிரி இருக்கயே நன்னா பிடியேண்டா! சரி போரு. போய் மாடுகளையெல்லா மேச்சுண்டுவா. சீக்கிர வரணு தெரியுமா. (உள்ளே போகின்றான்.)

தேவ. உமாநேசா! பக்தர் தாஸா! பாபநாசா! காசிவாஸா! சூர்ய வம்சத்தில் த்ரிசங்குவின் பௌத்திரனாய் சந்திரமதியம்மையின் வயிற்றில்

மாடு மேய்க்கவோ மன்னன் தவத்தில்
மகனாய்ப் பிறந்ததும் விதி விதி —மாடு.

எவ்வளவோ தவங்கள் புரிந்து இப்பாவி வயிற்றில் ஜனிக்கவும் ஈரைந்து மாதங்கள் படமுடியாத கஷ்டங்களையெல்லாம் பட்டு இப்பாவியைப் பெற்றெடுத்து எவ்வளவோ அருமையாக வளர்த்தார்கள். அப்படியெல்லாமிருந்த நான்

ஆடு பாம்பினை அணிந்த நாதனே
காடுகள் முள்ளிலும் ஓடி ஓடி —மாடு.

ஜோஸ்யர்கள் என் ஜாதகத்தைப் பார்த்து என்னால் என் குலத்திற்கே கீர்த்திவருமென்று சொன்னார்களாம். அப்படியிருக்கவேண்டியதாயின்

மன்னருஞ் சூழ வமர்ந்திருக்காமல்
கன்றும் பசு மேய்க்க ஈசா ஈசா —மாடு.

(சந்திரமதி வருகின்றாள்.)

சந். கண்ணே தேவதாஸா! ஏனப்பா ஒருவனாகயிருக்கின்றாய்?

தேவ. ஒன்றுமில்லை அம்மா.

சந். என்னிடத்தில் எதற்காக ஒளிக்கின்றாய்? உன் முகத்தைப் பார்த்தால் நீ எவ்வளவு துக்கப்படுகின்றாய் என்பது நன்றாகத் தெரிகின்றதே.

தேவ. எனக்கென்ன துக்கம் இருக்கின்றது. தங்கள் கதியும், 'நம்முடைய உதவியின்றி என்னையன் எவ்வாறு தவிக்கின்றாரோ என்பதுமே என் மனதைக் கஷ்டப்படுத்துகின்றன. (காலகண்டன் வருகின்றான்.)

கால. ஏண்டா இன்னம் போகலே?

தேவ. இதோ போய்க்கொண்டேயிருக்கின்றேன்.

கால. நானெப்போ சொன்னேன், இன்னம்போகாதே வளையாடின்டா யிருக்கே?

தேவ. ஸ்வாமி! கோபித்துக்கொள்ளவேண்டாம். இதோ போகின்றேன். (வெளியே போகின்றான்.)

கால. அடேட தாஸா அடேய்! (தேவதாஸன் வருகின்றான்.) மாடுகளை அப்பறம் பிடிச்சுண்டு போகலா. அந்த பக்கத்தாத்து பசங்கள்ளாம் காட்டுக்குப்போய் தர்ப்பம் கொண்டு வரப் போவா. கூட நீயு போய் கறெய்ய தர்ப்பங் கொண்டா.

சந். ஸ்வாமி! இவன் மிகவும் சிறியவன். இவனைக் காட்டுக்கனுப்புதல் சரியல்ல.

கால. ஏண்டி ஏண்டி! என்ன சொன்னெ? சிறியவனு? சிறியவன்! கடாமாடு மாதிரி வயசாச்சு சிறியவனு! பொன்னெ கொஞ்சமாதானெ கொட்டி வாங்கினே! தர்ப்பமில்லாதெ என்னபண்றதுனு நெனச்சுண்ட்ருக்கேன்றெ!

சந். அப்படி முக்யமாக வேண்டியிருந்தால் நான் போய் கொண்டுவருகின்றேன்.

மழலைச்சொல் மாறவில்லை	மாண்பல்லோ விழவேயில்லை
தழைமுள்ளும் புலியும் யானை	தலிப்பாம்பு மலிந்த காட்டிற்
குழந்தையை யனுப்புதற்கென்	குடலது கலங்குதையோ
பழமறையோரே என்னைப்	பரிவுடனனுப்புவீரே.

கால. ஏது ஒன்னுந் தெரியாதவோனுன்னு நெனச்சுண்டுருந்தே. ஒன்னே! ஆத்துலெயிருந்தா சேஷி ஏதாவது காரியத்தெ சொல்லுவொ கஷ்டமாயிருக்கும்னு ஓடிபூடலாம்னு பார்க்கெயோ? அதெல்லா ஒதவாது அவந்தா போகணும். டேய் சீக்கிற போய்வா. (காலகண்டன் உள்ளே போகின்றான்).

சந். கண்ணே! உன்னை எப்படியடா மனம் துணிந்து துஷ்ட மிருகங்களிருக்கும் காட்டுக்கனுப்புவேன்?

தேவ. அம்மணி! க்ஷத்திரிய குலத்தில் பிறந்த நானா ம்ருகங்களுக்கஞ்சுவது?

சந். க்ஷத்திரியனாயிருந்தாலும் நீ சிறு குழந்தையல்லவா?

தேவ. ஜாண்பிள்ளையாகிலும் ஆண்பிள்ளை யல்லவா நான்? அதிலும் மதிதயன் மரபிற் தோன்றிய ஹரிச்சந்திரன் புத்ரனென்றெனை அறிவீரம்மா.

சந்.

என்னுயிரே எனது கண்மணியே
முன்னாளிலுங்களையர் முக்கண்ணனை நோக்கி
அன்னமில்லாமல் அருந்தவஞ் செய்தார்
பிள்ளையில்லாமல் பெருந்தவஞ் செய்தார்
வெண்மதியுடையோன் விமலனாருளினால்
நீ கருவுருவாகியே காரணமாகியே
திருவுருவாக ஜெனிக்கவென் வயற்றினில்
ஓராமாதம் உடலது தளர்ந்து
ஈராமாதம் இடையது தளர்ந்து
பச்சை நாம்போடி பால்முகஞ் சுரந்து
மூன்று மாத முகமெல்லாம் வெளுத்து
நான்கா மாதம் நசக்கிய மசக்கை
ஐந்தா மாதம் அழகு சீமந்தம்
ஆறு மாதம் அடிவயிற் கனத்து
ஏழா மாதம் இனியவை புசித்து
எட்டா மாதம் பொட்டென் தளா
ஒன்பதா மாதம் ஓடியே முட்ட
பத்தா மாதம் மெத்த வேதனையால்
நெற்றி வேர்வை நிலத்தில் விழுக
பற்றியே யுன்னை பாலகா பெற்று

எவ்வளவோ ஆசையுடன் வளர்த்து ஐயோ! எவ்வாறு மனந்துணிந்து அனுப்புவேனடா?

சங்.

கண்ணிகள்—முகாரி—ஆதிதாளம்

உன்னைத் தனியனுப்பவும்—மகனே
ஓகோ பிரமன் விதிக்கவும்—அடடா
என்னைப் பிரித்திருக்கவும்—மகனே மகனே மகனே
ஏதுசெய்வேன் பாலா.

தேவ.

கண்ணிகள்—இந்துஸ்தான் காபி—ஏகதாளம்

ஏதுக்கு மஞ்சாதே
ஈசன் றுணைவருவான்
நேசனருள் புரிவான்
வாசன் சுகந்தருவான்
பொழுது போகுமுன்னே என்னம்மணி
ஆ ஆ என்னம்மணி ஓ ஓ என்னம்மணி
பொன்னடி காணவாரேன்.

சங்.

மண்ணுள நீ பிறந்ததும்—மகனே
மறையோன் முறி புரிந்ததும்—அடடா
என்னுதெண்ணிப் பிறிவது—மகனே மகனே மகனே
என்ன நீதியோடா.

தேவ.

பாதகி யல்லவம்மா
பதிவாக்கு மீருத
சதிமொழி சார்ந்த
விதிவழி மீருத
தேவி நீ வரங்கொடுப்பாய் என்னம்மணி
ஆ ஆ என்னம்மணி ஓ ஓ என்னம்மணி
தீவிரம் போய்வாரேன்.

சங்.

மன்னர் தவமிழைத்தது—மகனே
மாறுதென்னுள் தழைத்ததும்—அடடா

இன்னுள்மட்டும் வளர்த்தது—மகனே மகனே மகனே
இக்காட்டிற் கேகவோடா.

தேவ.

காட்டிற்கே போறேனென்று
கலங்கி வருந்தாதே
குலுங்கி யருந்தாதே
விலக்கும் நெருங்காதே
மேட்டி சிவனருளால் என்னம்மணி
ஆ ஆ என்னம்மணி ஓ ஓ என்னம்மணி
மீன்னுேடி வாரேனம்மா.

சந்.

அன்னம் விட்டிருக்கவும்—மகனே
அப்பா கூழைக் குடிக்கவும்—அடடா
வன்னமிறங் குன்றய—மகனே மகனே மகனே
வந்த சதியறியேன்.

தேவ.

சதியொன்று மில்லையம்மா
சத்தியம் நிற்கவென்றே
முத்தி காம் புக்கவென்றே
பத்தியைக் காக்கவென்றே
விதியால் விளைந்த துன்பம் என்னம்மணி
ஆ ஆ என்னம்மணி ஓ ஓ என்னம்மணி
விடுதிக்கு ளேகுமம்மா.

சந்.

கன்னுக்குட்டி மேய்க்கவும்—மகனே
கந்தைத்துணி தோய்க்கவும்—அடடா
மண்ணுள்ளோர் கண் வைக்கவும்—மகனே மகனே மகனே
மனது கொண்டேனடா.

தேவ.

கன்றது வல்லவம்மா
கையனேறும் விடை

மலைமகளுடும் படை
கலைபெறவே திடை
நின்றவ்விடந்தனிலே என்னம்மணி
ஆ ஆ என்னம்மணி ஓ ஓ என்னம்மணி
நீ விடைதான் தருவாய்.

சங்.

கட்டிக்கரும்பே யென் மகனே
வெட்டி மருவே செண்பகமே
குட்டிவிழாவி னிதழ்மணியே
விட்டிருனே நான்றான் பிரிய
கண்ணே ஒளியே குலவிளக்கே
விண்ணே துலங்கும் ரவிமதியே
மண்ணேபாள வென் வயற்றில்
கண்ணே விடுத்தே நான் போக

கருதும் பணியே செழுந்தேனே
வேண்டிற் கிட்டாப் பசுங்கிளியே
குயிலே மயிலே கோமளமே
விதியோ முனிசெய் சதியோடா.
கணவரிழைத்த பெருந்தவமே
வேந்தர் புகழ் விப்பிரனே
மகிழப் பிறந்தமருக்கொழுந்தே
நடுங்குதெந்தனுடல் மகனே.

(சாமா வருகின்றான்).

சாமா. தாஸா! ஒன்னெ அனுப்றதா சொன்னேறே. நீ வரப்போறெயா என்ன? நாழியாறது, வெய்யலேறிப் போறது நாங்க போய்ண்டே இருக்கோ.

தேவ. இதோ வந்துவிட்டேன். அம்மா! அவர்கள் போய்விட்டால் எனக்கு வழியும் தெரியாது. அந்தக் காலத்திலிருந்ததை யெல்லாம் நினைத்து வருத்தப்படுவ தால் இப்பொழுதென்ன பலன்? அவரவரிழைத்த கர்மங்களின் பலனை அவரவரே அனுபவிக்கவேண்டுமல்லவா? ஸ்ரீமந்நாராயணனே மத்ச்ய கூர்ம வாராஹாதி ஜன்மங்களை யெல்லாம் எடுத்து கஷ்டப்பட்டிருக்க நாமேன் இப்படி யெல்லாம் துக்கிக்கவேண்டும். வந்த வினையை விலக்க விச்வேசனிருக்கின்றார். ஸந்தோஷமாக விடையளியும். நாம் இப்படியெல்லாம் துக்கப்படுவதால் தெய்வத்தின் எண்ணத்திற்கு விரோதமான காரியத்தைச் செய்ய என்னுபவர்களா

வோம். நமது நற்கதியை நினைத்தேதான் பரமன் இப்படிச் செய்கின்றானென்பதை உறுதியாகக் கொள்ளும். ஒரு வேளை நான் காட்டிற்குப் போவதால் அவ்விடத்தில் எங்காவது என் தந்தையை நான் பார்க்க (கோவில் மணி அடிக்கின்றது) அதோ பாரும் நற்சகுனமும் வாய்த்தது.

சந். நற்சகுனமும் வாய்த்துவிட்டதால் இனி நான் தடைசொல்வது சரியல்ல. நீ சொல்லியதுபோல் இப்பொழுது நீ போவதால் உன் தந்தையை பார்ப்பாயென்று நம்புகின்றேன்.

அங்கம் III—காக்ஷி IV

காசிக்கடுத்த கானகம்.

சாமா, தேவதாஸன் இன்னும் மற்ற பிள்ளைகளும் வருகின்றார்கள்.

சாமா. தேவதாஸா! ஒன் சமாசாரத்தெ கேட்டேற்பாடு எனக்கென்னமோ ரோம்ப கஷ்டமாயிருக்குதடா. அந்த பாவி விச்வாமித்திரன்—

தேவ. நண்பா! அவரை யேன் வெய்கின்றாய்? எங்கள் நன்மையை எண்ணிதான் பிரம்மன் இப்படியெல்லாம் எங்களுக்கு விதித்திருக்கின்றான். அவர்மீது ஒரு குற்றமுமில்லை.

பிள்ளை 1. அடே சாமா ஊரெ உட்டு எவ்வளவு தூரம் வந்துட்டண்டா! எனக்கு பசி காதே அடெக்கறது. ஒக்காண்டு சாப்பட்லா வாருங்கடா.

பிள்ளை 2. ஆமாண்டா! சாப்டேட்டு அப்பறம் சமித்து பறெக்க போகலாண்டா. தேவதாஸா! நீ எதாவது சாப்பட்றதுக்கு கொண்டுவந்திருக்கெயா?

தேவ. ஒன்றுமில்லை. ப்ராஹ்மணோத்தமர் எனக்கொன்றும் கொடுக்கவில்லை.

பிள்ளை 3. அடாடாடா! இதெல்லாம் இப்படியிருந்தால் பொழெக்க முடியாதப்பா. வாயிருந்தாதா பிள்ளெ பொழெக்கலாந் தெரியுமா. அய்யா! சாப்பாடு வோணும்னு கேட்டாதாங் குடுப்பா. இல்லாதெபோனு அவாள்ா மனசு வந்து ஒரு துரும்புகூட குடுக்கமாட்டா.

சாமா. அடேய்! நாம்ப எல்லாருமா ஆளுக்கு கொஞ்சம் போட்டு தேவதாஸனுக்கு குடுக்கலாண்டா.

பிள்ளை 2. நீங்கள்ளா வாண்டாண்டா. நானு யெம் பங்குலேர்ந்து அவனுக்கு தறேண்டா.

தேவ. நீங்களெல்லாம் சாப்பிடுங்கள். என் பொருட்டு நீங்கள் எதற்காக குறைவாக புசிக்கவேண்டும்?

சாமா. அப்படியில்லெ ஆளுக்குக் கொஞ்சம் கொடுத்தா எங்களுக்கு ஒன்னும் கொறெஞ்சுபோகாது.

சாமா. எங்க தாய் தந்தைகள் எங்கே பிள்ளெ வயத்துக்கு கொறெஞ்சு போறதோனு அதிகமாகவே வெச்சிருக்கா. அதுனாலே ஒனக்கு ஸங்கோஜமே வாண்டா.

பிள்ளை 2. தேவதாஸா! நீ சாப்டாதெபோனு நானென்னுஞ் சாப்டமாட்டவே மாட்டே.

பிள்ளை 3. நாங்கூட சாப்டமாட்டே.

தேவ. ஸரி நீங்கள் சாப்பிடுங்கள். அப்புறம் ஏதாவது மிகுந்தால் நான் சாப்பிடுகின்றேன்.

பிள்ளை. ஆ! எமர்த்தீட பார்க்கெயோ? அதெல்லா ஊதவாது. எல்லாரு ஒன்னுதா சாப்பட்ண.

தேவ. நண்பர்காள்! அப்படியல்ல. நீங்களோ ப்ராஹ்மணர்கள். நானோ க்ஷத்ரியன். நாம் ஒன்றாய் உட்கார்ந்து புசிப்பது அசாஸ்த்ரீகம். அப்படிச் செய்தால் உங்களுக்கு ஒரு குறைவுமில்லெ, எனக்குத்தான் பாபம்.

சாமா. நீ அவச்யம் சாப்பட்றதா ஒப்புண்டா நாங்க சாப்டேட்டு ஒனக்கு குடுக்கறோ.

தேவ. அவச்யம் சாப்பிடுகின்றேன். (தேவதாஸன் தவிர மற்றவர்கள் ஆகார மூட்டைகளை எடுத்துக்கொண்டு போகிறார்கள்). தீனதயாளா! இவ்வளவு அன்பு என்னிடம் பாராட்டக்கூடியவர்களும் உலகில் இருக்கின்றார்களென்பதை இன்றுதான் அறிகின்றேன். நான் யார்? இவர்கள் யார்? இன்றையதினந்தான் நான் எடுத்த ஜன்மம் ஸபலமாயிற்று. எனக்கு வாய்த்த நற்சகுனமும் அதன் பலனைக் கொடுக்கின்றது. என் தாயும் தந்தையும் தங்களிடம் இவ்வளவு அன்பாயிருப்பவர்களுடன் வாழ்வார்களாகில் நான் எவ்வளவு ஸந்தோஷமாகயிருப்பேன்!

கன்னிகன்—சாவேரி—ரூபகம்

ஆ சிவனே ஆ சிவனே	ஆ சிவனே அரனே
காசிவாழு மீசா வுன்றன்	கழலடிதா பரனே— ஆ சி.
புவனம் படை அயனுமரி	பூணக்கிட்டாத் தாளா
பவநீக்கி பரனே காசி	பாதா வேன்னையாளா— ஆ சி.
நீலிமகிழ் திபுரு மதி	நீரு மழுவுடையா
ஞாலி யுனைப் பணிந்தேன்	பிஞ்ஞகனே பூதப்படையா— ஆ சி.
அஞ்சமெனை வமரர் கஞ்சை	யன்று வுண்ட பரனே
தஞ்சமென்றேயுனைக் கோரினேன்	தற்கா குலக்கானே— ஆ சி.
காலன்றனை விழவுதைத்தே	காத்தாய் பாலன்றனையே
சீலனெனத் தொழுதேனிவிச்	சீர் தூக்கிடு மெனையே— ஆ சி.
முக்கண்ணனே மாயன் மகன்	முடிய வெறிசதவனே
இக்கண்ணெனைக் காருமுமை	யிடமாய்த் தரித்தவனே— ஆ சி.

(சாபா முதலியவர்கள் வருகின்றார்கள்).

சாமா. தேவதாஸா! அதோ பார் ஆத்தங்கரெயிலே அந்த மரத்துமேலெ வெச்சுருக்கோ. போய் சாப்டேட்டு வா. அப்பற தர்ப்ப மறக்கலா.

பிள்ளை 3. இதுதான் தர்ப்பக்காடு. நீ வந்த அதிர்ஷ்டம் இனிக்கி அதோ பார் நறெய்ய தர்ப்பமிருக்குது.

தேவ. இதோ போய் சாப்பிட்டுவிட்டு வருகின்றேன். நான் வந்ததும் போகலாம் அதுவரையில் இங்கேயே யிருங்கள்.

சாமா. அப்படியே ஆகட்டு போய்வா. (தேவதாஸன் போகின்றான்.) அடேடேய்! அதோ பாருங்கடா. (தர்ப்பைவனம் திப்பற்றி எறிகிறது). நறெய்ய இருக்குதானு கண்ணெ போட்டாளே இல்லெயோ எல்லா பத்தின்டு பூடுத்து.

பிள்ளை 3. இன்னடாயிது! இவ்வளவுதூர வந்தூட்டு வெறுமெயா திரும்பறது.

சாமா. இன்னாறு நாளெக்கி வேடிக்கெயா வந்தா போச்சு. அதோ பாருங்கோ! கொஞ்சங்கூட பாக்கியில்லாமெ எறிஞ்சுபூடும் போலெயின்னயிருக்குது.

பிள்ளை 1. டேய்! இல்லாருமா அதுதா இல்லே கொஞ்சநாழி வேடிக்கெபா கிச்சப்பளா அடலா வாங்கடா.

பிள்ளை 2. கட்டிபுள்ளாயிருந்தா நா வரேம்பா. இல்லாதெபோனா நா வல்லேலெ.

பிள்ளை 3. உப்பு கந்தந்தாண்டா வேடிக்கெயாயிருக்கு. (தேவதாஸன் வருகின்றான்.)

சாமா. சாப்ட்டயா தேவதாஸா? என்னமோ ராஜாச் சாப்பாடு சாப்டேட்டு இதெல்லா ஒனக்கு பிடிச்சுதோ யில்லெயோ!

தேவ. நீங்கள் கொடுத்த உணவு மிகவும் ருசியாகயிருந்தது. இவ்வளவு ருசியான பதார்த்தங்களை நான் இதுவரையில் எக்காலத்திலும் புசித்ததில்லை. தர்ப்ப மறத்துவர போகலாமே?

பிள்ளை 1. அதோ பார். ஒரு தர்ப்பங்கூட இல்லாதெ காடுமுழுக்க பத்திண்டு பூடுத்து. கொஞ்சநாழி வேடிக்கெயா வளெயாடிண்டிருந்தூட்டு ஆத்துக்குத் திரும்பவேண்டியதுதா.

தேவ. இதென்ன விபரீதம்! இப்பாவியை அழைத்து வந்ததால்தான் உங்களுக்கும் ஒன்றுமில்லாமல் போய்விட்டது. என் எஜமானர் வெருங்கையுடன் திரும்பினல் மிகவும் கோபித்துக்கொள்வாரே?

பிள்ளை 2. நீ என்ன செய்வே? ஒம்மேமேலே எதாவது தப்பிருந்தாதானே ஒன்னெ கோவிச்சுக்கறதுக்கு?

தேவ. என் எஜமானருடைய குணத்தை நீங்கள் அறியமாட்டீர்கள். என்னுடைய அதிர்ஷ்டம் அதோ கொஞ்சம் இருக்கின்றது. உங்களுக்கில்லாமல் நான் அதை எடுத்துக்கொள்வது தர்மமல்ல. ஆனலும் நீங்கள் உத்திரவு கொடுத்தால் அதை நான் எடுத்துக்கொள்கின்றேன்.

சாமா. தேவதாஸா! அது பாம்புப் புத்தாச்சே! அதுமேலேயிருக்ற தர்பத்திண்டெ போனு பாம்பு சீறுந் தெரியுமா?

தேவ. அதெல்லாம் ஒன்றும் இருக்காது. இறை தேடுவதற்காக பாம்பு எங்கேயாவது போயிருக்கும். அதுவுமன்றி ஆயுள்வுள்ளவரையில் பாம்பினலுமில்லை, யமனலுமில்லை நமது உயிருக்கு அபாயம் என்று த்ருடமாகக் கொள்ளுங்கள்.

பிள்ளை. விதி விதீனு பாம்பு வாய்லெ கெய் வெக்கலாமாயின்ன?

தேவ.' ஒரு பயமுமில்லே. நான் 'தர்ப்பமின்றி இரும்பினுல்—அப்பா! அதைவிட தைரியமாக இதை எடுத்துவரலாம். நான் போகட்டுமா?

சாமா. எங்களுக்கு அந்த தர்ப்பம் வாண்டாவே வாண்டாம். நீயுந்தாம் பயித்தியக்காரம் மாதிரி அதுக்கு போறது எனக்கு இஷ்டமில்லெ. ஆனு உன்னிஷ்டம்.

தேவ. எனக்கொரு பயமுமில்லே. என்னைப் பாது காக்க என் பிதாவின் சத்யம் இருக்கின்றது. (தேவதாஸன் புத்தினிடம் போய் தர்ப்பம் அறுக்கின்றுன்). நண்பர்காள்! இங்கு எவ்வளவு செழிப்பாக வளர்ந்திருக்கின்றது பாருங்கள். ஹா! (அலரி ஓடிவருகிறுன்). ஐயோ கையில் பாம்பு கடித்துவிட்டதே!

பிள்ளேகள். என்ன! என்ன!

தேவ.

கன்னிகள்—முகாரி—ஏகதாளம்

அன்னே தனே விடுக்கவு மிந்த வடவிதர்ப்பை யெடுக்கவும் அரனே
என்னைப் பாம்பு கடிக்கவும் அரனே அ அ யிதுவுமுன்னருளோ.
தந்தை தனியரான து மென்றன் ருயுமுறியானதும் அரனே
என்றனுயிர் பறிப்பதும் அரனே அரனே அரனே யிதுவுமுன்னருளோ.

வசனம்

சத்யமெனும் வ்ருதத்தை மேற்கொண்ட மன்னவன் மகனுக

கன்னி

மண்ணுள நான் பிறந்தும் அ அ அ மறையோனுக்காளானதும் அரனே
இன்னுட் டனிமாளவும் அ அ அ யிசைந்ததுமுன் னருளோ.

வசனம்

ஆதிமுதல் உலகெங்கும் ப்ரசித்தமாய் சூரியன் ஒளி போல் எங்கெங்கும் பரவி சூரியன் தபவினுல் தானுமோர்

ஒளிதரக்கூடியவனுக இருந்துவரும் சந்திரனைப்போல் மற்ற அரசர்களும் அரசர்களென்று சொல்லிக்கொள்ளும் ஸ்வதந்தரத்தை அடையும்படிச் செய்துவந்த

கண்ணி

சூரியன் குலம் பொய்த்ததும் வேதச் சுருதிமொழி பொய்த்ததும்
காரியமுனி சேர்த்ததும் அ அ அ சபடமுன்னருளோ—அனே.

சாமா. தேவதாஸா! உன் கதி இப்படியாயிருந்தது? ஒன் தாயார் கேட்டா என்னடா சொல்லுவேன்?

கண்ணி

விதியோ முனி சதியோ காலகெதியோ வொன்றுமறியோம்
பதிவிரதை மனந்தேற்றிடும் பண்பெதுவோ தெரியோம்.

தேவ. நீங்கள் வீணுய் துக்கப்படவேண்டாம். நகருக்குச் சென்று என் அன்னையிடம் இதைத் தெரிவியுங்கள். என்னல் தனக்கு அந்திபகாலத்தில் அதிகலாபம் கிடைக்கக் கூடுமென்று எண்ணி பொருக்கமுடியாத கஷ்டத்தையெல்லாம் பொருத்து என்னைப் பெற்றெடுத்த

கண்ணி

அன்னை யிதைக் கேட்டால் மெத்தவழுவா ளுயிர்விடுவாள்
முன்னைவினை வாய்த்ததென்று மொழிவீர் நிலைப்படுவாள்.

வசனம்

தன்னுடைய தாய்தந்தையர்களை விட்டு என் தகப்பனை கதியென்றிருந்தாள். கஷ்டம் வந்த காலத்திலும் பர்த்தாவைவிட்டு தகப்பனிடம் செல்லேனென்றிருந்தாள். தான் உயிருடனிருக்கக் கணவன் அடிமைபுகுதல் தன் பாதிவிருத்யத்திற்கு அழகல்லவென்று தன்னை விற்கும்படி முன்னின்ருள். முனிவன் கடனைத் தீர்க்க மறைபவனுக்கு முறியாளுள். உற்ருர் உறவினர் எல்லோரையும் துறந்து உலகில் வேறு கெதியில்லையென்று

கண்ணி—நீலாம்புரி—ஏகதாளம்

என்னைக் கெதியென்றிருந்தாள் இனி வொண்டியாவிட்டேன்
அன்னைதனை யருள்வைத்துமே ஆளுமுறை யிட்டேன்.

ஐயோ! விஷம் ஏறுகின்றதே! நண்பர்காள்! நீங்கள் எனக்கொரு உதவிபுரிய வேண்டும்.

பிள்ளைகள. என்ன சொல்லு இதோ செய்யறோ.

தேவ. நீங்கள் இங்கு நின்று பிரலாபிப்பதால் ஒரு பலனும் இல்லை, விரைவாகச் சென்று என் தாயை வரச்சொல்லுங்கள். அவள் வருமுன் என் உயிர் போய்விட்டால் என் ஸம்ஸ்காரங்களை அவளைச் செய்யச் சொல்லுங்கள். வழியெல்லாம் ஏதாவது அடையாளம் வைத்துச் செல்லுங்கள்.

சாமா. இதோ போறோம். தேவதாஸா! மனசுலெ சிவனெயே நெனெச்சுக்கோ. அவர்தா ஒன்னெ காப்பாத்தணு.

(பிள்ளைகள் அழுதவண்ணம் போகின்றார்கள்.)

தேவ. ஐயோ! இதென்ன விபரீதம். என் உடம்பெல்லாம் வேர்க்கின்றது.

கண்ணிகள்—சாமா—ரூபகம்

கால் சோருது கைசோருதே கண்களிருளுதம்மா
பால்குடித்த நாவும் பல்லும் பற்றிக் கிட்டுதம்மா.
மறையோன் கையிலுன்னை விட்டு மடியலானேனம்மா
நுரைதள்ளுதே நெஞ்சின் கோழை நோக்குதே மேலம்மா.
பெற்ற வயிறெரியவிட்டேன் பிள்ளையெனுமாசை
அற்றிடவும் கெதியுனக்கே யமைந்ததுவோ ஓசை.
தந்தைபோன வழியுங் காணேம் தனையனையுந் துறக்க
இந்த விதி யுனக்கே பாவி யெழுதினனோ பறக்க—கால்.

ஐயோ! என்னை என்னவோ செய்கின்றதே! ஸ்வாமி! ஆதி ஸ்வரூபமே! ஜோதிச்சுடரே! ஆதிமத்யாந்த ரஹிதனே! அமரரைக்காத்த அண்ணலே! தாங்கள் தாம் என் தாய்தந்

தையர்களைக் காக்கவேண்டும். ஹா! ஹா! ஹரிச்சந்திர மகாராஜனே! நான் இறப்பதற்காக சிறிதும் கவலைப்பட வில்லை என்பதை த்ருடமாக மனதில் கொள்ளுங்கள். சிவ பெருமானே! தாங்கள் விற்றிருந்து பரிசுத்தமாக்கிய சுடலைக்கு இக்கட்டையும் சீக்கிரத்திலேயே வரும். ஹா! என் தாயார் பாதிவ்ருத்யத்தை நீர்தான் காக்கவேண்டும். ஆனால் எனக்கும் என் தாய்க்கும் என் தந்தைக்கும் நற்கதி கொடுக்க எங்களை கைவிடாதது சத்தியமே சத்தியமே. (இறக்கின்றான்).

அங்கம் 111—காக்ஷி V

காசியில் மயானம்

ஹரிச்சந்திரன் உட்கார்ந்திருக்கின்றான்.

ஹரி.

கண்ணிகள்—செஞ்சுருட்டி—ரூபகம்

இன்னமும் நின்மனதிரங்கா தென்ன கொள்ளையோ ஐயா
இப்படி நானுனக்குச் செய்த பிடரைச் சொல்லையோ— இன்.

மன்னவனை யென்னையிருத்தி மகிழ்ந்தவனீயே இந்த
மயானங்காக்க விட்டவாறன் மலாடித்தாயே— இன்.

சிவமே பெரிதென யோகவான்கள் சிந்திக்கிறோ நின்
சேவடி தொழுதாலே பல சித்தருமென்பாரோ— இன்.

தவமிழைத்தேனே சிறுவயதிலே தாழ்ந்தேனுன்னையே நான்
தாவியழைக்க வந்தே கவலை தப்பா யென்னையே— இன்.

பட்டபாடு முற்று வறுமை பானே போதும் நான்
பாவி பாவி பதம் பணிந்தேன் பவமற வோதும்— இன்.

கெட்ட கடத்தை யிருக்கிறுமுன் கிருபையால் நீக்கும் ஐயா
கிரணம் வேதம் பொய்த்திடாமற் கெதியருள் தாக்கும்— இன்.

கங்காதரா! இவ்வாறு இப்பாவியை வருத்துதல் கருணை நிதியாகிய உமக்கு அழகோ? தன் சுகத்தையும் கருதாது வேண்டியவருக்கெல்லாம் வரமளித்தருளும் அரனே.

கண்ணிகள்—நவரோஜ்—ஜம்பை

ஒருநாளுமுன் பெருமைத்தா ஓகந்தருள்வோனென்றே தேவ
ஓதமொழி யடியேனுக்கே யொழிந்ததுவோ யின்றே— அரனே.
தருமமிதுவன்றனக்கு றயைபுரிவாய் கன்றே இத்
தரணியிலுனைப் பணிந்தேன் தனயன் ஞானக்குன்றே— சிவனே.

வசனம்

மார்க்கண்டன் ஒரு அல்ப மனிதனென்பதை சிறிதும் நினைக்காமல் தேவர்களையெல்லாம்விட பக்தர்களே உயர்ந்தவர்களென்று எண்ணி

கண்ணி

காலனே யன் றுரைக்கவந்த கருணை யென்மேலில்லையோ உன்
கழலடியைத் துதித்தும்வராக் கருமம் யாது தொலையோ—அரனே.

வசனம்

அப்படி கருணை யென்மீது சிறிதுமில்லாமலிருக்க நான்

கண்ணி

யானை வதைபுரிந்தேனோ வடுத்தவனைக் கெடுத்தேனோ உன்
னடிநினைத்தா லறக்குமென யறைவதிதுதானோ— சிவமே.
தந்தையும் நீ தாயெனவே தான் மதித்தேனைய நின்
தனையனுக்கித் துயாருந்த தலைவிதியோ தய்யா— அரனே.

வசனம்

இவ்வாறு கஷ்டப்பட நான் என்ன பாவம் புரிந்தேன்? அபயமென்றடைந்தவனை ஸம்ஹரித்தேனேயன்றி வஞ்சக எண்ணங்கொண்டு கெடுத்ததில்லையே! பிறர் மனைவியை என் தாயாக எண்ணினதன்றி, ஐயோ வேறுவிதமாக கனவிலும் நினைத்ததில்லையே. நித்யானுஷ்டானங்களைச் செய்து

அன்றன்று புரிந்த பாவங்களை தீர்த்துக்கொள்ளாத பாதகனே நான்.

கண்ணிகள்—முகாரி—அட-தாளம்

நீதிமுறை பிசகி வஞ்சக நேசருடன் கூடி—வெகு
காதமது புரிந்த கெட்ட கருமியோ நானடி.
குறையேது செய்தறியேன் ஏதுங் கோவித்துணாத்தறியேன்-எனை
பறையனாய் நின்றிடவே நீயும் பார்க்க போமோ சிறியேன்.

வசனம்

ஒரு பாபமும் புரியாது இருந்த என்னை மனைவியை விற்கச்செய்து மகனை விற்கச் செய்து மந்திரியைப் பிரித்து

கண்ணி

இந்த விதி விட்டாய் அடுகா டிருக்க செதிவிட்டாய்—ஆதி
அந்தமாய் நீதிபெய்து வல காண்ட பலன் தொட்டாய்.
வேத நெறியடைந்து வதின் விதி பிசகாமல் நாதா—மறை
ஓத அறமளித்த பலன் உதவினையோ பாதா.

மனிதனால் ஸகிக்கமுடியாத கஷ்டங்களையெல்லாம் அடைந்தேன். முனிவன் மங்கையர்களைப் புணரும்படி சொல்லிய வார்த்தைகள் என் காதுகளில் நாராசம்போல் புகுந்தன. மகுடத்தை மாமுனிக்கு மகிழ்வுடனளித்தேன். தாரகனுடன் தனிவழி செல்லும்பொழுது பட்டேன் எவ்வளவோ கஷ்டங்களை. மாமுனி கடனுக்காக மங்கையர்க்கரசி மறையவனுக்கு முறியானாள். அரசிளங்குமரனும் அந்தணருக்கடிமையானான். எல்லார் துன்பத்திற்கும் ஆதிகாரணமாகிய படுபாவி நான் தாரகன்பொருட்டுப் பறையனுக் கடிமை புகுந்தேன். அந்தக் காலத்திலெல்லாம்

கண்ணி

எதுக்கு நீயெனவே நம்பி யிருந்தவனை அரனே மெத்த
வாதிக்கவுந் தகுமோ என் வறுமையைக் கொய் பரனே.

அவ்வளவு துக்கங்களிலும் பரமசிவனையே நம்பியிருந்தும் என் கெதி இப்படியல்லவா முடிந்துவிட்டது! அரிவாளைத் தாங்கினேன். புல்லை யருத்தேன். விரல்களை வெட்டிக்கொண்டேன். இறந்த மாட்டின் தோலை யுரித்தேன். இப்படியெல்லாம் நான் வாழ்ந்திட

கண்ணிகள்—காம்போதி—அடதாளம்

என்ன விதி விட்டனை சிவமே
எங்கி அரிவாளைத் தாங்கிப் புல்லருக்க— என்.
வின்னத் தோட்டிக் கடிமையாய் சிவமே
விரலுமலுத்திடக் காமும் வலித்திட— என்.

நான் வாழ்ந்த வாழ்வென்ன, இப்பொழுதிருக்கும் நிலமையென்ன! விலைமிகுந்த ஆடையாபரணங்களை அணிந்திருந்தேன். இப்பொழுதோ

கண்ணிகள்—பதுகுலகாம்போதி—ஆதி.

அரனே கங்காதரனே வுன்ற னருளோயிது சிவமே
அடியேனிந்த வேடங்கொள்ள வமைத்தாய் விதி சிவமே.

வசனம்

புண்ணிய தீர்த்தங்களால் அபிஷேகம் செய்யப்பட்ட சிரம். தேவர்களுக்கும் கிடைக்கக்கூடாத சூர்ய வம்சத்தார் அணிந்துவந்த மகுடத்தை தரித்த சிரம். முக்கண்ணனை எக்காலத்திலும் குனிந்து வணங்கிய சிரம். மாமுனிகளை கண்டபொழுதெல்லாம் அவர்கள் பாதத்தில் உருண்ட சிரம். விச்வாமித்ர முனி இப்பாவியின் மகுடத்தை உதைத்தபொழுது விழுந்த பாத தூளிகளை தரித்த சிரம்.

கண்ணி

துரைமன்னர்கள் பணிமகுடம் தொட்ட முடி சிவமே
துண்பெட்ட துணியுங் கட்டிட தொகுத்தாய் விதி சிவமே.

வசனம்

பட்டாடைகளையெல்லாம் ம்ருதுவல்லவென்று சொல்லும்படி அப்படிப்பட்ட தலையணைகளின்மீது சாய்ந்த சிரம் இப்பொழுது கற்பாறைகளின்மீது சாய்வேண்டியதாகயிருக்கின்றது. நாலு பக்கங்களிலும் பரிமளம்வீச சிற்றரசர்கள் பணிவிடைபுரிய புத்திமிகுந்த மந்திரிகள் அருகில் நிற்க ரத்னமயமான ஸிம்ஹாசனத்தில் வெண்குடையின்கீழ் அமர்ந்திருந்த இக்காயம் பிணங்களைச் சுடும் புகைசூழ பூதகணங்கள் மங்களம்பாட பரண்மீது வெயிலில் சாய்ந்து மழையில் நனைந்து இருக்கவல்லவா விதித்தான் பரமசிவன். ஐயோ! கண்ட பகைவர்கள் நடுங்கிப் பதுங்கியோடும்படி அவ்வளவு வலிமையை உடையவைகள் இப்புஜங்கள். யுத்தத்திற்கு புறப்படுங்கால்

கண்ணி

அம்புத்தூணி தாங்குத் தோளி — லையோயின்று சிவமே
அருங்கம்பளி யேற்றவைத்த — யருமைகன்று சிவமே.

வசனம்

கவசமணிந்த மார்பில் கந்தையையோ அணிவது. பகவத் ப்ரஸாதங்கள் வாங்கிய இக்கைகளால் சுடுகூலியையோ வாங்கும்படி அவன் விதித்தான். ஐயோ!

கண்ணி

வாளுங்கச்சை வளரும்படி — வணைந்தயிடை சிவமே
வருத்தத்தட்டி பூட்டிவைத்தாய் — வகையறிவேன் சிவமே.

வசனம்

நான் எவ்வளவு கதறித்தான் என்ன பலன்! நான் முறையிடுவது சிறிதும் அப்பரமசிவன் காதிற்கு எட்டுவதாகத் தோன்றவில்லை. ஐயோ மரங்காள்! நீங்களாவது அவரிடம் என்னைப்பற்றி முறையிடலாகாதா! தேவதைகாள்! உங்களிலா

வது யாராவது ஒருவர் என் கஷ்டங்களை சிவபெருமானிடம் எடுத்துரைக்கலாகாதா? இப்பாதகன் படுந்துயரத்தைப் பரமனிடம் பகருவதற்கு ஒருவரையும் காணேமே! சூர்யகுலத்திலுதித்த ஹரிச்சந்திரன், தனக்கென்றோர் தனி மண்டலத்தை உடைய த்ரிசங்குவின் புத்ரனாகிய ஹரிச்சந்திரன், வசிஷ்ட சிஷ்யனாகிய ஹரிச்சந்திரன், விச்வாமித்ரனை ஸந்தோஷப்படுத்திய ஹரிச்சந்திரன், ஸ்வயம்வர காலத்தில் உலகிலுள்ள அரசர்களை எல்லாம் வெறுத்து சந்திரமதி தனக்கென்று எடுத்து ஸன்மானித்த ஹரிச்சந்திரன், குருவை ஸந்தோஷிப்பித்து அவர் வாயால் தேவதாஸனென்ற காரணப் பெயரைப் பெற்ற லோகிதாஸனை புத்ரனுபடைந்த ஹரிச்சந்திரன், தேவேந்திரனும் பொறாமை கொள்ளும்படி அவ்வளவு சுகத்தை அனுபவித்துவந்த ஹரிச்சந்திரன கதறுகின்றான், கத்துகின்றான், கூவுகின்றான் என்று

கண்ணிகள்—ஆரபி—ஆதி.

யார்போய் சொல்லுவார் இந்த வேளை
யானுக்கோடி —யார்.

வசனம்

அவனுடைய ஹ்ருதயம் பிளந்துவிடும்போல் இருக்கின்றது. உடனே அவன்மீது கிருபை வைத்து பூவுலகத்திற்கு வந்து அவனைக் காப்பாற்றுங்கள் என்று

கண்ணி

யார்போய் சொல்லுவார் இந்த வேளை
யானுக்கோடி —யார்.

வசனம்

பரதார சகோதரனாகிய ஹரிச்சந்திரன், ஏகபத்னி வ்ருதத்தை மேற்கொண்ட ஹரிச்சந்திரன், ஆதலால் முனிவனனுப்பிய மங்கைகளை மணக்கமுடியாதென்ற ஹரிச்சந்திரன், கேட்டவருக்கில்லையென்று சொல்லாத ஹரிச்சந்திரன்,

முனிவன் மேற்கொண்ட யாகத்திற்குப் பொன்னைக்கொடுத்து மறுமுறை கேட்டபோதிலும் அதை இல்லையென்று சொல்ல முடியாததால் கடன்பட்ட ஹரிச்சந்திரன்,

கண்ணி

மாமுனி தனக்கன்று வழங்கிய கடனுக்குக்
காமினி மாதையும் விற்றான் — சுடலை
புற்றான் — என்று — யார்

வசனம்

பெண்டுபிள்ளைகளை விற்றபிறகு வாடினான், வருந்தினான். அதன்பிறகு நரகன் கூலிக்கு ஒப்பந்தமில்லாவிடினும், ந்யாயத்தின் பொருட்டு அவன் கேட்டதை அவனுக்குக் கொடுப்பதற்காக

கண்ணி

பூமியற் பிணம்சுடும் புலையனுக் கடிமையாய்
ஸ்வாமி யென்றவன் காலும் பிடித்தான் — மனம்
திடித்தான் — என்று — யார்.

வசனம்

கஷ்டம் வந்த காலத்தில் கடவுளை நினைப்பது ஸகஜமே. ஆனால் ஹரிச்சந்திரன் எக்காலத்திலும்

கண்ணி

யாரையும் நம்பாமலே அரஹரா சிவமென்ற
பேரையே தினம் சொல்லி யிருப்பான் — கையை
விரிப்பான் — என்று — யார்.

(பாடிக்கொண்டே வெளியே போகின்றான்).

(சத்யகீர்த்தி வருகின்றான்).

சத். எங்கெங்கு தேடித்திரிந்தும் என்னய்யனைக் காணவில்லையே. சேரியில் தேடியதற்கு மயானத்திலிருப்பதாகச் சொல்லினார்கள். வீரவாகு இவருடன் தன் வீட்டிற்குத் தான் வரக்கூடாதென்று சொன்னார். ஆகையால் இங்குவந்து

224899

என் ப்ரபுவுடன் இருந்தால் ஒன்றும் சொல்லமாட்டாரென்று வந்தால் இங்கும் அவரைக் காணாமல் சிவம்...

ஸெஞ்சுருட்டி—ரூபகம்

தேடித்திரிகிறேன் என்னண்ணலைத் தேடித்திரிகிறேன்
ராஜனு மில்லையே வாசஞ்செய்வாரொன்றே
நேசமாயெண்ணியே ஆசையுடனேடி—தேடி.

ஹரி. (உள்ளிருந்தவண்ணம்) இவ்விருளில் இங்கு வந்து கூக்குரலிடுவது யார்?

சத். தாங்கள் தாம் காவல்காரரோ? தங்களை ஒன்று கேட்க எண்ணி வந்திருக்கின்றேன்.

ஹரி. (உள்ளிருந்தவண்ணம்) என்ன கேட்கவேண்டும் சொல்..

சத். அப்பா! அயோத்திமன்னன் ஹரிச்சந்திரன் இங்கு இருக்கின்றாரா, உனக்குத் தெரியுமா?

ஹரி. (உள்ளிருந்தவண்ணம்) இதையெல்லாம் கேட்கும் நீயார் என்பதை தெரியப்படுத்தினால் நான் பதில் சொல்லுகின்றேன்.

சத். அவருக்கு அடிமையாகிய சத்யகீர்த்தி யென்பார்களென்னை.

ஹரி. (உள்ளிருந்தவண்ணம்) சத்யகீர்த்தியா! (வெளியேவந்து) சத்யகீர்த்தி! நான் காண்பது கனவல்லவே?

சத். கனவல்ல. தங்களடிமை சத்யகீர்த்தி வாஸ்தவமாக இதோ காத்திருக்கின்றேன்.

ஹரி. உன்னை மறுபடியும் பார்க்க எனக்கு வரமளித்தாரா பரமசிவன்! உன்னைக் கண்டதுபோல் மற்றவர்களையும் சிக்கிரத்திலேயே நான் காணும்படி வரமளிப்பாராகின்—ஐயோ!

'படமுடியா தினித்துயரம் படமுடியா தாசே
பட்டதெல்லாம் போதும்'.

சந். ஈச்வர! சத்யமே உருவெடுத்துவந்த இவரையோ இக்கதியாக்குவது! ஐயோ! சூர்யகுல திலக! நீர் நீசவேடந் தரிக்க பாவி நான் அதைப் பார்க்க என்ன விதித்தான் அந்த ப்ரஹ்மன்!

ஹரி. சத்யகீர்த்தி! என் கஷ்டங்களையெல்லாம் என்னென்று சொல்வேன்! பொன்கொடுத்து என்னைக் கொண்ட புலையன்பின் புலால் சுமந்தேன். சேரிக்குச் சென்றபின் விச்வாமித்ரனன்று என் முடியை யுதைத்தபொழுது அவர் கால் நோவை போக்க அவர் காலைப் பிடித்த இக்கைகளால் என் ஆண்டையின் கால்நோவுகளைப் போக்க அவர் கால்களைப் பிடித்தேன். மாட்டுக்குப் புல்லருத்தேன். செத்த மாட்டின் தோலையுரித்தேன். இவ்வுடையைப் பூண்டேன். இக்கைகளால், கேட்டவர்க்கு இல்லையென்று சொல்லாமல் பொன்னை வாரியிறைத்த இக்கைகளால், பகைவர்கள் பயந் தோடும்படி வில்லேந்தி யுத்தம்புரிந்த இக்கைகளால், மெலிந்தவர்களுக்கபயமளித்த இக்கைகளால், செங்கோலேந்தி ப்ரபஞ்சத்தை நிலைநிறுத்திய இக்கைகளால், பரமனை யென்றும் கைகூப்பி வணங்கிய இக்கைகளால், மயானத்தைக் காக்க இக்கோலை வாங்கிக்கொண்டு இங்குவந்து.

கண்ணி—பதுகுலகாம்போதி—ஆதி.

காசியில்வாழ் விச்வநாதன் கருணைபிதா மென்றுபெண்ணி
களிப்புட னிருக்கலானேன் மந்திரி மந்திரி
மாசிலா மணியோனுன் மாகுணன் பாததைநாடி
மயானத்தைக் காக்கலானேன் மந்திரி மந்திரி.

வசனம்

காடாறுமாதம் நாடாறுமாதமெனக் காலத்தைக் கழித்து ஆதிசங்கரனுடைய அடிமையாக இவ்வுலகில் காவல்புரிந்து வந்து

கண்ணிகள்—நீலாம்புரி—ஜம்பை

ஆதிசிவ சங்கரனே யடியேனிச் சுடலை
பாதிமதியோன் றனது பக்ஷமதோ மந்திரி.

சத்.

சங்கரனு முன்னொருநாள் சாம்பவியினுடன் கூடி
இங்கு தங்கி நடனித்த யிடமிதுகாணரசே.

வசனம்

ஹரி. நான் உயர்ந்த பதவியிலிருந்தபொழுது நீங்கள் எனக்காக வாங்கிய இவ்ப வரசனைகள் போதாதென்று.

கண்ணி

காட்டமடக்கிச் சவத்தை கடத்திரணல் மூட்டிடவும்
வாட்டமுடனுற்றதில் வருந்துவதேன் மந்திரி.

சத்.

இத்திரு வாசனைகொள்ள என்னாளு மிவ்விடத்தில்
ருத்தானும் வீற்றிருப்பா னுண்மையிது வரசே.

ஹரி.

கைதனிலே கோலோச்சிக் காவலிங்கு நான்புரிய
வையகத்தி லென்னகுறை வருத்தேனோதான் மந்திரி.

சத்.

வறுமைசுக மன்பருள் வாழுலகோர் புரிவதெலாம்
தருமனறிந்தே நீதி தாவிடுங்கோ லாசே.

வசனம்

ஹரி. பஞ்சணைமீது சுகமாக அமர்ந்திருந்துவிட்டு.

கண்ணி

பாணையின்மேல் நானமர்ந்து பலவிதமாய் கொக்தருகத்
தாணிதனிலேது சதி தான் புரித்தேன் மந்திரி.

வசனம்

சத. ஸ்வாமி! இதையொரு அல்பமான ஆசனமாக எண்ணவேண்டாம்.

கண்ணி

அட்டமதங்களை யொடிக்கி யங்குராசமதையடக்கி
இட்டமுடன் சாம்புவனு மிருந்ததில்லை அரசே.

ஹரி. சத்யகீர்த்தி! நீ சொல்வது வாஸ்தவமே! முன் ஜன்மத்தில் நான் செய்த புண்ணியத்தின் பலன்தான் இத் திருவேடத்தை கொண்டதும், உன்னைக் கண்ட சந்தோஷத்தாலும் நீ சொல்லிய மொழிகளாலும் இவ்வளவு காலமாக என்னை வருத்திய பசியும் இப்பொழுது அடங்கிவிட்டது.

சத். ஏன் ப்ரபு! போஜனம் செய்யவில்லையா?

ஹரி. அப்பா! அதையேன் கேட்கின்றாய்! இம்மயானத்தில் வந்தது முதல் இதுவரையில் ஆகாரமென்பதே கிடையாது.

சத். ஏன் தங்களைக் கொண்டவன் தங்கள் போஜனத்திற்கு யாதொரு ஏற்பாடும் செய்யவில்லையா?

ஹரி. இங்கு பிணங்களுக்கிடும் வாய்க்கரிசியையெடுத்து என் பசியை தணித்துக்கொள்ளும்படி உத்திரவு செய்தார். ஆனால் அதை எப்படி புசிக்க மனம் துணியும்! மந்திரி! அதன் அசுத்தத்தைப் போக்கி புசிக்கக்கூடியதாய்ச் செய்யும் மார்க்கம் யேதாவது இருக்கின்றதா?

சத். ப்ரபு! அந்த அரிசிகளை பசுவுக்கு ஆகாரமாகக் கொடுத்து அதன் சாணத்தில் வெளிவரும் அரிசியை உட்கொள்ளலாம்.

ஹரி. இதுவரையில் வந்த அரிசியையெல்லாம் குவித்துவைத்திருக்கின்றேன். காலையில் இங்கு ஒரு பசு வரும் அதற்குக் கொடுக்கலாம். சத்யகீர்த்தி! இங்கு யாராவது வருகின்றார்களாவென்று பார்த்துக்கொள். நான் கொஞ்ச

நேரம் நித்திரை செய்கின்றேன். நான் என்ன ஸ்திதியில் இருக்கின்றேனென்றது அவனொருவனுக்குத்தான் தெரியும்.

சத். அரசே! தாங்கள் நித்திரைக்குச் செல்லுங்கள் நான் பார்த்துக்கொள்கின்றேன். (ஹரிச்சந்திரன் தன் டத்தை சத்யகீர்த்தியிடம் கொடுத்துவிட்டு பரண்மீது சாய்ந் துகொண்டு நித்திரைசெய்கின்றான்).

ஹரி. (நித்திரை செய்தவண்ணம்) சரி! ம்! ம்! சரி! மந் திரி.

சத். ப்ரபு! இதென்ன இது! தூங்கியவண்ணம் என் னைக் கூப்பிடுகின்றார். யேதோ கனவு காண்கின்றார்போலிருக் கின்றது.

ஹரி. (தூங்கியவண்ணம்) அதெல்லாமிருக்கட்டும்

மத்தியமாவதி

தேசத்தில் ஆலயப்பூஜைகள் தடையின்றி
தினந்தினம் நடந்தேறுதா?

சத். பூர்வாவஸ்தையை நினைத்து கனவுகாண்கின்றார் பாவம்.

ஹரி.

கமாச்

பார்மன்னர் தருகின்ற பகுதியது தடையின்றி
பரிவாக வருகின்றதா.

ஹா! (விழித்துக்கொள்கின்றான்).

சத். அரசே! என்ன யேதோ திடுக்கிட்டு எழுந்திருக் கின்றீர்கள்?

ஹரி. அயர்ந்து நித்திரை செய்யுங்கால் நான் ஒரு கனவு கண்டேன். என் உடல் நடுங்குகின்றது. அன்று நான் கண்ட கனவின் பலனாக இக்கஷ்டங்களையடைந்தே

னென்பதை நினைத்தால் இக்கனவினால் என்ன நேரிடுமோ வென்று பயமாகயிருக்கின்றது.

சத். என்ன கனவு கண்டீர் சொல்லும்.

ஹரி. தூங்கிக்கொண்டிருக்கையில்

ஒரு பெரும் பூதம் ஒடுக்கிப் பதுங்கவே
மருளுடன் மற்றொன்று மகிழ்ந்து சந்தோஷமாய்
ஜெய ஜெய தோட்டி ஜெயம் பெறவென்றே
கயமுடனுரைத்தே நாட்டியஞ்செய்தது
பெண் பூதமொன்று பிள்ளையை யேந்தியே
எண்ணெளி முன்பா யிருத்தியே நின்றது
பாம்புருவாகப் பனைத்தொரு பூதந்
தேம்பிடச் சிசுவின் திரேகத்திற்றங்க
காலு கையில்லாக் கரும்பூதமொன்று
மேலாகவென்றே மிசைத்தோடக் கண்டேன்
கொள்ளிப் பிசாசுங் கூடொரு பிடாரியுங்
கள்ளனைப்போலவே கருத்தமேனியாய்
கோளக்கிடாவின்மேற் கொண்டிடக் கண்டேன்
நாலொரு தலையுடன நகைத்தொரு பூதஞ்
சிரித்துமேயாட சிரசினில் மயிரை
விரித்து நிர்வாணமாய் வேறொரு பூதம்
பக்கத்திலேயொரு பிசாசினைத்தாங்கி
கக்கத்தற் சட்டியுங் காலையுந் தூக்கியே
வந்தெதிர்நிற்க வாயதுகுளறி
எந்தேகமறந்து ஏங்கி நின்றேன்
வெள்ளிமுளைத்திட விடிந்தது பொழுதென
துள்ளி நானெழுந்து தொடுத்து செங்கோலினை
தேச விசாரணை திகழுடன் புரிந்தேன்
மோசமென வருமோ மொழிகுவாய் மந்திரி.

சத். அரசே! பரமேச்வரன் க்ருபையால் சீக்கிரத்திலேயே தங்களுக்கு நற்கதி வாய்க்குமென்று இக்கனவினால் தெரிகின்றது. தங்கள் துன்பமெல்லாம் நடுங்கிப் பதுங்கி

ஓடவும் அந்த பூதங்களின் செயலின் பலனுக தங்களுக்கு மும்மூர்த்திகளின் த ரி ச ன மு ம் கிடைக்கப்போகின்றது. (ஹரிச்சந்திரன் முழந்தாளிட்டு கடவுளை வணங்குகின்றுன்).

அங்கம் IV—காக்ஷி 1

காட்டில் தேவதாஸன் பிணம் இருக்குமிடம்
சந்திரமதி அழுதவண்ணம் வருகிருள்

சந்.

கண்ணிகள்—சஹானு—ஆதி.

பாலனிறந்தவிட மிதுதானே என்றன்
சீலன் மடிந்தவிட மிதுதானே.

ஆலயமென் றதிவு மிதுதானே சிறுவர்
சாலவேவைத்திட்ட குறிப்பிதுதானே.

காடீமுன்னு புதரென்ற திதுதானே மகன்
பேரயழித்திட்ட விட மிதுதானே

தெர்ப்பையோங்குமென்று சொன்ன திதுதானே சேர்த்த
அர்ப்பச் சமித்துவகை யிதுதானே.

என் மகன் தேவதாச னிவன்தானே விஷத்
தன்மையான் மயங்கி வீழ்ந்தானே.

ஐயோ தேவதாஸா! தேவதாஸா! தேவதாஸனுகையால் அவர்களுக்குப் பணிவிடை இங்கிருந்து செய்தால் போதா தென்று நேரில் பணிவிடை புரியப் போய்விட்டாயா? கண்ணே! எந்தத் தாயாருக்கு முன் நானே ப்ராணனை விட்டு உங்களைக் காப்பாற்றுவேன் என்று, அக்கினியின்முன் போய் நின் ருயோ அந்தத் தாயார் உன்னைக் கூபபிடுகின்ருள் எழுந்தி ருந்து.

புன்னுகவராளி—ஆதி.

பல்லவி

வாடாயென் கண்ணின் மணியே எழுந்தொரு முத்தம் நீ
தாடவென் கண்ணின் மணியே.

அநுபல்லவி

காடாவுனக்கு மனை வீடா நீ யிங்குறங்கப்
பாடா வயன் விதித்த தோடா நான் பாவி—வாடா.

சரணங்கள்

பஞ்சணையை விட்டு யிறங்காய்—அடா மகனே
நெஞ்சைவிட்டுத் தாழ வுறங்காய்.
கொஞ்சுங் கிளிமொழிக்கே அஞ்சுவையேடா அப்பா
வஞ்ச மிருக காட்டில் பஞ்சை போற்றூங்கலுற்றாய்-வாடா.

நான் இவ்வளவழைத்தும் நீ வராமலிருப்பது சரியல்லடா யென் கண்ணே! எங்களை முன்னொருகால் முதலில் உயிர்விட்டு காக்க முயன்றதுபோல் எங்கள் துன்பங்களிலிருந்தும் காப்பாற்றுவதற்காக பரமசிவனிடம் முறையிட முன்னால் போனாயோ! வேண்டாம்! நீ யென்னருகிலில்லாவிட்டால் எந்த சுகம் வந்தாலும் அது எனக்குத் துக்கத்தையே கொடுக்கும். நான் இப்படி கதற நீ உத்திரமுறைக்காமலிருக்கலாமோ. நான் எப்பொழுதாவது

இந்துஸ்தான்—சுருட்டி—சாப்பி

பல்லவி

வா வா வா வெனக் கூவியழைத்தால் ஓடிவருவாயே
மகனே வருவாயே முத்தந்தருவாயே மகனே — வா வா.

அநுபல்லவி

கூ கூ வென நான் தாவியழைத்த வாயாற்
பாவி யழுத குரல் வேவியுன்றன் செவிகேறலையோ
மகனே ஏறலையோ நான் பெறலையோ மகனே — வா வா.

சரணங்கள்

கொள்ளிவாயின்பூதங் குள்ளகரி கரடி
பல்லை யிளித்துமென்றன் உள்ளம் நடுங்கிடவே
பார்க்குதேடா மகனே பார்க்குதேடா
உன்னைக் காக்குதேடா மகனே —வா வா.

உன்னையடிக்கடி எண்ணி யெனது விரு
கண்ணின் நீர் வடிந்திடும் அன்னையின்மேற் கோபம்
ஆகுமோடா மகனே ஆகுமோடா
துயர் போகுமோடா மகனே —வா வா.

ஆதிக் குருடனெளி ஜோதியடைந்த பகல்
பாதிதனில் மறைந்த கெதியாகினேன் நான்
பாவியோடா மகனே பாவியோடா
குலத் துரோகியோடா மகனே —வா வா.

தந்தையின் வாக்கியம் பிந்த நடந்தறியா
உந்தனுக் கித்துயர் வந்ததின் காரணம்
தர்மமோடா மகனே தர்மமோடா
என் கர்மமோடா மகனே —வா வா.

என் செல்வமே! என்மீது என்னடா கோபம்? நீ இறந்ததைக் கேட்டு உன் கதியைப் பார்த்து இன்னும் உயிரை வைத்திருக்கின்ற இப்பாவியுடன் எதற்காக வார்த்தையாட வேண்டுமென்று பதிலுரைக்காமலிருக்கின்றாய்? உன் பிதா மீட்டுக்கொள்ள வரும்வரையில் என்னை பாதுகாப்பதாகச் சொல்லி இப்படி கைவிட்டுவிடுவது உன் குலத்திற்கழகல்லவே! ஐயோ! உன் தகப்பனார் நம்மை மீட்டுக்கொள்வதற்காக வந்து என் அருமை மைந்தன் எங்கேயென்று கேட்பாராகில் யான் என்ன பதில் சொல்வேன்! என் செல்வமே! என் கருமணியே! நீ வாஸ்தவமாகவா இறந்துவிட்டாய்? உன் உடல் குளிர்ந்துவிட்டதே!

பனியானனைந்து வெயிலாலுலர்ந்து பசியாலலைந்து மூலவா
அனியாய வெங்கணரவாலிறந்த வதிபாவமென் சொலறியேன்
தனியே கிடந்து விடநோய் செறிந்து தரைமீதுருண்ட மகனே
இனியாரை நம்பியுயிர் வாழ்வமென்ற னிறையோனும் யானுமவமே.

உன் தேகம் நோயால் வருத்தப்பட்டு என் கையால் மருந்துகொடுத்து முடிந்த உபசாரங்களைச் செய்தோம், சாவு சமீபித்துவிட்டது, திருப்தியானவைகளைக் கொடுத்தோம்

என்றதுமல்லவா என்க்கில்லாமற்போயிற்று. யாரைக் கூவி யழைத்து என்னென்று கதறி.

செஞ்சுருட்டி—ஏகதாளம்.

பல்லவி

அப்பா மாண்டாயோ ஓ ஓ பாலனே
எப்போ காண்பேண்டா என் சீலனே.

அனுபல்லவி

கப்பியேயுன்னை காலன் தீண்டிட
ஒப்பிவந்ததோ ஓ விதி கோடி—அப்பா.

சரணங்கள்

கத்தித் துடித்துமே கதறி யழுதையோ
தத்தி நீயுந்தலா தாங்க வீழ்ந்தையோ
சத்தியம் பொய்த்ததோ சந்திரவதி பெற்ற— அப்பா.

பாவியாக்கியெனை பறந்துபோனையோ
கூவித் தாயென்றே குரலுமற்றையோ
ஆவி போம்போது அம்மாவென்றுமே— அப்பா.

கண்ணிகள்—அபுருபகம்—சாப்பு.

ஆ ஆ மகனே பாம்பு அப்பா மகனே பாம்பு
ஐயோ மகனே பாம்பு அடவியிற் கடித்ததோடா
அப்பா அப்பா அம்மா அம்மா வென்று
அழுதமடிந்தாயோடா மகனே—மகனே—மகனே.

வேமணலிற் புழுபோலத் துடித்துமே விழியில் நீர் சொரிய
பழிகாரி நான்பெற்ற மகனே—மகனே—மகனே
என்னென்றழுதாயோ எங்கிப் பறந்தாயோ ஐயோ
எத்தலை மணதிலெண்ணமிட்டாயோடா மகனே—மகனே—மகனே.

கன்னமாபுரி யாள்வோன் கருதிய நற்றவத்தில் [னே
காதகி வந்துதித்தது, கன்றுவி காலனவோடா மகனே-மகனே-மக
பாவியுன்னைப் பார்த்து பாரிலுடல் கதம்பி—ஐயோ
பதவி பெறுவோமென்றே பண்புற்றிருந்தேனம்பி—மகனே.

ஆவிகுலைக்கறையோ அரவத்தாலுத்தம [மகனே
ஆதித்தன் மரபின்னன்மே மாண்டாயோடா—மகனே—மகனே
தந்தையை நினைத்தாயோ தாளடி தொழுதாயோ—அப்பா
தாயான வென்வயிற்றித் தணியாத் தீயிட்டாயோ—மகனே.

ஐயோ! ரவிகுலம் அழிந்திடவும் அயன் விதித்தானோ! தனிமையாக நான் எப்படி உயிர்வாழ்வேன்! தெய்வமே! என் னுயிரையும் எடுத்துக்கொள்ளலாகாதா? ஐயோ! இதை எப்படி மறப்பேன்? எவ்வாறு என் மனதைத் தேற்றிக்கொள்வேன்?

கண்ணி—சுத்தசாமா—ஏகதாளம்.

என்ன நான் செய்வேண்டா எவ்விதம் மறப்பேண்டா
சின்னவயதிலுன்னை சேரட்டப் பாவியானேன்.
நீரில்லாக் கிணறானேன் நிலையில்லாப் படகானேன்
பாரின்மேலுன்னைப் பார்க்கப்போறேனோ பாலா.
இரவியில்லாப் பகலானேன் ஈனுதோர் பசுவானேன்
பாதவிக்கவேயுன்னை பாம்புக்கிட்டேண்டா பாலா.

இவ்விதமெல்லாம் நான் தவிக்க ஒருபாவத்தையும் செய்யவில்லையே.

நல்லோர் வருத்த முறையாமறங்கள லெட்டிலொன்று குறையேம்
இல்லோரை யற்பமிகழோ மிறுக்கு மிறையன்றி பேறவுகவேம்
சொல்லோ மறுத்து முறையோ முறைத்த துறவோர்கள் புத்திகட
எல்லோர் தமக்கு மினிதே விளைப்பமேதாக வந்ததிதுவே. [வேம்

மறைநீதியுற்ற புறநாடழித்து வருசேனையாள்வதறியேம்
அறைநீதிமூற்று முனைாவண்மச்சை யணிவாயில் வைத்துமறியேம்
குறையே யிழைத்து வினையேவிளைத்த குடிவைத்திருந்துமறியேம்
இறையே தவத்தின் விளைவேயெமக்கு மிதுவோ விதித்தவிதியே.

வேதமொழியை சிறிதும் கடவாத எங்களுக்கோ இந்த விதி? பாலா! முறைப்படி வயோதிகர்கள் முன்னிறக்கவேண்டியிருக்க இப்பாவிபை விட்டுவிட்டு நீ சிறுவயதில் இறக்க

வும் உன் ப்ரேதத்தை இவ்விருளில், இவ்வனத்தில், இந்த நிலமையில், எடுத்துவைத்து அழவேண்டியதாகவல்லவா என் தலையில் எழுதிவிட்டான்! எவ்வளவு காலம் அழுது புறண்டாலும் நீ வரப்போகின்றாயோ! வீணாக வேதியரிடத்திலும் புண்படச்சொல்லும் வார்த்தைகளைக் கேட்டானேன். (எடுத்துத் தோளில் வைத்துக்கொள்கின்றாள்). என் செல்வமே! உன்னை நான் எடுத்து வைத்து விளையாடினதுபோதாதென்று உன் உயிரற்ற உடலைத் தோளில் தாங்கி

கண்ணிகள்—கேதாரம்—ரூபகம்

போரேனிதோ போரேனிதோ போரேனிதோ
போரேனிதோ போரேனிதோ சுடலை.

வசனம்

வழிதெரியாமல் இருட்டில் முன்னிருப்பது தெரியாமல் கல்தடுக்க முள்தைக்க

கண்ணி

சுடலையிருப் பிடமே நாடி
அடவிதனிற் நடந்துகொண்டு நான்—போரே.

அங்கம் IV—காக்ஷி II

காசியின் மயானம்

ஹரிச்சந்திரன் பரண்மீது படுத்துக்கொண்டிருக்கின்றான். சத்யகீர்த்தி கோலைத் தாங்கி நின்றுகொண்டிருக்கின்றான்.

சத். ஆதித்யன் மரபிற்தோன்றி அரசாண்டுவந்த அரிச்சந்திரன் இப்படிப்படுத்துறங்கவும் அதைப் பார்க்கப் பாவி நான்.

ஹரி. ஹா! சத்யகீர்த்தி!

சத். என்னய்யனே! என்ன ஸமாச்சாரம்?

ஹரி. என்ன காரணமோ தெரியவில்லை. துக்கத்திற்கும் வியாதிக்கும் கடவுளளித்த மருந்தாகிய நித்திரை

எனக்கு இன்றிரவு சிறிதும் வராமல் என்னை உபத்ரவப்படுத்துகின்றது. கண்ணை மூடினால் ஏதோ பயமாக இருக்கின்றது. பசியொருபக்கமும் நித்திரையின்மை யொருபக்கமும் மனத்தளர்ச்சி யொருபக்கமும் என்னை வருத்துகின்றன. எனக்கென்ன ஸம்பவிக்கப்போகின்றதோ தெரியவில்லை. இந்த மனிதஜென்ம மெடுப்பதைப்போல் நிஷ்ப்ரயோஜனமானது வேறெதுவுங் கிடையாது!

புல்லாய்ப் பிறந்தாலும் மிருகாதி ஜனங்கள்
பசியாறி மகிழுமன்றோ
பூண்டாய்ப் பிறந்தாலும் புலத்தியர்கள்
பிணிதீர்த்துப் புகழ்வாரன்றோ
கல்லாய்ப் பிறந்தாலும் நல்லவர்கள் மிதிகொண்டு
காட்சிக் குறுத்துமன்றோ
கழுதையுரு வந்தாலும் ஆவெனக் கத்தினால்
கைகண்ட சகுனமென்பார்
எல்லா மிலாமலே யிப்பிறவி தந்தெனை
யேங்க விட்டகலகின்றாய்.
எத்தனை யன்னையின் மெத்தனை தந்தையின்
மெத்தனை பிறவி வருமோ
அல்லலெனு மாசறுத் தாட்கொளுந் தெய்வமே
அப்பனே யிர்த நகர்வாழ்
அதிபதி சனகாதி துதிபதி சிவகாமி
அன்பிலுறை நடனபதியே

சத். ப்ரபு! மகாதீரனாகிய தாங்கள் இப்படி அதைரியப்படலாகுமோ? துக்கம் வந்த காலத்திலெல்லாம் எங்களுக்கு மனோதைரியம் சொல்லிவந்த தாங்களே இப்படியானால் அல்பர்களாகிய நாங்கள் என்னசெய்வோம்! விதியை வெல்ல யாராலாகும்? ஆதிமூலப்பொருள் சர்ப்பத்தை பாலையாக தரிக்கவும், அழகுள்ள மாதவன் பன்றியுருவெடுத்து பூமியைத் தாங்கவும், பிரஹ்மன் சிரசை பலிகொடுக்கவும், நீதி

வழுகாக்காலன் நிலத்திலுருளவும், குமாரன் மாமாக நிற்கவும், உலகில் நேர்ந்ததென்றால் இவ்வளவு காலம் பொறுமையுடனிருந்த தாம் இப்பொழுது இப்படி ப்ரலாபிப்பது சரியன்று. (நக்ஷத்ரேசர் பின்புறமாக வருகிறார்).

நக்ஷ. ஹரிச்சந்திரா!

ஹரி. (திடுக்கிட்டு) யார்? ஸ்வாமின்! இந்த வேளையில் இந்த இடத்தில் தங்களைப் பார்க்க மிகவும் ஆச்சர்யப்படுகின்றேன்!

நக்ஷ. உன்னைப்போன்ற கடினசித்தமுடையவர்களுக்கு இது ஆச்சர்யமாகத்தான் இருக்கும். ஆனால் என்னைப் போன்ற கோழை நெஞ்சமுடையவர்களுக்கு இது ஆச்சர்யமாகத் தோன்றாது.

ஹரி ப்ராஹ்மணோத்தமா! தாங்கள் சொல்வதொன்றும் எனக்குத் தெரியவில்லை. புத்தியின்மையால் ஏதாவது குற்றம் புரிந்தேனோ என்ன?

நக்ஷ. உன்னிடத்திலிருந்து பொன்னைப் பெற்றுத் திரும்பியதும் விச்வாமித்ரரை இந்நகருக்கடுத்த வனத்திலேயே கண்டேன். பொன்னையும் அவரிடம் சேர்த்துவிட்டேன். அவர் என்னிடம் என்ன சொன்னாரென்பது உனக்குத் தெரியுமாகில நீ இந்த நிலைமையில் இத்தருணத்தில் இங்கிருக்க மாட்டாய் என்பதை நம்பி 'ஐயோ பாவம்' என்று உன்மீது மனமிரங்கி ஓடிவந்தேன். சேரியில் உன்னைக் காணாததால் உன்னிருப்பிடத்தை விசாரித்து இங்கு வந்தேன்.

ஹரி. அவர் என்ன தெரிவித்தார்? ஒப்பந்தப்படி நான் கொடுக்கவேண்டியதையெல்லாம் கொடுத்துவிட்டேனென்றே நம்புகின்றேன்.

நக்ஷ. அந்த விஷயத்தில் அவர் மிகவும் ஸந்தோஷப்பட்டார். ஆனால் குடிகள் அவர்மீது கோபங்கொண்டிருக்

கின்றூர்களாம். அவருக்குப் பிரதிதினம் கிடைக்கும் அவமரியாதை இவ்வளவுதானென்று சொல்லமுடியாதாம். ஒவ்வொரு சிற்றரசரையும் முனிவன்மீது படையெடுத்துவந்து தங்களுடைய உதவிபெற்று விச்வாமித்ரனை வனத்திற்குத் துரத்தும்படி வேண்டிக்கொள்கின்றூர்களாம்.

ஹரி. இதை கேட்க எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கின்றது. சத்யகீர்த்தி! நீதான் என்னை இத்தருணம் காப்பாற்றவேண்டும். சூர்யகுலத் தரசர்களுக் கொருகாலத்தில் பாத்யப்பட்டிருந்த அயோத்திக்குச் சென்று ஜனங்கள் கோபத்தையடக்கி தவச்ரேஷ்டர் மனதுக்கு யாதொரு குறையுமின்றி பார்த்துக்கொள்ளவேண்டும்.

நக்ஷ. அடா ஹரிச்சந்திரா! உன்னைப்போன்ற இவ்வளவு கன்மனத்தோடுகூடிய பாதகன் உலகில் வேறொருவன் இருக்கமாட்டான். நான் சொல்லியவை உனக்கு வ்யசனத்தைத் தரக்கூடியதென்று எண்ணுகின்றூய்? நான் சொல்வதைக் கேள். இதுதான் சரியான தருணம். உனக்கு நேரில் போக இஷ்டமில்லாதிருந்தால் சத்யகீர்த்தியை அனுப்பி குடிகளின் உதவியைப்பெற்று முனிவனைத் துரத்தி உன்னையும் உன் பெண்டுபிள்ளைகளையும் மீட்டுக்கொள்ளச்சொல். அதன் பிறகு நீ உன்னுடைய புராதன பதவியையும் அடையலாம்.

ஹரி. சொல்லவேண்டியவைகளையெல்லாம் சொல்லி முடித்துவிட்டீர்களல்லவா?

நக்ஷ. எல்லாம் உனது நன்மைக்காகத்தானென்று நம்புவாய்.

ஹரி. சிவபெருமான் செய்வதெல்லாம் ஜனங்களின் நன்மைக்காகத்தான் என்று பெரியோர்கள் சொல்லுகின்றூர்கள். எனக்கு உத்திரவு அளியுங்கள். நான் மயானத்தைச் சுற்றிவரவேண்டும்.

நக்ஷ. நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன், அதன்பேரில் உன்னிஷ்டம். (ஹரிச்சந்திரனும் சத்யகீர்த்தியும் போகின்றார்கள்). ஹரிச்சந்திரனென்றால் மறுமுறை சத்யவானென்று சொல்லவேண்டியது அனுவச்யம். (விச்வாமித்ரான் வருகின்றார்).

விச். ஐயோ பாவம்! அக்குழந்தையை வைத்துக்கொண்டு எவ்வளவு கதறுகின்றாள் தெரியுமா?

பாவியேன் மகனேயென்பள் பதைப்பண்மென் முகத்தில் மோதித்
தாவியே விழுவணின்று தயங்கியே மயங்கிவீழ்வள்
காவியங் கண்ணீர் பாயக் கதறுவள் பதறியேங்கி
ஆவியைத் தேடித்தேடி யலமரு முடலமொத்தாள்.

ஓடினளுள்ள மெல்லா முருகினள் கருகிமேனி
வாடினள் விறகுவைத்த வடத்தினுக் கருகேவந்தாள்
நாடினள் கழுகும்பேயு நரிகளுங் குழுளுந்துன்றிக்
கூடிய குழுவினுப்பண் குமாரனைச் சென்றுகண்டாள்.
கண்டனள் கதறிவீழ்ந்தாள் கழுகெலா மிரியல்போகக்
கொண்டதோர் மகவினுடைய யாவியைக் கொல்லைகொள்ள
முண்டகக் காத்தாலேந்தி முருகனை மடிமேல்வைத்தே
அண்டரு மறுகியேய்க வாய்திறந்தரற்றலுற்றாள்.

நக்ஷ. முனிபுங்கவ! இதனுடனாவது இந்நாடகத்தை முடிக்கலாகாதா? தாங்கள் நல்ல எண்ணத்துடன் செய்த போதிலும் தங்களால், என் பாவம், அவன் வாஸ்தவமான இக்கஷ்டங்களையெல்லாம் அனுபவிக்கவேண்டும்.

விச். சுக்ரா! சீக்கிரத்திலேயே முடித்துவிடுகின்றேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்திருக்கின்றேன். நீ சன்யாசி வேடம் தரித்து அவள் குழந்தையையெடுத்து இங்கு வந்ததும் ஒரு காரியம் செய்யவேண்டும்.

நக்ஷ. சொல்லியதையெல்லாம் செய்யக் காத்திருக்கின்றேன்.

விச். அதோ அவள் வருகின்றாள். நாம் போவோம் வா. (இருவரும் போகின்றார்கள். சந்திரமதி தேவதாஸனைத் தோளில் வைத்துக்கொண்டு வருகின்றாள்).

சந்.

கண்ணி—கேதாரம்—ரூபகம்.

வாரேனிதோ வாரேனிதோ வாரேனிதோ
வாரேனிதோ வாரேனிதோ சுடலை
தேறேன் தயராறேனப்பா
காரே னுன்னைப் பாரேனினி —வாரே.
என்னைச் சுட உன்னைப் பெற்றேன்
உன்னைச் சுட அன்னையும் நான் —வாரே.

(மகனைப் படுக்கவைக்கின்றாள்). ஐயோ! சப்ரமஞ்சத்தில் படுக்கவேண்டிய நீ தரையில் படுக்கவும், அதை இப்பாவி பார்க்கவும், அப்படியிருந்தும் இப்பாவியின் உயிர் இவ்வுடலில் இருக்கவும் என்ன பாதகம் செய்தேன்! (எழுந்திருக்கின்றாள்). என் செல்வமே! நீயும் நானும் வாழ்ந்த வாழ்வுக்கு இப்படி உன் ப்ரேதத்தைச் சுட நான் மற்றவர்களை எரித்து அணைந்து கிடக்கும் கட்டை முட்டைகளைப் பொறுக்கவேண்டியிருக்கின்றதடா! (பொறுக்கி யெடுத்து வைக்கின்றாள்). இதன் மீது உன்னை படுக்கவைக்க என் மனம் துணியவில்லையே! ஐயோ! ஐயோ! ஐயோ! தேவதாஸா! நான்

கண்ணிகள்—நீலாம்புரி—ரூபகம்.

மாதோஷி யென்றனைவிட்டு நீ மடிந்தாயோடா மகனே இந்த
மண்ணின்மீது பதியையவ மதித்தேனேடா மகனே நீ
நீதோ கர்தனைவிட்டிந்த திசைக்கேவா மகனே மனம்
தேங்க நரிவுளர செஞ்சம் இடிக்கிடவே மகனே ஐயோ.

வசனம்

கண்ணே! எவ்வளவு வருத்தம் வந்தபோதிலும் உன்னுடைய குயில்போன்ற குரலால் அம்மா என்று அழைப்பாயா

லில் என் வ்யசனங்களெல்லாம் பறந்தோடிவிடுமே. எனக்கு கஷ்டங்கள் வருங்காலத்தில்

கண்ணி

அம்மாவென்று யினிமேலென்னை யழைப்பவரார் மகனே இந்த
அவனிதனிலெனைப்போற் பாவி யார்தானுண்டு மகனே நீ
பெம்மான் மகழ்பெருகும் கடை! பெற்றிருந்தாய் மகனே உன்மேல்
பிரமனுசை வைத்தேவுயிர் பிடிக்கிறேனே மகனே நான்—மாதோ

வசனம்

தவம்செய்து பெற்ற மகனே! தாய் அடிமை புகுந்தாள். தந்தையினிருப்பிடம் தெரியவில்லை. ஆகையால்

கண்ணி

இனிமேற் சுகமடையோமென்று யெண்ணி நீ தான் மகனே அந்த
யிருண்ட வனந்தனிலே வந்து இறந்தாயோடா மகனே உன்
கனிவாயையுங் கிளிமொழியுங் காண்பதெப்போ மகனே என்றன்
காயமனல் மெழுகாகவே கரையுதிப்போ மகனே நான்—மாதோ.

நேரமாகிவிடுகின்றது. உன்னை தகனம் செய்துவிட்டு சீக்கிரம் திரும்பாவிட்டால் ப்ராஹமணோத்தமர் கோபம் கொள்வார். மகனே! உன்னைப் படுக்கவைத்து நான் தாலாட்டிய நாள்களெல்லாம் போயிற்று. இதுதான் கடைசி முறை நான் உன்னை படுக்கவைக்கின்றேன். (காஷ்டத்தில் வைக்கின்ருள்). இந்நித்திரையிலிருந்து எப்பொழுதடா கண்ணே! நீ எழுந்திருப்பது?

தாலாட்டு—நீலாம்புரி

கங்கைபுனைநாதன் கருணையினுலென்வயிற்றில்
மங்களமாய் வந்துதித்த மணியே நீ கண்வளராய்.

(மயங்கி விழுகின்ருள். ஒரு சன்யாசி வந்து ஜலத்தைப் ப்ரோக்ஷிக்க எழுந்திருக்கின்ருள்.)

சந். ஐயோ! ஐயோ!

சன்யர்சி பெண்ணே!

சந். (திடுக்கிட்டு) ஸ்வாமின்!

சன். மாதே! ஏன் இப்படி கதறிக்கொண்டிருக்கின்ருய்? இச்சிறுவன் யார்? நீ யார்?

சந். அடிகாள்! காலகண்டரெனும் வேதியருக்கு அடிமைப்பெண் நான். இச்சிறுவன் என் மகன்.

சன். ஹரிச்சந்திரன் மனைவி சந்திரமதியா நீ? தேவதாஸனு இவன்?

சந். ஆம்.

சன். எப்படி இறந்தானிவன்?

சந். கானகத்தில் அரவந்தீண்டி இறந்தான்.

சன். பெண்ணே! இறந்தவன் திரும்பவும் வரப்போகின்றதில்லையாகையால் வீணுய் என் அழுகின்ருய்? கஷ்டப்பட்டுக்கொண்டு உயிருடன் இருப்பதைவிட இறத்தல் நலமல்லவா?

சந். இவன் உயிருடன் இருக்கின்ருன் என்ற ஒரு எண்ணமே இவ்வளவு காலமாக என் மனதைத் தேற்றிவந்தது.

சன். அவன் உயிருடன் இருக்கின்ருன் என்ற திருப்தி ஒன்று போதுமா உனக்கு?

சந். அவ்வளவு அதிர்ஷ்டம் எனக்கிருந்தால் போதுமே.

சன். நான் இக்குழந்தையை உயிருடன் எழுப்பினுல் நான் சொல்கிறபடி செய்வாயா?

சந். ந்பாயத்திற்கு விரோதமில்லாத எதைச் சொன்னபோதிலும் செய்கின்றேன்.

சன். இவனுக்கு நான் உயிர் கொடுத்தால் இவனை என் சிஷ்யனுக என்னுடன் அனுப்பிவிடுகின்ருயா?

சங். அப்படிச்செய்ய எனக்கு அதிகாரமில்லையே! வேறொருவருக்கு அடிமைப்பட்டிருக்கும் இவனை தங்களுடன் நானெப்படி அனுப்புவேன்?

சன். அவன் இறந்ததும் அடிமை யென்பதும் முடிவாகின்றதல்லவா?

சங். இவ்வுடலில் உயிருள்ளளவும் அடிமையல்லவா?

சன். அப்படியிருந்தபோதிலும் மறுமுறை இவனுக்கு உயிர்வந்ததென்பது அவருக்கெப்படித் தெரியும்?

சங். அவருக்குத் தெரியாவிட்டாலும் பரமேச்வரன் அறிவானல்லவா! அதுவுமன்றி மகனை தகனம் செய்துவிட்டாயா யென்று கேட்டால் நான் என்ன சொல்வேன்?

சன். சரி உன்னிஷ்டம் (போகத் திரும்புகின்றார்).

சங். முனிச்ரேஷ்ட! இப்பாவியின்மீது மனமிரங்கலாகாதா?

சன். யாரோ பரமசிவன் இருக்கின்றான் என்றாயே அவன்தான் வரவேண்டும் இவனுக்கு உயிரைக் கொடுக்க (போகின்றார்).

சங். தேவதாஸா! தேவதாஸா! வாய்க்கரிசியிட வேண்டுமென்பார்களே. அரிசிக்கு நான் எங்கடா போவேன். (மணலை எடுத்துக்கொண்டு) இம்மண்ணைத்தான் அரிசிக்குப் பதிலாகப் போடவேண்டும். ஐய்யோ! ஐய்யோ! நீ யெனக்கு வாயக்கரிசி போடுவதல்லவா ந்யாயம். பெற்றவயிறு பொறுக்கவில்லையே. கண்ணே! உன் வாயில் மண்ணைப்போடவோ நான் உன்னை மகனாய்ப் பெற்றேன். (போடுகின்றாள்) ப்ராணநாதா! பாவி நான் அழுங்குரல் தங்கள் செவிக்கேறவில்லையோ! தகனம்செய்ய அக்னிக்கு என்னசெய்வேன்! (எழுந்திருந்து நாலுபக்கமும்போய் பாதியெறிந்த ஒரு விறகை எடுத்

துவருகிறாள்). கண்ணே உன் உடம்பில் நெருப்புப்பட்டால் சுடுமோடா! வெயிலில் நடக்கமுடியவில்லை யென்று சொல்லிய வாயால் நெருப்பைப் பொருக்கமாட்டேனம்மா என்று சொல்லக்கூடாதா நீ (தீயை மூட்டுகின்றாள்).

கண்ணிகள்

புண்ணியவரசே எண்ணியுமது பதம்
நண்ணிய விதியாலென் கண்மணிச்சுட
ஓடிவருவீர் பிராணநாதா
உத்தமாவுமக்கு நான் பத்தியாய் நடந்ததே
சத்தியமாகினில் இத்திசைக்கு வருவீர்.

ஹரி. (உள்ளேயிருந்து) 'யாரங்கே' காவலிருக்கும் என்னை மீறி திருட்டுத்தனமாக சவத்தைக் கொளுத்துவது யார்? என்று சொல்லுகின்றான். சந்திரமதி திடுக்கிட்டு நான்கு புறமும் பார்க்கின்றாள். ஹரிச்சந்திரன் வருகின்றான்

ஹரி. ஹா ஹா! நான் காவலிருக்க என் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமலும் எனக்குக் கொடுக்கவேண்டியவைகளைக் கொடுக்காமலும் அர்த்தராத்திரியில் கள்ளனைப்போல சவத்தைச் சுடும்.

காம்போதி—ஆதி

பல்லவி

ஆரடி யுன்பேரூர் சொல்லடி மிக
ஆச்சரியத்துடனிங்கு கூச்சலிட்டழுங் கள்ளி —ஆ.

அநுபல்லவி

பாரடி யெனைத் திரும்பிக் கூறடி பதிலுத்தரம்
பாவி யெந்தன் காவலுக்குள் மேவி யிங்கு வந்த நீலி —ஆ.

சந்.

பல்லவி

நீதி தவறி பேசாதே ஐயோ
நீசனுக்கித் பேச்சா யெனையிப்படி —நீ.

அநுபல்லவி

சாதி பேதமன்றி நீயுஞ் சேதி சொல்வதுமழகோ
தாழ்ந்திடினுயர் குலத்தைச் சேர்ந்தவளே ஐயோ —நீ.

ஹரி.

சரணம்

னனுரியே யிக்காரிருள் ஓரியைப்போல் வந்தாய் கெட்ட
பேயே வுந்தன் கையி லிதை சேயனேதடி
சிதறின வெகு சாமர்த்தகாரி என்று புகழ்ந்தேன்
சீ சீ யப்பாலெழுந்து போபோ என் முன்னில்லாதே —ஆ.

சந்.

சரணம்

மெய்தவறவே புலையன் வைகுரூனே ஐயோ என்ன
வேதனை காசியில்வாழ்ஞ் சோதிநாதனே
வைகத்திலுள்ள பெரி யோர்களை மதியாமலே
வைதேனே மனம்பதரச் செய்தேனே கொடிய பாவி—நீ

ஹரி. உயர்குலத்தில் வந்தவளைப்போல் அதிகாரத்துடன் பேசி ஏமாற்றிவிடலாமென்று நினைக்காதே. காவலை மீறி வந்ததுமன்றி இவ்விதமும் பேசுகின்றாயா.

சந். இங்கு காவலுண்டென்பதை இதுவரையில் வாஸ்தவமாக அறியமாட்டேன்.

ஹரி. செய்த வேலைக்கு பொய்யுமாவேண்டும். சரி இப்பொழுதாவது தெரிந்துகொண்டாயல்லவா? வீரவாகுக்குச் சேரவேண்டிய பணம் துண்டு அரிசி இவைகளைக் கொடுத்துவிட்டு அப்புரமிச்சிறுவனைத் தகனம் செய்.

சந். ஐயா! நான் பரம ஏழை. என்னிடம் வாஸ்தவத்தில் ஒன்றும் கிடையாது; என்னை மன்னிக்கவேண்டும்.

ஹரி. உனக்கு வேண்டியவர்கள் யாராவது மிருந்தால் அவர்களைக் கேட்டு வாங்கிக்கொண்டுவா. இல்லாவிட்டால் மயானத்தில் ப்ரேதத்தை தகனம் செய்யலாகாது.

சங். எனக்கு உற்றார் உறவினர் ஒருவரும் இத்தருணத்தில் உதவிபுரியக்கூடிய நிலைமையில் கிடையாது. தாங்கள் தாம் எனக்கு தெய்வம். எப்படியாவது என்னை மன்னிக்க வேண்டும்.

ஹரி. நான் கேட்டவைகளில் என் பங்குக்கு வரவேண்டிய அரிசியை வேண்டுமென்றால் நான் கேட்கவில்லை. மற்ற இரண்டையும் வாங்கிவந்தாலன்றி முடியாது.

சங். எனக்கு உதவிபுரிய யாராவது இருப்பார்களாகில் நான் தனியாக இவ்விருளில் என் மகனைத் தோளில் வைத்து, இப்படி வந்து இதோ பாரும், மெய்க்கரிசியில்லாமல் மணலைப் போட்டு தகனம் செய்வேனா? தங்கள் மனதில் கொஞ்சமேனும் இரக்கமென்பது இல்லையா?

ஹரி. இரக்கமும் உத்யோக முறைமையும் விரோதிக்கும் தருணங்களில் என்னிடத்தில் இரக்கமென்பதே கிடையாது.

சங். ஐயோ! தங்களுக்கு மகனில்லையா? மனைவியில்லையா? தங்கள் மனைவியையும் மகனையும் இந்த ஸ்திதியில் பார்த்தால்கூடவா இப்படி யிரக்கமில்லாமல் இருப்பீர்?

ஹரி. ஹா! பாதகி! இப்படியெல்லாப் வார்த்தைசொல்லிக்கொண்டிருந்தால் சவம் தானே தகனமாகிவிடுமென்று வார்த்தைவளர்த்து வருகின்றாய்? எடு ப்ரேதத்தை. நீசொல்லியபடி என் மகன் இந்த ஸ்திதியிலிருந்தாலும் நான் வாங்கவேண்டியவைகளை வாங்காமல் தகனம்செய்ய அனுமதி கொடுக்க மாட்டேன். தேகத்தில் அக்னி படுவதற்குமுன் எடு அதை.

சங். காஷ்டத்தில் வைத்ததை மறுபடியும் எடுக்கலாகாதே. உங்களுக்கு எவ்வளவோ புண்ணியம் உண்டு தடுக்க வேண்டாம்.

ஹரி. அந்த தேகத்தில் அக்னி பட்டுவிட்டால் அந்த சவத்தின் தகனம் ஆரம்பித்துவிட்டதல்லவா? ஆகையால் கொடுக்கவேண்டியதைக் கொடுக்காவிட்டால் எடு அதை. என்ன எடுக்கின்றாயா இல்லையா?

சந். காஷ்டத்தில் வைத்த ப்ரேதத்தை எடுக்கமுடியாது.

ஹரி. சீ காதகி! (உதைத்து சவத்தை தள்ளி) எடுத்துச்செல்.

சந். ஹா! அடா சண்டாளா! என்னவேலை செய்தாயடா பறையா?

காப்பி—ஆதி

அடபாவா இந்த அவதியென்னடா சிவா

அங்கம் பதறவோடடி யட்டி காலாலுதைக்க —அட

ஐயோ! இதற்கு நான் என்னசெய்வேன்!

ஹரி. (ஆத்மகதமாய) ஹா! என்ன காலம் நேரிட்டது! ஒரு பெண் பேதை வாயால் சண்டாளனென்றும் பறையனென்றும் தோட்டி யென்றும் கேட்கலாயிற்று என் விதி! காசிநாதா! இப்படிக் கேட்க நான் என்ன பாவம் புரிந்தேன்! எவ்வளவோ புண்ணியத்தைச் செய்து சூர்ய வம்சத்தில் த்ரிசங்குவின் மகனாகப் பிறந்தேனேயன்றி

கண்ணிகள்

ஆதியிலும் பறையனல்ல ஜாதியிலும் பறையனல்ல

நீதியிலும் பறையனல்ல

பாதியிற் பறையனாகி படுகின்றேன் துயரம்

வசனம்

அநாதரக்ஷக! உலகில் உயர்ந்த வம்சமென்று வழங்கி வருகின்ற ஆதித்யன் மரபிற் பிறந்தேனேயன்றி

கண்ணி

—ஜாதியிலும் பறையனல்ல

வசனம்

த்விஜ குலத்தில் எல்லோரும் வணங்கும்படியாக அவ்வளவு உத்தம ஜன்மத்தை யெடுத்தேனேயன்றி

கண்ணி

—ஜாதியிலும் பறையனல்ல

வசனம்

நான் பிறந்த காலத்தில் என் ஜாதகத்தைக் கணித்து பலனைச் சொல்லியவர்கள் அனைவரும் என்னுடைய முன் ஜன்மமும் பின் ஜன்மமும் சூர்ய வம்சத்திலெடுத்த இந்த ஜன்மத்தையும்விட உத்க்ருஷ்டமானவைகளென்று சொல்லியதாகவே என் தாய் தந்தையர்கள் மூலமாக அறிந்தேனேயன்றி

கண்ணி

ஆதியிலும் பறையனல்ல ஜாதியிலும் பறையனல்ல

வசனம்

என்பிதா சாபத்தால் உருமாறினதால் நான் பறையனாகி விட்டேன் என்று சொல்வதற்கு ஒரு நீதியும் இருப்பதாகத் தெரியவில்லை. அரசனாக நான் உலகை ஆண்டகாலத்தில் நீதி தவறி ஒரு காரியமும் செய்ததில்லையே! இப்படியெல்லாம் இருக்க நான்

கண்ணி

—நீதியிலும் பறையனல்ல

வசனம்

இவ்வளவிருந்தும் நிஷ்ப்ரயோஜனமாகப் போயிற்றல்லவா! எல்லோர்க்கும் நன்மையையே விளக்கும் முனிபுங்கவனுடைய ஆசீர்வாதத்தால்

கண்ணி

பாதியிற் பறையனாகி படுகின்றேன் துயரம்

வசனம்

இவ்வாறு வார்த்தையைக் கேட்டு அவஸ்தையைப்பட நான் ஒரு பாவத்தையும் செய்யவில்லையே! எவ்வளவோ தானங்களைச் செய்தேன். கடவுளை யெக்காலத்திலும் மறந்ததில்லை. பெரியோர்களைப் பணியாமல் ஒரு தினத்தையும் கழித்ததில்லை. கங்கா நதியில் ஸ்நானம் செய்தால் செய்த பாவங்களெல்லாம் பறந்தோடிவிடுமென்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆனல் என் விஷயத்தில் செய்த புண்ணியங்கள்தான் பறந்தோடிப்போயின. காசி நாதா! உன் பாதத்தைப் பணிந்தவனுக்குமா சண்டாளனென்ற வார்த்தையைக் கேட்க விதி! ஆனல் மற்றவர்களைச் சொல்லி என்ன பலன். நான் விஸ்தவமாய் சண்டாளன்தான், என்னை விட பாதகன் இவ்வுலகில் ஒருவனும் இல்லை. என்னையே தெய்வமென்று நம்பியிருந்த குடிகளைக் கைவிட்டேனல்லவா! முனிவன் கடனை உடனே செலுத்தாமல் தவனைக் கேட்டேனல்லவா! அன்னுகாரமின்றி ஒரு த்விஜோத்தமனை வழியெல்லாம் நடத்தி அழைத்துவந்தேனல்லவா! பாவினுன் என்பதில் ஒரு ஸந்தேகமும் இல்லை. பதிவ்ருதாசிரோமணியாகிய

கண்ணி

பத்தினியை விற்ற பாவி

வசனம்

இதனுடன் என் பாவச்செய்கைகள் நிற்கவில்லையே.

கண்ணி

பத்தினியை விற்ற பாவி பாலகனை விற்ற பாவி

வசனம்

இஜ்ஜன்மத்தை யெடுத்து இப்பாவி செய்த அக்ருத்யங்கள் இவைகளுடன் நின்றிருந்தாலும் ஒருவேளை கடவுள் என் மீது க்ருபைகூர்ந்திருக்கலாம். ஐயோ! மனித ஜென்மமெடுத்த எவனும் இதுவரை செய்யத்துணியாத மாபாவத்தை

நான் செய்திருக்கின்றேனே! மகாவிஷ்ணுவும் கபடமாக வரம் வாங்கினர்! சதுர்முகனும் கபட எண்ணத்துடன் கேட்ட வரத்தையெல்லாம் கொடுப்பவர்போல் சாகாதிருக்க வரத்தை அளிக்கும் தருணத்திலேயே இறக்கும் தருணத்தைக் குறித்திருக்கின்றார், சிவபெருமானும் தவம் செய்பவர்போல் நடித்து அசுரனை யேமாற்றி பார்வதியை மணந்து அரக்கரை யழிக்க அரும்புதல்வனைப் பெற்றார்! நானே சண்டாளன்! இதுவரையில் தெய்வங்களும் செய்யத்துணியாத

கண்ணி

ஸத்தியத்தை காத்த பாவி

வசனம்

ஆம்! என்னைப்போன்ற சண்டாளன் உலகில் ஒருவரும் இல்லை.

கண்ணி

பத்தினியை விற்ற பாவி பாலகனை விற்ற பாவி
ஸத்தியத்தைக் காத்த பாவி
இத்தரணியில் நான் மெத்தவும் அரும்பாவி

ஈச்வரா! ஈச்வரா! பெண்ணே! இன்னுமா இந்த இடத்தில் உட்கார்ந்திருக்கின்றாய்!

சந். ஐயோ! அனாதை ப்ரேதத்தைத் தகனம் செய்தால் ஏராளமான புண்யம் உண்டென்கிறார்கள். கதியற்ற எனக்கு உத்திரவு கொடுத்தால் அந்த புண்யம் தங்களுக்கும் உண்டு.

ஹரி.

கெதியில்லை சுற்றமில்லை கிட்டிட வகையுமில்லை
பதியில்லையென்று மிங்கே பணிந்துமேயுரைத்த கோதே
மதிதனிலுணர்ந்தேனுன்னை மகா ஜாலி நீலியென்றே.
சதிவிடு தாலிதன்னை சாங்கமாய் விற்றுத் தாராய்.

சந். ஐயோ! ஐயோ! பரமேச்வா! இது யென்ன காலம்! தெய்வங்கள் வாக்குத்தான் பொய்த்ததோ! அல்லது மகனிறந்ததால் என் கற்பும் போய்விடுமோ.

கண்ணிகள்—சாமா—சாப்பு

என்ன கால மிந்தகால எனக்கு வந்ததிக்கோலம் ஐயோ
அன்னமே காசியில் வாழும் ஆதியே ஓ விசாலாக்ஷியே —என்.
தேவர் முனிவர் சித்தர் தேடி னுங் கண்ணிற் காணு
ஓவியமுற்ற வென்ருலி ஒகோ தோட்டி கரண ஆக்ஷி —என்.

ஹரி. தாவியைக் கண்டேனென்று மிகவும் தவிக்கின்ருய். பாலனுக்காக மிகவும் பதறுகின்ருய். நீயார்? காவலிங்கிருப்பது தெரியாதென்ருய். நீ யெந்த ஊர்?

சந்.

ஆரெனவேன்னை அன்புடன் கேட்ட
வீரவாகுவே நான் விளம்புவேனையா
கன்னமாபுரியைக் காத்திடுமரசன்
நன்னருந் தவத்தால் நானுதித்தேனே.

ஹரி. என்ன சொன்னுய்? என்ன சொன்னுய்?

சந்.

கன்னமாபுரியைக் காத்திடுமரசன்
நன்னருந் தவத்தால் நானுதித்தானே.

(சத்தியகீர்த்தி வருகின்ருன்)

சத்தியகீர்த்தி! இதென்ன ஆச்சர்யம்? தாங்களெங்கே வந்தீர்? தங்களுடைய அரசனெங்கே? உயிரற்று தேவதாஸன் உடல் புலையன் காலாலுதைப்பட்டு உருளுகின்றதே

ஹரி. ஹா! (மயக்கமாக விழுகின்ருன்).

சத். (ஹரிச்சந்திரனைத் தாங்கிகொண்டு) ஹா! என்ன கஷ்டம்! என்ன கஷ்டம்! அம்மணி இவர் தாம் தங்கள் பர்த்தாவாகிய ஹரிச்சந்திரன். நீங்கள் ஒருவரையொருவர் இன்

னென்று இதுவரையில் அறிந்துகொள்ளவில்லைபோல் காண்கின்றது. அது ஸகஜமே! ஏனென்றால் முனியின் சூதால் உங்கள் முகக்காந்தியும் குரலும் எவ்வளவோ மாறியிருக்கின்றன. (ஹரிச்சந்திரனை கீழேவிட்டு உள்ளேபோகின்றான்).

சந். ப்ராணநாதா! ப்ராணநாதா! இப்பாவியை கண்விழித்துப் பாருங்கள். (சத்யகீர்த்தி ஜலம் கொண்டுவந்து முகத்தில் தெளிக்க ஹரிச்சந்திரன் விழித்துக்கொள்கின்றான்).

ஹரி. ஹா! என் கண்ணே! தேவதாஸனும் நம்மைக் கைவிட்டு விட்டானா! அடா என் செல்வமே! உன்னை உதைத்துத் தள்ளிய இக்கால் புழுத்தல்லவோ போகும்.

சந். ப்ராணநாதா! தங்களுக்கெப்படி இக்கோலம் வாய்த்தது?

ஹரி. தாரகர் தனக்குக் கூலி கேட்க அதை கொடுக்கும்பொருட்டு நான் வீரவாகுக்கு அடிமை புகுந்தேன்.

கண்ணிகள்—ஆகிரி—ரூபகம்

அரசர்களெலாமொரு அதிபதியாயிருந்த மன்னவா—உமது
உரமு மழகுங்குன்ற உகந்தெழுகின்றனோதான் மன்னவா.
சிரசில் மணிமுடி சிறுடன் தாங்கியிருந்த மன்னவா—இந்த
பரக்கநதை தன்னையே பணிந்தே யுடுத்தலாச்சோ மன்னவா.
முத்துவடம் மாலை மோகனமணியுந்தோள் மன்னவா—இந்த
பொத்தல்கம்பளந்தாங்க பொறுத்தீரா மனந்தான் மன்னவா.
அவனி மகிழ செங்கோல் அணிந்திட்ட வுமது கை மன்னவா—ஒரு
கவனியா வெட்டியன் கைக்கோலேந்தவுமாச்சோ மன்னவா. [வ
விலைமதியா மடியும் வெண்பட்டுடுத்து மரை மன்னவா—என்ன
தலைவிதியோ விந்தத் தட்டி பூணலானீர் மன்னவா.
தேசத்தரசரேவல் திகழாய்ச் செயவிருந்த மன்னவா—நீர்
நேசமாய் முறிபட்டு நீசனுக்காளாய் நின்றீர் மன்னவா.

ஐயோ! இப்பாதகியைக் கைப்பிடித்ததால் கஷ்டத்தின் மீது கஷ்டத்தை அடைகின்றீரேயன்றி சுகம் தங்களுக்குச் சிறிதுமில்லை. புருஷர் சுகம் பெண்டால் என்பார்கள். தங்கள் வரையில் மனைவியின் பாவம் மணாளனுக்கென்பது வாஸ்தவமாக முடிந்தது என்னால் தாங்கள் அவதிப்படுகின்றீர்கள்.

ஹரி. சந்திரமதி! உன்னால் ஒன்றுமில்லை எல்லாம் ஈசன் செயல்.

சந். ஐயோ! பர்த்தாவைப் புலையனென்றும் சண்டாளனென்றும் சொல்லிய நாக்கு இன்னும் அழுகிப் புழுத்து விழவில்லையே! இனி யென்னை பர்த்தாவை வைத மாபாவி யென்றல்லவா உலகோர் நிந்திப்பார்கள்!

ஹரி. அறியாது செய்ததால் ஒரு பாபமும் இல்லை. தேவதாசன் எப்படி யிறந்தான்? அவன் இறந்தும் நாம் உயிருடன் இருக்கின்றோமே!

சந். தர்ப்பை கொய்துவர வேதியர் கானகத்திற்கனுப்பினர். சென்ற விடத்தில் அறவந்தீண்டி யிறந்தான்.

சத். ஹா! ஈசா! ஈசா! புண்ணியம் செய்தவர்கள் அனுபவிக்கவேண்டியது என்னென்ன என்பதை உலகோர்க்கு அறிவிப்பதற்காகவா இவர்களை இப்படியெல்லாம் படுத்துகின்றாய்.

ஹரி.

சங்கராபரணம்—ஆதி.

பல்லவி

என்ன செய்வேனினி எதுபுரிவே னான்தான்
எனக்கு வந்த கெதிக்கே சிவமே.

அநுபல்லவி

அன்னவாகனமேறு மயனு மிவ்வாறெழுத
அனைத்தமதி யெதுவோ இணைத்த பழி யிதுவோ—என்.

சரணங்கள்

முன்னாளில் என்ன மூர்க்கங்கள் புரிந்தேனோ
முனிவர்கள் மனம்நோக முறைகளிசைத்தேனோ
இன்னாளிலெனக்கு ஈன்ற மகனுஞ் சாக
ஈசா யின்பரைக்காக்கும் நேசா விசுவேசா நோக்கும்—என்.

உன்னை யனுதின மோதிப் பணிந்த பாலன்
ஓகோ யிதோ கண்டே னுறங்கிட வென்சிலன்
என்னை யடிக்கடிக்கி யிப்படி சோதிப்பது
ஏதோ வுந்தனுட சூதோ யிவ்வகைசெட —என்.

சங். நோயுடன் படுத்திருந்து என் கைகளால் அவனுக்குச் செய்யவேண்டியவைகளை செய்ய நான் அதிர்ஷ்டம் செய்யவில்லையே நாதா!

ஹரி. ஐயோ மைந்தா! நான்தான் படுபாவி உன்னை விற்றுவிட்டேன். உன்னுடன் கூடயிருந்தவளும் உன்னைப் பத்துமாதம் சுமந்தவளுமாகிய

பியாக்—ரூபகம்

தாயைவிட்டு வந்து காட்டில் தனியாய் மாண்டாயோ—அன்னை
தன்னை வேண்டாயோ.

வாயைமூடி யிருப்பதென்மேல் வஞ்சமோ பாலா—உன்னை
வணங்க முறிசெய்தேனென் மர்மமோ சிலா—என்றன்
கர்மமோ லோலா.

செங்கோலீயாத் தந்தையெனச் சித்தம் நொந்தாயோ—அப்பா
சிறுவயதில் விடுத்தேனெனச் சிறுமை தந்தாயோ—வருத்த
அருகே வந்தாயோ.

ஹரிச்சந்திரன் மகனாய்ப் பிறந்து எவ்வளவு கஷ்டப்பட்டாயடா? மகா பாவியாகிய உன் தந்தையின் கடனைத் தீர்ப்பதற்காக.

விலைப்பட்டாய் பட்டும் வெவ்வரவாய்ப்பட்டுத்
தொலைப்பட்டாய் யன்னை தோளிற் கொணர்ந்திட

தலைப்பட்டாய் தமியேனெறியத்தார்
தலைப்பட்டாயிதுவோ விதி யையனே.

காதலாலுனைக் காணுத தாயையும்
ஈதெலாம் வினைசெற்றிய வென்னையும்
மீதெலா மாவின் விடமேயநாள்
ஏதலா முறைத்தாயுரை யேந்தலே.

சந். நாதா! நேரமாகின்றது. பொழுதுவிடியுமுன் திரும்பவேண்டுமென்று வேதியர் உத்திரவு செய்திருக்கின்றார். ஆகையால் செய்யவேண்டியவைகளைச் சீக்கிரம் செய்யுங்கள்.

ஹரி. ஐயோ! மகனைத் தகனம்செய்யவும் சக்தியற்றவனுகயிருக்கின்றேனே! நீ உன் எஜமானிடம் சென்று எப்படியாவது பணமும் துண்டும் வாங்கிவா. அதை வாங்காமல் நான் தகனம்செய்தால் என் எஜமானன் மொழியைக் கடந்தவனுவேன்.

சந். காலகண்டரா கொடுப்பவர்?

ஹரி. என்ன செய்வது? உலகத்தையே தானமாகக் கொடுத்தவன் இதற்குபிச்சையெடுக்கவேண்டியிருக்கின்றது. எப்படியாவது மன்றாடிக் கேட்டு வாங்கிவா.

சந். அப்படியே போய்வருகின்றேன். மகனுக்காக தர்மத்தைக் கைவிடல் தகுதியன்று. (போகின்றாள்).

அங்கம் V—காக்ஷி I

காசியின் மயானம்.

ஹரிச்சந்திரன் தேவதாஸனை மடியில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கின்றான். சத்யகீர்த்தி அருகில் நிற்கின்றான்.

ஹரி.

கண்ணிகள்—சத்தசாமா—ஏகதாளம்

பரமனெனைச் சினந்து	பரித்தானுனையே பாலா
உன்னாலெனது குலம்	ஓங்குமென்றேனே கலம்

முறிசெய்த தந்தை முகம் சரியாமோ பார்க்க வசம்
மரியாதை யலவென்று மாண்டுபோனையோ பாலா.
கொள்ளி யெனக்கு வைக்க குமாரனிருந்தாய் தக்க
துள்ளிபாடும் நாளில துரை நீ மாண்டாயோ பாலா
அரசுக்குரிய நடை அழகும் படைத்தாய் விடை
இன்னெனெங்களை விட்டு இறந்துபோனையோ பாலா.

சத். ஸ்வாமி! நீரில் குமிழிபோன்ற இவ்வாழ்க்கையின் நிலைமையை நன்கறிந்த தாங்கள் இப்படியெல்லாம் துக்கப் படலாகாது. தாங்கள் எவ்வளவுகாலம் அழுதபோதிலும் இறந்த சிறுவன் எழுந்து வரப்போகின்றானோ? நமது துக்கத்தால் அபன் விதியை நாம் மாற்றப்போகின்றதில்லையாதை யால் சத்தியத்தைக் காப்பதொன்றுதான் நம்மால் செய்பக் கூடிய காரியம். (வீரவாகு சந்திரமதியைக் கோலால் தள்ளிக்கொண்டு வருகின்றான்).

சந். ஹா நாதா! (ஹரிச்சந்திரன் காலில் வீழ்கின்றாள்).

ஹரி. (தேவதாஸனை வைத்துவிட்டுப் பிரமித்து நிற்கின்றான்). ஸ்வாமின்! இவள் என்ன குற்றம் புரிந்தாள்?

வீ. என்னபண்ணேனு சொல்லு. சும்மா வீய்ந்து கடக்கறெயே.

சந். ப்ரபு! இனி யென்னலாவதொன்றுமில்லை. என் சிரனை வெட்டிவிடும்படி அரசன் ஆக்ஞையிட்டிருக்கின்றார். நான் சத்தியத்திற்கு விரோதமான காரியத்தை யொன்றையும் செய்யவில்லையென்பதை உறுதியாகக்கொண்டு என்னைச் சிரச் சேதம் செய்துவிடுங்கள். தங்கள் கையால் நான் இறக்க என்ன புண்ணியம் செய்திருக்கின்றேனோ தெரியவில்லை.

ஹரி. எதற்காக அரசன் இப்படிக் கட்டளையிட்டிருக் கின்றார்?

சந். இங்கிருந்து நான் வேதியரிடம் சென்று தண்டுங் காசுங் கேட்டேன். அவர் இல்லையென்று சொல்லிவிட்டார். நானும் காட்டிற்குத் திரும்பிவந்தேன். வருங்கால் ஒரு சிறுவனுடைய உயிரற்ற உடல் என் கண்ணில்பட— ஒருவேளை தேவதாஸன் சரீரந்தானோ என்று அதை யெடுத்தேன். உடனே காவலாளிகள் என்னை வந்து பிடித்து கட்டியிழுத்து அரசனிடம் சென்றார்கள். அவர் இவ்வாறு உபாயத்தை நிலைநிறுத்தினார்.

வீர. நா போய்வாரே இறைவா தலையை வெட்டட் டேறபா?

ஹரி. அப்படியே உத்தரவின்படி நடக்கின்றேன். (வீரவாகு போகின்றான்). ஐயோ! மகன் இறக்கவும் அவன் உடலை தகனம் செய்வதற்கு முன்னம் மனைவியை வெட்டவும் எனக்கு விதித்தானல்லவா? சத்தியகீர்த்தி! இந்த தர்ம ஸங்கடத்திற்கு என்ன செய்வது? இவளோ சத்யமே உருவெடுத்து வந்தவள். கட்டளையோ அரசனுடையது. இவளை வெட்டினால் குற்றம் செய்யாதவளென்று தெரிந்துகொன்றவனாகின்றேன். வெட்டாதுவிட்டால் எஜமானன் கட்டளையை மீறி நடந்தவனாவேன்.

சந். அரசே! இதைப்பற்றி சிந்திக்கவும் வேண்டுமோ? இதனால் நேரிடும் பாவம் அரசனைச் சேருமல்லாமல் தங்களைச் சேராது. தாங்கள் என்னை வெட்டி சத்தியத்தை நிலைநிறுத்துங்கள். எதற்காக யோசனை செய்கின்றீர்கள்?

ஹரி.

கண்ணிகள்—முகாரி—ஆதி.

ஐயோயிதென்ன காலம் அருங்கிளியே யுனை
அடித்துக் கட்டி வரவும் அயன் விதியோ.

சந்.

அரசே நீர் மனத்துயர் — அடையலாமோ—யீசன்
அன்றுவிட்ட வாறிதுவே — அகலப்போமோ.

ஹரி.

பாலனை யிங்கிருத்தியே — பார்ப்பானைத் தேடிப்போன
பாவையே யித்துயர்வா — பாவமேதடி.

சந்.

காசு தண்டிலை யெனக் — கடிந்துரைக்க—சுடு
காடு வரும்போது பாலன் — காலிற்றுக்க.

ஹரி.

இங்கிருக்கவு மகன் — யேதுக்கடி சவத்தை
எடுத்தாய் கையினலிந்த — யேச்சுக்கோடி.

சந்.

என் மகனென்றழக் கட்டி — யென்னை வேந்தே காசி
இறைவன் முன்விட வெட்ட — விட்டான் தேர்ந்தே.

ஹரி.

ஆனா யிந்தப் பழிசெய்தேன் — அரும்பாவி—என்
றய்யோ லோகத்தோரென — எசலானேன் தாவி.

சந்.

சத்தியம் நிலைநிறுத்த — சாமியே வெட்டி—எனை
சாயுச்சிய பதவியைக் — சாருங் கெட்டி.

சத். அரசே! நீர் துக்கப்படவேண்டிய நாள்களெல்லாம் தமிழ்ந்துவிட்டனவென்று நம்பும். என் தாயின் தலை பூமியில் விழுந்ததும் உலகமே பஸ்பமாகிவிடுமாகையால் நாமும் இறக்குங் காலம் வநததென்று கொள்ளும். எல்லோருமாக தேவதாஸனிடம் செல்வோம்.

ஹரி. எவ்வளவு திருட்டமான மனதை உடையவனுயிருந்தபோதிலும் சத்தியத்தை எவ்வளவுதான் நம்பியிருந்தபோதிலும் இதை என்னல் பொருக்கமுடியவில்லையே.

கன்னடிகள்—ஸகானு—ரூபகம்.

விதியோ முனி மதியோ கால கெதியோ யிது பரனே
மதி சந்திரவதியை வெட்ட வந்தவினை யரனே.
சொல்லாள் கள்ள மில்லாள் பொய்மையில்லாளிவள் பரனே
கல்லாகிலுங் கேட்டா லிவள் சொல்லுக்கழு மரனே.
பிள்ளை மாண்டுங் கள்ளிபெண பெண்டீர்தனை பரனே
உள்ளமோங்கி வெட்டலானே லுன்றன் செயலரனே.

சங். ஆர்ய! வீண் துக்கம் வேண்டாம். பொழுது விடியுமுன் வெட்டவேண்டுமென்று அரசன் உத்தரவிட்டிருக்கின்றார். சீக்கிரமாக காரியத்தை முடியுங்கள்.

ஹரி. ஐயோ! என் மனம் ஒப்பினாலும் என் கை நடுங்குகின்றதே. பரமேசா! பார்வதி நேசா! பூத நேசா! இப்படியும் உன் ஊழியன் தலையில் எழுத நீ பார்த்திருந்தாயா! ஐயோ! ஐயோ! எதையென்று நான் நினைத்தழுவது? முன் அனுபவித்த ஸுகங்களெல்லாம் இல்லையேயென்று அழுவதா? எனக்கிதுவரையிலுண்டான ஒவ்வொரு கஷ்டத்தையும் சொல்லியழுவதா? மகனிறந்ததற்கழுவதா? மனைவி இறக்கப்போகின்றதற்கழுவதா? (காலகண்டன் வருகின்றான்).

கால. அடே ஹரிச்சந்திரா! நீதான் யோக்கியன். ஒனக்கு ஏராளமா பொன்னெ கொடுத்தெனே. நான்தா புத்திசாலி. பொன்னெ வாங்கிண்டேட. பிள்ளெ ஒருபக்க போனன். இவளெ கொன்னூட போறே.

ஹரி. அதைப்பற்றி அரசனிடம் வேண்டுமானால் முறையிட்டுக்கொள்ளலாம். தாங்களறிந்திருக்கலாம் இவள் கொலைக்காரியா அல்லவா என்பதை.

கால. இவொ சேசிருப்பான்றதுலெ ஸந்தேகமென்னமோயில்லே. ஆனா எம் பொன்னுக்கு இன்னா வழி சொல்றே?

ஹரி. நானென்ன சொல்வது? அரசன் கட்டளைப்படி நான் நடக்கின்றேன்.

கால. சத்தம் சத்தம்னு அழறெயே இது தர்மந்தான்?

ஹரி. ஆம்.

கால. அடே! இதோ பாரு. நான் ஒனுமானு ராஜா கிட்ட நீ கொன்னு பொதெச்சுட்டேனு சொல்லீட்றே அவளெ உட்டுடு.

ஹரி. ப்ராஹ்மணோத்தமா! இம்மாதிரியான புத்தி எனக்குச் சொல்வதற்காக நீர் வந்திருந்தால் வந்த வழியை நோக்கிச் செல்லலாம்.

கால. ஒனக்கு புத்திசொல்ற வழி எனக்குத் தெரியு. நீ எப்படிதா அவளெ கொல்றெயோ நா பாத்துக்கறே. (போகின்றான்).

ஹரி. கண்ணே சந்திரமதி! நீ வழக்கமாக துதிக்கும் தெய்வத்தை எண்ணி கிழக்கு பார்த்து உட்கார்.

சந் (கிழக்கு முகமாக உட்கார்ந்து)

கற்புடைய மாதர்கட்குத் தாணிவேந்தே
  கணவரலால் வேறு தெய்வங் கருதவுண்டோ
விற்பனமும் புத்திரனுங் கணவரின்றி
  வேறுவித மடைவதற்கு விதியுமுண்டோ
சொற்பமல்ல கணவறென்று லென்றன்கோவே
  ஜோதியெனும் பரப்பிரம சொரூபமாகும்
நத்தினவர் பதி பெறுவார் கணவர் பாதம்
  நாடாதார் நரகடைவர் நாளுந்தேவே.

ஹரி. உலகத்திலுள்ள உயிர்களுக்கெல்லாம் பசுபதியே ஒப்பற்ற முதற்கடவுளானல், அளவற்ற சிறப்புடைய அக்கடவுள் சொல்லே வேதமானல், அவ்வேதத்திலே விளங்கச் சொல்லப்பட்ட தர்மங்களுக்குள் சத்யமே ஒப்பில்லாத

தானல், அதை நான் விலகவிடாமல் வ்ரதமாகக்கொண்டதுண் மையானல், அந்த ச்ரயத்தை மேற்கொண்ட என்னை நீங்காத நிறைகுணம் இவளுக்கிருப்பது உண்மையானல் இவள் சாவா மையைப் பெறக்கடவாள். (வாளை உயர்த்துக்கும் சமயத்தில் விஸ்வாமித்ரன் 'ஹரிச்சந்திரா' என்று கூப்பிட்டுக்கொண்டு வருகின்றார்). யாரது ஹரிச்சந்திரனை யழைத்தது? முனி புங்கவ! சத்தியத்தை நிலைநிறுத்தி உலகை அழிக்க ஹரிச் சந்திரன் ஆயுதத்தை எடுத்து நிற்க எதற்காக தடைசெய் கின்றீர்?

விச். அடா பாவி! என்ன கோரமான காரியத்தை மேற்கொண்டாய்? இவள் குணம் தெரிந்த நீயா இவளைக் கொல்வது?

ஹரி. ந்யாயாந்யாயத்தை விசாரிக்காமல் மேல் கொண்ட தொழிலில் ஏற்பட்ட வேலைகளையெல்லாம் சாஸ் திர முறைப்படி நான் செய்யவேண்டியனல்லவா?

விச். இருந்தாலென்ன? நீ இதைச் செய்வதால் ஹரிச் சந்திரன் சத்தியவானல்லவென்று யாரும் சொல்லப்போகின் றதில்லை.

ஹரி.

புலையனும் விரும்பாத விப்புன்புலால் யாக்கை
நிலையெனு மருண்டுபிரினு நெடிது சிறந்த
தலைமைசேர் தரும சத்யம் பிறழ்வது சரியோம்
கலையுணர்ந்த நீ பெமக்கிது கழறுவதழகோ.

விச். வீணாய் அவளையும் கொன்று கஷ்டப்படாதே. நான் மேலொன்று சொல்கின்றேன் அப்படியாவது செய்.

ஹரி. என்னவென்று தெரிவித்தால் பதில் சொல்கின் றேன்.

விச். காசிராஜன் மகனைப் பிழைப்பித்து தேவதாஸனை யும் பிழைப்பித்து உங்களை அடிமையினின்றும் மீட்டி ராஜ் [illegible]ம் கொடுக்கிறேன். நான் சொல்வதுபோல் செய் வாயாகில்.

ஹரி என்ன செய்யவேண்டுமென்று தெரிவித்தா லன்றி [illegible]தில்சொல்ல முடியாது.

விச. என் மக்களாகிய பாணப்பெண்களை விவாகமா வது செய்துகொள் அல்லது.

ஹரி. நிறுத்தும்.

இம்மை யம்மை வீடெண மறை புலங்கொள் வியம்பும்
மும்மை யுத்தரு முறையுடைத் தெனுநிலை மூரணி
எம்மை யாழ்வாயிற்றடைந்த மீட்டு மிழ்கவா வெரிவாய்
வெம்மை கூர் [illegible]குய்க்கினு மெய்ம்மையை விடேமால்.

பதியிழந்தோம், பாலனையிழந்தோம், படைத்த நிதியிழந் தோம், இனி யெங்களுக்குள்ளதென்று நினைக்கக்கூடிய கதி யிழக்கினும் சொன்னசொல்லை யிழக்கமாட்டோம்.

விச். அப்படியாயின் உன்னிஷ்டம் (போகின்றார்).

ஹரி. நான் மனதை தைரியம் செய்துகொண்டு வேலை யை ஆரம்பம் செய்யுங்கால் என்னைத் தடுத்துவிட்டுப் போய் விட்டார். மறுபடியும் மனதை எப்படி தைரியப்படுத்திக் கொள்வதோ தெரியவில்லை. பரமேச்வரா!

சந். [illegible]பிரபே! மறுபடியும் இப்படியெல்லாம் தாங்கள் புலம்பலாகுமோ?

ஹரி. கண்மணி சந்திரமதி! சத்தியத்தைக் கைப் பிடித்த நாம் இவ்வளவு கஷ்டப்பட்டும் இதையெல்லாம் வேடிக்கையாக பார்த்திருக்கின்ற பரமசிவன் நம்மிடத்தில் கருணைகூர்ந்து உலகத்தில் சத்தியத்தை நிலைநிறுத்த

வருவரோ வாரரோ.

சந். ஆர்ய! பொழுதுவிடியும் ஸமயம் நெருங்குகின்றது. காலதாமதம் செய்தால் சரியன்று. உலகோர் சத்யமென்றால் என்ன? அதனால் கிட்டும் பலன்கள் என் பதை அறிவதற்கு மார்க்கத்தை தேடுங்கள். (சந்திரமதி கைகுவிக்க ஹரிச்சந்திரன் வாளை தூக்கிக்கொண்டு)

ஹரி.

புவன ... வுயிர்கட் கெல்லா மதிபதியே
பசுப...பின் புகழே சத்தியம்
தவம்பெ...முனிவர் தூகி பிரணவத்தி
னுடை...ப் பொருளே சத்தியம்
அவநிதனிற் பிசகில்லா வாண்மைகொண்டே
னிதமாகிலது மேற் சத்தியம்
பவமறியா தவர் கற்கும் சத்தியமே
வெட்டுகின்றேன் பண்பாய்த் தானே.

(வெட்டுகின்றான்). கத்தி ஒரு மாலை ரூபமாக சந்திரமதி கழுத்தில் விழுகின்றது. அதே தருணத்தில் 'ஹா' என்ற ஒரு பேரிரைச்சல் கேட்க மும்மூர்த்திகளும் ஸுப்ரமணியரும் வசிஷ்டன், விச்வாமித்திரன், நாரதன், சுக்ரன், அக்னி, யமன் இவர்களும் வருகின்றார்கள். ஹரிச்சந்திரனும் சந்திரமதியும் அவர்கள் முன்பு முழந்தாளிடுகிறார்கள்.

ஹரி., சந்.

சீர்கொண்ட செழுங் கமலத் திசைமுகனு
நெடுமாலுஞ் சிவனு மென்னப்
பேர்கொண்ட மூவுருவு மீருருவு
மோருருவாய்ப் பிறங்குந் தொல்லை
நீர்கொண்ட வண்டத்தின் தாவரத்துஞ்
சங்கமத்து நிறைந்து நின்றோன்
ரூர்கொண்ட தாளிணை கடமைக்கொண்ட
வன்பினொடு தலைமேற் கொள்வோம்.

மும்மூர்த்திகளும் மற்றவர்களும்.
பானுர் சகோதரனுங் குருமொழியைக் கடவாத
தம்பண்பனுகுக்
மான வாக்குள்ளான் பொய் பேசான் நிலைதவருன்
திகழ் பெருத்து
வரமுடைய மனைவியுளான் றனக்குகந்த வமைச்சனையும்
நல... ...த்தோன் கண்டோம்
... வாழு முலகில் வெகு கீர்த்தியுளோன் ... செல்வ
னடைந்... ...ன் நீயே.

சந். பராபரமே! என் பர்த்தாவின் ...கத்தால் வெட்டுண்டு இறப்பதற்கு மாத்திரம்தான் நான் அதிர்ஷ்டம் செய்திருக்கிறேனென்று எண்ணியிருந்தேன். இறப்பதற்குமுன் இச்... ...யுங் காணவும் நேர்ந்தது. ... பாக்யசாலி உலகில் ஒருவரும் இல்லை.

ஹரி. ...பொழுது விடியப்போகின்றது. சந்திரமதி! கைகூப்பிநில். இதோ இன்னெரு வாளாயுதம் இருக்கின்றது.

விச். ஹரிச்சந்திரா! நீ அவளைக் கொல்லவேண்டாம். காசிராஜன் மகன் உயிருடன் எழுந்துவிட்டான். அதோபார் காசிராஜன் மகனுடன் வருகின்றான். (காசிராஜனும் அவன் மகனும் வருகின்றார்கள்).

காசிராஜன். ஹரிச்சந்திரா! என்னை மன்னிக்கவேண்டும். நீங்கள் யாவர் என்பதை இப்பொழுதுதான் அறிந்தேன். குற்றமற்ற சந்திரமதியை வெட்டும்படி ஆக்ஞாபித்ததற்காக என்னை மன்னிப்பாய். என் மகனும் உயிரைப் பெற்றுவிட்டான். இனி நீ அவளை வெட்டவேண்டியதில்லை.

ஹரி. ஸ்வாமின்! தங்கள் மீதில் ஒரு குற்றமுமில்லை. எல்லாம் எங்கள் விதி. ஆனால் வீரவாகு தன் கட்டளையை மீட்டுக்கொண்டாலன்றி நான் இவளைச் சிரச்சேதம் செய்ய வேண்டியதுதான்.

எமன். குழந்தாய்! இதோ உன் முறிச்சீட்டு எடுத்துக் கொள். புலையனுக் கடிமைப்பட்டோமென்ற வருத்தத்தை விட்டுவிடு. எமனன்றால் நான்தான் வீரவாகுவாக உலகில் அவதரித்தேன். (ஹரிச்சந்திரன் முறிச்சீட்டைப் பெற்றுக் கொள்கிறான்).

அக்னி. சந்திரமதி! இதோ உன் முறிச்சீட்டு ... கண்டனாய் வந்து உன்னை வருத்திய பாவி நான்தான். ... கின்றான்).

ஹரி. ... நாங்கள் அடிமையினின்றும் நீங்கி என்ன ப... தேவதாஸன் இறந்தபின்பு எங்களுக்கு ஏது கிடைத்... என்ன?

ஸுப். ... உன் மகனை அறவத்தாவில் ... பாம்புருவாக வந்து அவனைக் கடித்தவன் நான்தான். ... தாஸா!

தேவ. (நித்திரையிலிருந்து எழுந்திருப்பவன்போல்) ஐயோ! நான் சேர்த்த தர்ப்பம் எங்கே? நண்பர்காள்!

சந். கண்ணே தேவதாஸா!

தேவ. ஹா! இதென்ன காக்ஷி! (முழந்தாளிட்டு)

ஆதியா யண்டபகி ரண்டத்து
மப்புறத்து மடங்கா திற்ற
நீதியாய் மணியொளியும் பாற்சுவையு
மெனவளைத்து நிறைந்து நின்றும்
பாதியா யென்றுகி யருவாகி
யுருவாகிப் பாத்து மல்குஞ்
... முடிசூட்டுந் தனதுதிரு
வடிசூட்டத் தணிந்த ... யோன்.

சுக். ஹரிச்சந்திரா! நீங்களெல்லோரும் என்னை மன்னிக்கவேண்டும். நக்ஷத்திரேசனாக வந்து நான் உங்களை எவ்வளவோ கஷ்டப்படுத்தினேன்.

2-4-899

[illegible] எல்லோர்க்கும் தெரியும். நீயும் அதை [illegible] கொண்டாயென்பதை நினைக்க எனக்கு ஸந்தோஷமாயிருக்கின்றது. நான் உன்னை கஷ்டப்படுத்தியதற்கு ப்ரதியாக என் தவப்பலனில் பாதியை உனக்கிதோ கொடுத்தேன். என்னுடன் வந்து உன் ராஜ்யத்தையும் பெற்றுக்கொள்.

ஹரி. முனிபுங்கவ! அந்த ஒரு விஷயத்தில் என்னை மன்னிக்கவேண்டும்.

வசி. ஹரிசசந்திரா! உனக்கு யாதொரு ஸந்தேகமும் வேண்டியதில்லை. அதை நீ [illegible] முறை இந்த ஸந்தர்ப்பத்தில் பெற்றுக்கொள்வதால் உன் சத்தியத்திற்கு யாதொரு பங்கமும் நேரிடாது. அந்த தவச்ரேஷ்டருடைய அனுக்ரஹத்தால் உனக்கு என்றுமழியாப் புகழ் கிடைத்தது. அப்படியிருக்க அவர் உன் குருவென்று நம்பி அவர் சொல்வது போல் அரசைப் பெற்றுக்கொள்.

...ழுங்கமல சாலைபுக் கே...

முற்றிற்று

224899

The Palamcottah Printing Press—1918